பக்கங்கள்: இருபது

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஐப்பசி 18 புதன்கிழமை (04.11.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 343

# சரத் பொன்சேகா மீதான விசாரணைகள் அமெரிக்காவில் இன்று நடைபெற ஏற்பாடு

## முறியடிக்கும் முழு முயற்சியில் இலங்கை அரசு



கொழும்பு, நவம்பர் 04

இலங்கைப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் வன்னியில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகள் தொடர்பாக, குறிப்பாக இறுதிக்கட்ட யுத்தகால நிகழ்வுகள் பற்றி தற்போது வாஷிங்ரனில் தங்கியுள்ள முன்னாள் இராணுவத் தளபதியும், தற்போதைய முப்படைகளின் தலைமை அதிகாரியுமான ஜெனரல் சரத் பொன்சேகாவிடம் இன்று அமெரிக்க அதிகாரிகள் விசாரணை நடத்துவதற்கான உரிய ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

இந்த விசாரணைகளை நிறுத்துவதற்கு அல்லது அதனை முறியடிப்பதற்கு இலங்கை அரசு இராஜதந்திர ரீதியில் பகீரதப் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றது. ஆனால், அமெரிக்க அரசின் முக்கியஸ்தர்களோ இந்த விடயத்தில் எதையும் தெளிவாகக் கூறாமல் மௌனம் காத்து வருகின்றனர்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## கல்விச் சுடர்

### உள்ளே

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான விஞ்ஞானம் - II தமிழ் மொழியும் இலக்கியமும் III பாடங்களுக்கான மாதிரி வினாத்தாள்கள்.

### நாளை

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான கணிதம்-I,II பாடத்துக்கான மாதிரி வினாத்தாள்கள்.

## கிறீன் கார்ட்டை புதுப்பிப்பதற்கான விசாரணையாம்

புதுடில்லி, நவ.4

அமெரிக்க உள்நாட்டு பாதுகாப்பு திணைக்களம் சரத் பொன்சேகாவின் வதிவிட அனுமதியை (கிறீன் கார்ட்டை) புதுப்பிப்பது சம்பந்தமாக விசாரிப்பதற்காகவே இன்று சமுகமளிக்குமாறு கேட்டிருப்பதாக இலங்கை 'புதிய கதை' ஒன்றை அவிழ்த்து

(20ஆம் பக்கம் பார்க்க)

## சரத் பொன்சேகாவிடம் விசாரணை ஏன்? விவரம் கேட்கிறார் எதிர்க்கட்சித் தலைவர்

கொழும்பு, நவ.4

கூட்டுப்படைகளின் தலைமையதிகாரி சரத் பொன்சேகாவிடம் அமெரிக்க அரசு விசாரணை நடத்தவிருப்பதாக வெளிவந்துள்ள தகவல்கள் குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள உதவிச் செயலாளர் ரெபோட் ஓ பிளேக்கிடம் தகவல்களைக் கேட்டறிந்துள்ளார்.

முன்னாள் இராணுவத் தளபதியும் கூட்டுப்படைகளின் தலைமை அதிகாரியுமான சரத் பொன்சேகாவிற்கு, அமெரிக்காவிற்குள் செல்லும் அங்கிருந்து வெளியேறும் உரிமை மாத்திரமல்லாது சுதந்திரமும் இருக்கவேண்டும் என ரணில் விக்கிரமசிங்க

(20ஆம் பக்கம் பார்க்க)

## 3,627 பேர் நேற்று யாழ். வந்து சேர்ந்தனர்

யாழ்ப்பாணம், நவ.4

வவுனியாவில் இருந்து நேற்றுவரை 15,555 குடும்பங்களைச் சேர்ந்த 50,669 பேர் யாழ்ப்பாணம் அழைத்து வரப்பட்டு மீள்குடியமர்வுக்காக அவர்களின் உறவினர், நண்பர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

யாழ். அரச அதிபர் கே.கணேஷ் இத்தகவலை நேற்றிரவு தெரிவித்தார்.

நல்லூர், யாழ்ப்பாணம்,உடுவில், சாவ

(20ஆம் பக்கம் பார்க்க)

## சரத் பொன்சேகாவை அமெரிக்காவில் சிறைப்படுத்த அரசாங்கம் சதி செய்கிறது

### நாடாளுமன்றில் ஐ.தே.கவின் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, நவ.4

ஜெனரல் சரத் பொன்சேகா தேர்தலில் போட்டியிடுவார் என்று அஞ்சி அவரை அமெரிக்காவில் சிறைப்படுத்த இந்த அரசு சதி செய்கிறது என்று ஐ.தே.கட்சி எம்.பியான ஜோன் அமரதுங்க நாடாளுமன்றில் கூறினார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற 2010 ஆம் ஆண்டுக்கான இடைக்கால கணக்

(20ஆம் பக்கம் பார்க்க)

## 'ஐக்கிய தேசிய முன்னணி' என்ற பெயரில் எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பு உதயம்

கொழும்பு, நவ.4

'ஐக்கிய தேசிய முன்னணி' என்ற பெயரில் எதிர்க்கட்சிகளின் புதிய கூட்டமைப்பு நேற்று உதயமாகியது. ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜனநாயக மக்கள் முன்னணி, ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி மக்கள் பிரிவு ஆகிய கட்சிகள் உட்பட பல்வேறு கட்சிகளும் அமைப்புகளும் இணைந்து நேற்று புதிய அணியை உருவாக்கியிருக்கின்றன.

இந்தப் புதிய அணியில் இடம்பெற்றுள்ள அணிகளுக்கிடையே நேற்று நாடாளுமன்றத்தில் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது.

இதன் அடிப்படையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தல் என்பவற்றில் இந்தக்கூட்டணி ஆளும் தரப்

(20ஆம் பக்கம் பார்க்க)

## இன்றும் நாளையும் இடியுடன் கூடிய மழை

யாழ்ப்பாணம், நவ.4

குடாநாட்டில் இன்றும் நாளையும் அவ்வப்போது இடியுடன் கூடிய மழை பெய்யும் காலநிலை நீடிக்கும் என்று வானிலை

(20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அகதிகள் ஆஸி.சென்ற மற்றொரு படகு மாயமானதா?

கொழும்பு, நவ. 04

இலங்கை அகதிகளை ஏற்றிச் சென்ற மற்றுமொரு படகு அவுஸ்திரேலியாவின் கொக்கோஸ் தீவுக்கு அருகில் காணாமல் போயுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

59 பேருடன் சென்ற இந்தப் படகுடன்

(20ஆம் பக்கம் பார்க்க)

### 'பொங்கு தமிழ்' உரை தொடர்பான வழக்கில்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நான்கு எம்.பிக்களும் விடுவிப்பு

கொழும்பு, நவ.04

ஐரோப்பிய நாடுகளிலும் ஆஸ்திரேலியாவிலும் 2006 ஆம் ஆண்டில் இடம்பெற்ற 'பொங்கு தமிழ்' நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு இலங்கை அரசுக்கும் இராணுவத்தினருக்கும் அவதூறை ஏற்படுத்தும் விதத்திலும், நாட்டுப் பிரிவினையைத் தூண்டும் வகையிலும் உரையாற்றினார்கள் எனத் தெரிவித்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட வழக்கு விசாரணைகளில் இருந்து அந்த நான்கு எம்.பிக்களும் விடுவிக்கப்பட்டனர்.

யாழ். மாவட்ட எம்.பிக்களான செல்வராஜா கஜேந்திரன், கே.சிவாஜிலிங்கம், மட்டக்களப்பு மாவட்ட எம்.பிக்களான எஸ்.ஜெயானந்தமூர்த்தி, பி.அரியநேத்திரன்

(20ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் பணிபுரிந்த அரச ஊழியர்கள் உடனடியாகப் பணிக்குத் திரும்ப வேண்டும்

### இல்லையேல் இப்போது வழங்கப்படும் சம்பளம் நிறுத்தப்படும்

யாழ்ப்பாணம்,நவ.4

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு உட்பட மீளக்குடியேற்றம் மேற்கொள்ளப்பட்டு வரும் பிரதேசங்களில் கடமையாற்றும் அரச ஊழியர்கள் உடனடியாகத் தமது கடமைகளுக்குச் சமுகமளிக்க வேண்டுமென வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி அறிவுறுத்தியுள்ளார்.

இடம்பெயர்தோர் நலன்புரிக் கிராமங்களில் தங்கவைக்கப்பட்டிருப்போர் மற்றும் அதற்கு முன்னர் இடம்பெயர்ந்து வாழ்ந்து

(20ஆம் பக்கம் பார்க்க)

## கவிழ்ந்த படகில் இருந்த இலங்கையரை தேடும் நடவடிக்கைகள் தொடர்கின்றன

கொழும்பு, நவ. 04

இந்து சமுத்திரத்தில் பயணித்துக் கொண்டிருந்தவேளை, கவிழ்ந்த படகைச் சேர்ந்தவர்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் நடவடிக்கைகளை ஆஸ்திரேலிய கடற்படையினர் நேற்று பல மணி நேரமாக மேற்கொண்டனர்.

கடலில் மூழ்கியவர்களை தேடும் பணியில் தமது கடற்படையும், வர்த்தகப் படகுகளும் தீவிரமாக ஈடுபட்டன என்று அவுஸ்திரேலிய உள்துறை அமைச்சர் பிரெண்டன் ஓ கோனர் தெரிவித்துள்ளார்.

''கடலில் உள்ளவர்களை மீட்பதிலேயே எமது கவனம் உள்ளது. இதற்காக நாம் ஏழு விமானங்களைப் பயன்படுத்துகிறோம்.

(20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

கணனிசார் பதவி வெற்றிடங்கள்

மாத நிறைவுக்குள் கல்வித்துறையில் பிரசுரம் பணிநிலைகளுக்குக் கோடிக்கொண்டு தகுதியுடைய வர்கள் விண்ணப்பங்களை அனுப்பலாம்

உதயன் இணையத்தள பராமரிப்பாளர்
உடனுக்குடன் செய்திகளை புதுப்பிக்கும் (Update) வகையில் பதிவேற்றம் (Upload) செய்யத்தேவையான ஆற்றலும் அனுபவமும் உள்ளவர்கள்

பக்கவடிவமைப்பாளர்கள்
தினசரி பதிப்புப் பணிகளுக்கான Pagemaking, Designing Works குரிய அனுபவம் Adobe Photoshop, Pagemaker மற்றும் Corel Draw அறிவுடையவர்கள்

சம்பளம் தேர்வின் பின் தீர்மானிக்கப்படும்

★பகுதிநேரமும் வேலைசெய்யலாம்.

கொழும்பில் பணியாற்ற விரும்பினால் இலவசமாகத் தங்குமிட வசதி ஏற்பாடு செய்யப்படும்.

கல்வித் தராதரம், திறமை, அனுபவச் சான்றுகளுடன் சிபார்சு செய்யக்கூடிய பிரமுகர்களின் விவரங்களுடன் இன்று பிற்பகல் 2 மணி முதல் 6 மணிவரை நேரில்வரவும்.

ஆளணி முகாமையாளர், உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



### ஊர்காவற்துறை ப. நோ. கூ. சங்கம்

எமது சங்க வருடாந்த எண்பார்வை 30.04.2008இற் குரியது நடைபெற்றுக்கொண்டிருப்பதால் கிராமிய வங்கி யில் கணக்கு வைத்துள்ள சகல வாடிக்கையாளரும் தங்கள் க/கு புத்தகங்களுடன் காரியாலய நேரத்தில் சமுகம ளித்து 30.04.2008 இல் தங்கள் மீதிகளை உறுதிப்படுத்திக் கொள் ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பொது முகாமையாளர் — தலைவர்
03.11.2009 — 021 222 6160


## மரண அறிவித்தல்

### செல்வி நன்னித்தம்பி பாக்கியம்

(பாக்கியம் ரீச்சர் - ஓய்வுபெற்ற ஆசிரியர்)



கோப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும் சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலியை வசிப்பி டமாகவும் கொண்ட நன்னித்தம்பி பாக்கியம் நேற்று (03.11.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நன் னித்தம்பி - இலட்சுமி தம்பதியினரின் மக ளும் காலஞ்சென்றவர்களான இராசம்மா, அழகம்மா, சேனாதி ராசா ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.11.2009) புதன்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் பி.ப. ஒரு மணிக்கு தகனக்கிரியைக்காக கிந்துசிட்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி. (A-1) — தகவல்: பெறாமக்கள்.

### பொன்னுச்சாமி கணேசபிள்ளை

(வியாபாரி, மருதனார்மடம் சந்தை)



இணுவில், மஞ்சத்தடியைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுச்சாமி கணேசபிள்ளை 02.11.2009 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பாபிள்ளை பொன்னுச்சாமி மற்றும் செல்லையா பர மேஸ்வரியின் அன்பு மகனும் கைலாச பிள்ளை -சிவக்கொழுந்து ஆகியோரின் மருமகனும் கமலாம்பிகையின் அன்புக் கணவரும் கலைவாணி, கலைச்செல்வன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆனந்தராஜா (கனடா), இராஜ கோபால்(கனடா), மனோரஞ்சிதாதேவி (கொழும்பு), சர்வா னந்தம் (உரிமையாளர், சிறிக்குமரன் ஹாட்வெயர்ஸ், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்), யோகானந்தன் (கனடா), மல்லிகா தேவி (கொழும்பு), ஞானசேகரம் (ஜேர்மனி), மகேந்திரன் (கனடா), சுரேஸ்குமார் (கனடா), காலஞ்சென்ற கீர்த்திரெத் தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற பஞ்சாட்சரநாதன் மற்றும் சுமதியின் மாமனாரும் கௌசிகன், காரணன், கஜசரவணன், கஸ்தூரி, கௌதமன், கயல்வண் ணன், கஜபன், கௌசிகா ஆகியோரின் அன்புப் பேரனுமா வார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.11.2009) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இணுவில் காரைக்கால் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சைவப்பாடசாலை ஒழுங்கை, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். (90552) — தகவல்: குடும்பத்தினர்.

## ஜீ.சீ.ஈ (சா) மாணவர்களுக்கான மாகாண மட்டப்பரீட்சைகள்

யாழ்ப்பாணம், நவ. 4

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை களில் இருந்து க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர்க ளுக்கான மாகாண மட்டப் பரீட்சைகள் இன்று தொடக்கம் நடைபெறும்.

பாடசாலை அதிபர்கள் தத்தமது தலை மைப் பாடசாலையில் வினாத்தாள்களைப் பெற்றுக் கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித் துள்ளார். (1-207)

## சுகாதாரத் திணைக்களத்தில் நாளை நடமாடும் சேவை

குருநகர், நவ. 4

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் நாளை வியாழக்கிழமை ஊழியர் நடமாடும் சேவை நடைபெறவுள்ளது. யாழ். பிராந் திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக் டர் ஆ. கேதீஸ்வரன் இத்தகவலைத் தெரி வித்தார்.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகர் மாநாட்டு மண் டபத்தில் நாளை காலை 9 மணி தொடக் கம் நண்பகல் 12 மணி வரை இச் சேவை நடைபெறும்.

மாகாண மட்டத்தில் தீர்வு காணப்ப டாத நிலையில் உள்ள ஊழியர்களது பிரச்சனைகள் மட்டுமே இச் சேவையில் கவனத்தில் எடுக்கப்படும் எனவும் விதவை கள், அநாதைகள் ஓய்வூதிய அட்டைபெறு தல், காப்புறுதி கொடுப்பனவு தொடர் பான பிரச்சனைகள் கவனத்தில் எடுக்கப் படமாட்டாது எனவும் இச் சேவையில் தமது பிரச்சனைகள் தொடர்பாக வருகைதர உள்ளவர்கள் நிறுவனத் தலைவரது அனு மதிக்கடிதத்துடன் மட்டும் சமுகம் தரலாம் என அவர் அறிவித்துள்ளார். (1-51)

## சுகாதார சேவை பணிமனைக்கு இணையத்தளம் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ. 4

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திணைக்களத்திற்கென இணையத்தளம் நாளை வியாழக்கிழமை ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் இ. ரவீந்திரன் நாளை பிற்பகல் 2 மணிக்கு இணையத்தளத்தை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கிறார். (1)

## முகாமில் இருந்து வந்தவர் கிணற்றில் வீழ்ந்து மரணம்

யாழ்ப்பாணம், நவ. 4

வவுனியா நலன்புரி நிலையத்திலி ருந்து கடந்த வாரம் சொந்த இடம் திரும் பியவர் பற்றை மறைவில் இருந்த கிணற் றில் வீழ்ந்து மரணமானார்.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி கற்குழியில் இடம்பெற்றது. சொந்த வீடு குடியிருக்க முடியாத நிலையில் இருந்தாலும் உறவினர்கள் வீட்டில் இங்கில் லாததாலும் மனவிரக்தி ஏற்பட்டு கிணற்றில் வீழ்ந்திருக்கலாமென தெரிவிக்கப்படுகிறது.

அதே இடத்தைச் சேர்ந்த ரங்கசாமி சுரேந்திரராஜ் (வயது - 43) என்னும் இரண்டு பிள்ளைகளின் தந்தையே மரண மானவராவார்.

சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர். (1-207)


### இன்று முதல் விற்பனையில்

தரம் 1 முதல் 5 வரையான மாண வர்களுக்குரிய மூன்றாம் தவணைப் பரீட்சை வினாத்தாள்கள் யாழ்.நகரில் பிரபல புத்தகசாலைகளில் விற்பனையா கின்றன.

அஸ்ரன் வெளியீட்டுப்பிரிவு, நவாலி வீதி, ஆனைக்கோட்டை. 021 222 4031 (சி/562105)


## சாவகச்சேரி வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட மூன்று கட்டடங்கள் வெள்ளியன்று திறப்பு

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வளாகத்தில் நிர்மாணிக் கப்பட்டுள்ள மூன்று கட்டடங்கள் நாளை மறுதினம் வெள்ளிக் கிழமை காலை 9.30 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளன.

நிக்கொட் நிறுவனத்தினால் நிர்மாணிக்கப்பட்ட நிர்வாக அல குக்கட்டடம், அவுஸ்திரேலிய மருந்துவ உதவி நிறுவனத்தின ரால் நிர்மாணிக்கப்பட்ட பெண்கள் விடுதிக் கட்டடம், யாழ் செய லகத்தின் நிதி உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட (பி எஸ் டி ஜி) களஞ் சிய அறைக்கட்டடம் ஆகியன திறந்து வைக்கப்படவுள்ளன.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டகளஸ் தேவானந்தா வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ. ஏ. சந்திரசிறி ஆகியோர் முதன்மை விருந்தினர்களாகக் கலந்து கொண்டு புதிய கட்டடங்களை திறந்து வைக்கவுள்ளனர்.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்திய கலா நிதி ஆ. கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு மாகாண பிரதம செயலாளர் ஆ. சிவசுவாமி, நிக்கொட் நிறுவன திட்டப் பணிப்பாளர் ரி.லங்கநேசன், யாழ்.அரச அதிபர் க.கணேஷ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும்.

மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஏ. ஈ. ஞானசோதி, தென்மராட்சி பிரதேச செயலாளர் செ. ஸ்ரீநிவாசன், யாழ்.கட்டடத்திணைக்கள பிரதம பொறியியலாளர் க.குகநேசன் ஆகி யோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். (1-207-51)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அருள்சோதி ஜெகநாதன்



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் ஆலடி வைரவர் கோவிலடி, உயரப்புலம், ஆனைக்கோட் டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருள்சோதி ஜெகநாதன் நேற்று (03.11.2009) செவ்வாய்க்கிழமை இறைவனடி எய்திவிட்டார்.

அன்னார் இணுவில் மேற்கைச் சேர்ந்த காலஞ் சென்றவர்களான கந்தையா - வள்ளியம்மை தம்பதி யினரின் இளையமகளும் உயரப்புலம், ஆனைக் கோட்டையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - கனகம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் ஜெகநாதனின் (பிரபல வர்த்தகர்) அன்பு மனைவியும் அமரர் குலேந்திரா (முன்னாள் உதவி அரசாங்க அதிபர், கோப்பாய்) மற்றும் சத்தியமூர்த்தி (ஓய்வுபெற்ற தபாலதிபர், தெல்லிப்பழை), கமல வேணி, சுந்தரமூர்த்தி (ஆய்வுகூட தொழில்நுட்பவிய லாளர், அரசினர் வைத்தியசாலை, தைடி), சத்தியவேணி, விஜயவேணி, இரவீந்திரன் (கிராம சேவையாளர், இணுவில் மேற்கு), கலாவதி (ஆசிரியை, யாழ். இணுவில் இந்துக் கல்லூரி) சண்முகேந்திரன் (இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் கொக்குவில் மேற்கைச் சேர்ந்த சிவகுருநாதன், பாக்கியநாதன், அன்ன லக்ஷ்மி, இராஜேஸ்வரி, செல்வராணி, இன்பமலர், பவானி, கலாநிதி, சதாநிதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.11.2009) புதன் கிழமை நண்பகல் 12 மணியளவில் இணுவில் மேற்கிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் மேற்கு, இணுவில். (சி/562106) — தகவல்: பொ.ஜெகநாதன் (கணவர்).

### சுப்பிரமணியம் கந்தையா (கந்தசாமி)



காரைநகர், இராசாவின் தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் 403 D, கொறவப்பொத் தனை வீதி, இறம்பைக்குளம், வவுனியாவை வதிவிடமாகவும் சரஸ்வதி ஸ்ரோர்ஸ் உரி மையாளருமான சுப்பிரமணியம் கந்தையா (கந்தசாமி) நேற்று (03.11.2009) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிர மணியம் - சிதம்பரத்தின் மகனும் காலஞ் சென்றவர்களான வேலுப்பிள்ளை - சுந்தரம் தம்பதியினரின் மரு மகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் சற்குணதேவி (சுவிஸ்), சுப்பிரமணியம் (சுவிஸ்), சத்தியாசன் (சுவிஸ்), சத்தியலஷ்மி, கேதீஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் வரத ராஜா, கலைச்செல்வி, துஸ்யந்தி, சிவகுமார் (லிங்கம் கூல்பார்), யசோதநந்தினி ஆகியோரின் மாமனாரும் சிந்துஜா, கேதிஜன், விகிர்தன், யதுஷ், சுபே, சஜன், சுதனி ஆகியோரின் பாசமிகு பேர னும் காலஞ்சென்றவர்களான பாக்கியம், பரமேஸ்வரி, சங்கரப் பிள்ளை மற்றும் ஆறுமுகம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), காலஞ் சென்ற இந்திராணி மற்றும் தனலஷ்மி ஆகியோரின் சகோதர ரும் மதங்கசூளாமணி, சுந்தரலிங்கம், சுந்தரேஸ்வரன், காலஞ் சென்ற சுந்தரமூர்த்தி மற்றும் சிறிஸ்கந்தராசா, தனலஷ்சுமி, மனோகரன், கருணாகரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08.11.2009 ஞாயிற்றுக் கிழமை வவுனியாவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

403 D, சரஸ்வதி ஸ்ரோர்ஸ், கொறவப்பொத்தனை வீதி, இறம்பைக்குளம், வவுனியா. T.P.: 0212228730, 024 2223557 (90583) — தகவல்: ஆ.பிறேமச்சந்திரன் (பெறாமகன்).

## எங்கள் பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்



### திரு.மாணிக்கம் சண்முகநாதன் (யாழ்.புதிய உயர் கல்லூரி அதிபர்)

யாழ்.புதிய உயர் கல்லூரி அதிபர் திரு.மா.சண்முகநாதன் அவர்கள் 23.10.2009 அன்று அகில இலங்கை சமாதான நீதிவானாக மாவட்ட நீதிபதி உயர்திரு. வசந்தசேனன் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டமையும் மற்றும் சமாதான நீதிவான்களுக்கான மனித உரிமைகள் அமைப்பின் (Co-ordinator, Jaffna District for the Human Right Organization, and Justices of Peace) யாழ்.மாவட்ட இணைப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார் என்பதையிட்டு இவரை கௌரவித்துப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி கொள்கின்றோம்.

இயக்குநர், ஆசிரியர்கள், பொருளியற் கல்லூரி, யாழ்ப்பாணம் - இணுவில். BARATHY INSTITUTE சித்தன்கேணி.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## முள்வேலி அமைப்பதற்கு நெற்செய்கையாளர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், நவ. 4

தென்மராட்சி தெற்கு, மறவன்புலோ தனங்கிளப்பு பகுதியில் பயிரிடப்பட்ட நெற்பயிர்களை கட்டாக்காலிகள் அழித்து வருகின்றன.

நெற்பயிர்களைப் பாதுகாக்க முட்கம்பி வேலி அமைப்பதற்காக மறவன்புலோ கமக்காரர் அமைப்பைச் சேர்ந்த நெற்செய் கையாளர்கள் அனைவரையும் இன்று காலை 8 மணிக்கு மறவன்புலோ ஆலடிச் சந்திக்கு வருகை தருமாறு கமக்காரர் அமைப்பின் தலைவர் சி. திருஞானசம்பந்தர் அறிவித் துள்ளார். (1-207)

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# பேராசிரியர் சிவத்தம்பி எடுக்க வேண்டிய முடிவு

இலங்கையின் தமிழ் நாளிதழ்களிலும் இலங்கைத் தமிழர் சார்பான இணையத்தளங்களிலும், தமிழக நாளிதழ்கள் மற்றும் சஞ்சிகைகளிலும் பரபரப்பாக அண்மைக்காலத்தில் பேசப்பட்டார் பேராசிரியர் கா.சிவத்தம்பி. தமிழகத்தில் அடுத்த வருடத்தில் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி நடத்த உத்தேசித்திருக்கும் உலக செம்மொழி மாநாட்டில் அவர் கலந்துகொள்வாரா, கலந்துகொள்ள மாட்டாரா என்ற விடயத்தை ஒட்டி எதிரும், புதிருமான பல கருத்துகளும், விமர்சனங்களும், விளக்கங்களும், வியாக்கியானங்களும் ஊடகங்களில் வெளிவந்துகொண்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் தூக்கியடிக்குமாற் போல ஒன்றுக்கொன்று முரணான - அல்லது ஒன்றுக்கொன்று வேறுபட்ட சார்பு நிலையுடைய - தகவல்கள் பேராசிரியர் சிவத்தம்பி பக்கத்திலிருந்தே வெளியாகி, பலரையும் வியப்பில் ஆழ்த்தவும் தவறவில்லை.

இவற்றையெல்லாம் வாசித்தறிந்த தமிழ் கூறும் நல்லுலகின் பிரமுகர் ஒருவர் தமது தலையைப் பிய்த்தபடி 'குழப்பத்தின் - குளறுபடியின் - வடிவம்தானோ பேராசிரியர் சிவத்தம்பி?' - என்று பலரையும் பார்த்து வினாவும் அளவுக்கு நிலைமை சென்றுள்ளது.

இந்த விவகாரத்தை ஒட்டி அலட்டிக் கொள்ளாமல் - அதிக செய்திகளை ஒதுக்காமல் - 'உதயன்' நாளிதழ் அதீத மௌனம் காப்பது ஏன் என்ற கேள்வியும் கூட வாசகர்களிடமிருந்து வரத் தவறவில்லை. ஆகவே இந்த விடயத்தை ஒட்டி நமது கருத்தை முன்வைப்பது தவிர்க்க முடியாததாகின்றது.

பேராசிரியர் சிவத்தம்பி மூத்த தமிழ் அறிஞர். நமது இலங்கைத் தமிழர் சமூகம் உட்பட அனைத்துத் தரப்பினரதும் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரியவர். இலங்கை விவகாரங்களை ஒட்டி காலத்துக்குக் காலம் அவர் வெளியிட்ட சில கருத்துகள் அவ்வப்போது அரசியல் ரீதியான சர்ச்சைகளை ஏற்படுத்தி வந்திருந்தபோதிலும் கூட, இலங்கைத் தமிழர் தரப்பில் அரசியல் நிலைப்பாடுகளில் நேரெதிர் கருத்துக் கொண்ட அணிகள் கூட ஒரே சமயத்தில் மதிப்புக்குரிய மாண்புடையவராக அவரைக் கருதி கௌரவிக்கத் தவறவில்லை என்பது அவருக்குரிய சிறப்பு.

1980 களின் நடுப்பகுதியில் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா தலைமையிலான இலங்கை அரசின் படைகளுக்கும் அப்போது தமிழர்களின் உரிமைகளுக்காக ஆயுதம் ஏந்திப் போராடிய பல்வேறு தமிழர் இயக்கங்களுக்கும் இடையில் யுத்தநிறுத்தம் ஒன்று அறிவிக்கப்பட்டபோது, அதனைக் களத்தில் நேரடியாகக் கண்காணிக்கும் கண்காணிப்பாளர்களில் ஒருவராக நியமிக்கப்படும் அளவுக்கு மதிப்பாய்ந்த பிரமுகராக எல்லோராலும் கணிக்கப்பட்டவர் பேராசிரியர் சிவத்தம்பி என்பதும் மறக்கக்கூடியதல்ல.

இலங்கைத் தமிழர்கள் மத்தியில் தமிழ்த் துறையில் போற்றப்படும் ஒரு பேரறிஞரான பேராசிரியர் சிவத்தம்பிக்கு இந்த விடயங்களில் இரண்டு தளங்களிலே பொறுப்பும், கடமையும், கடப்பாடும் இருப்பதை நாம் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

ஒரு தளத்தில், தம்மைப் பொறுத்தவரை அவர் ஒரு கற்றறிந்த புலமையாளன். தனிப்பட்ட முறையில் அவருக்கென ஒரு வாழ்வு, சிந்தனை, குடும்பம், போக்கு என்பன உள்ளன. அவற்றின் அடிப்படையில் அவர் சிந்திப்பதும், முடிவெடுப்பதும், செயற்படுவதும் வேறு.

மற்றொரு தளத்திலே - அவர் இலங்கைத் தமிழ் மக்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது தெரிவு செய்யப்பட்ட ஒரு பிரதிநிதியாக இல்லாவிட்டாலும் கூட - கற்றறிந்த இலங்கைத் தமிழ் சமூகத்தின் உயிர்வாழும் கலங்கரை விளக்கமாக விளங்குவதன் மூலம், அந்தப் படித்த சமூகத்தின் ஒரு சுட்டியாகவும், குறியீடாகவும், பிரதிநிதியாகவும், இலக்கணமாகவும் கூட அவர் திகழ்கின்றார்.

அதாவது, பேராசிரியர் தன்னளவில் தனி மனிதனாக இருந்தாலும், அவர் தான் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இலங்கைத் தமிழ் அறிஞர் சமூகத்தின் ஒன்றுபட்ட குறியீடாகவும் விளங்குகின்றார் என்பது வெளிப்படை. இந்த இரண்டாவது தள நிலையில் வைத்து அவர் நோக்கப்படுகின்றமையால்தான் இந்த உலகத் தமிழ் மாநாட்டில் அவரின் பங்குபற்றுதல் என்பது சர்ச்சைக்குரியதாகின்றது.

இதற்கு முன்னர், தமிழக முதல்வராக ஜெயலலிதா இருந்த சமயம் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு சென்றிருந்த பேராசிரியர் சிவத்தம்பி, சென்னை விமான நிலையத்தில் வைத்தே திருப்பி அனுப்பப்பட்டு அகௌரவப்படுத்தப்பட்டார்.

ஆனால் அதன் பின்னர் பதவிக்கு வந்த தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி, முன்னைய நிகழ்வுக்கு பிராயச்சித்தம் செய்யும் வகையில் பேராசிரியர் சிவத்தம்பியை அழைத்துத் தமது மாநில அரசு மூலம் வி.க.விருது வழங்கி, இந்தியப் பணத்தில் ஒரு லட்சம் ரூபா வெகுமதியும் அளித்து கௌரவித்தார்.

ஜெயலலிதா செய்த அகௌரவமும், கலைஞர் கருணாநிதி தமக்கு முன்னர் செய்த கௌரவம் எனப் பேராசிரியர் சிவத்தம்பி கருதும் வி.க.விருதும், இப்போது அவர் நடத்த உத்தேசித்துள்ள உலக செம்மொழி மாநாட்டில் தமக்கு வழங்க அவர் முன்வந்துள்ள உயரிய இடமும், தனிப்பட்ட முறையில் பேராசிரியர் சிவத்தம்பி என்ற தனி மனிதனுக்கு - அறிஞனுக்கு - உரியவையா ? அல்லது இலங்கைத் தமிழினத்தின் அறிவுசார் சமூகத்தின் ஒட்டுமொத்தக் குறியீடாக விளங்கும் பேராசிரியர் சிவத்தம்பி என்ற தகைமையாளனுக்கு வழங்கப்படுபவையா? - இதைத் தீர்மானிக்க வேண்டியவர் பேராசிரியர் சிவத்தம்பிதான். வேறெவரும் அல்லர்.

இலங்கைத் தமிழர்களின் ஒட்டுமொத்த கற்றறிந்த சமூகத்தின் பிரதிநிதியாக அவர் தம்மைக் கருதுவாராயின், தற்போதைய கள நிலைமை விடயங்களில் தமது சமூகத்தின் கருத்து நிலைப்பாட்டை உள்வாங்கி, அதனடிப்படையில் இந்த மாநாட்டைப் புறக்கணிக்கும் தீர்மானத்துக்கு அவர் தாமாகவே வருவார்; வரவேண்டும்.

அப்படியல்லாமல், தம்மைத் தனிப்பட்ட மனிதனாகவும், தமக்கான அழைப்பு தமது அறிவுத் தகைமைக்கே உரிய விசேட விவகாரமே என்றும் அவர் கருதுவாரானால், அதன் அடிப்படையில் அந்த மாநாட்டிலும் அதையொட்டிய செயற்பாடுகளிலும் முழு அளவில் பங்குபற்றக்கூட அவர் தீர்மானிக்கலாம்.

அப்படித் தம்மைத் தனிப்பட்ட மனிதனாகக் கருதி, இவ்விடயத்தில் அதனடிப்படையில் ஒரு தீர்மானத்தை அவர் எடுப்பாராயின், இலங்கைத் தமிழர்கள் சமூகத்தின் ஒட்டுமொத்த நிலைப்பாட்டின் பின்புலத்திலிருந்து நாம் எப்படி அதைக் குறை கூற முடியும்? - அது அவரது தனிப்பட்ட விவகாரம் என்று கருதிப் பார்த்திருப்பதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்?

எனவே, தாம் தனி மனிதரா அல்லது மூத்த பேறறிஞர் என்ற வகையில், கற்றறிந்த இலங்கைத் தமிழர் சமூகத்தின் கட்டமைப்பைப் பிரதிபலிக்கும் ஒரு சின்னமா என்பதை அவர்தான் தீர்மானித்து அதன் அடிப்படையில் முடிவுசெய்ய வேண்டும்.

# விமானம் அல்லது கப்பல் மூலம் கொழும்பில் இருந்து வருபவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள பயணக் கட்டுப்பாட்டை உடன் நீக்குங்கள்

## அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் ஜனாதிபதிக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், நவ.4

கொழும்பில் இருந்து விமானம் மூலம் அல்லது கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு வருபவர்கள் மீண்டும் கொழும்புக்குச் செல்லும் போது கப்பல் அல்லது விமானம் மூலமே பயணிக்க வேண்டும் என்ற நடைமுறை கட்டாயமாக்கப்பட்டுள்ளமை பொதுமக்களுக்குப் பெரும் சிரமங்களை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது. விமானப் போக்குவரத்து முன் அறிவித்தல் இன்றி ரத்துச் செய்யப்படுகின்றமையால் பயணிகள் தவிப்புக்குள்ளான சகல சந்தர்ப்பங்களையும் சுட்டிக்காட்ட முடியும். எனவே இந்தக் கட்டுப்பாட்டை உடனடியாக நீக்குங்கள்.

இவ்வாறு தெரிவித்து யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் தலைவர் சி.வி.கந்தையா சிவஞானம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

ஏ-9 பாதை திறக்கப்பட்டுள்ள நிலையில், பாதுகாப்பு அனுமதியைப் பெற்றுக் கொண்டவர்கள் பயணத்துக்கான மார்க்கத்தை விரும்பியபடி தெரிவுசெய்து கொள்ள முடியும். தெரிவு செய்யும் உரிமையைக் கட்டுப்படுத்துவதானது ஒருவரின் பிரயாணத்திற்கான அடிப்படை உரிமையை மறுப்பதாக அமையும். எனவே இந்தக் கட்டுப்பாட்டை நீக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம் என்று அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் - கொழும்பு நேரடி பஸ் சேவைகளும் மக்களுக்கு சிரமங்களையும், அதிக செலவுகளையும் வீண்காலதாமதத்தையும் ஏற்படுத்துவதாக உள்ளது. அத்துடன் தற்போதைய நிலையில் எவரும் தமக்குத் தேவையான அல்லது விரும்பிய நேரத்தில் பிரயாணத்தை மேற்கொள்ள முடியாதுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

இம்மாதிரியான கட்டுப்பாடுகளை நீக்குவதும் மேலதிக பஸ்கள் சேவையில் ஈடுபடுவதற்கு அனுமதிப்பதும் கொழும்பு - யாழ்ப்பாணம் பிரயாணத்தை விரைவாகவும், செலவு குறைவாகவும் ஆக்கமுடியும் என்றும் அவர் ஜனாதிபதிக்கு எழுதியுள்ள அக்கடிதத்தில் தெரிவித்துள்ளார். (ப)

# சாட்டி கடற்கரை பள்ளிவாசலுக்கு அமைச்சர் றிசாத் பதியுதீன் விஜயம்

யாழ்ப்பாணம், நவ.4

யாழ்ப்பாணத்துக்கு திங்கட்கிழமை மாலை விஜயம் செய்த மீள் குடியேற்ற,அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் றிசாத் பதியுதீன், முஸ்லிம்கள் வாழ்ந்த வேலணை பிரதேசசபை பிரிவுக்குட்பட்ட சாட்டி வெள்ளை கடற்கரைப் பகுதியில் சேதமடைந்த நிலையில் காணப்படும் ஜும்மா பள்ளிவாசலையும்,வெள்ளை மணல் கடற்கரையினையும் பார்வையிட்டார்.

யாழ். மாவட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் மீளக்குடியமர ஆர்வத்துடன் இருக்கும் வேளையில், அவர்களது வரலாற்றுச் சிறப்புமிக்க இம்மத வழிபாட்டுத்தலத்தின் தற்போதைய நிலையினை பார்வையிடுமாறு யாழ். மாநகர சபை உறுப்பினர்கள் விடுத்த வேண்டுகோளின் பேரிலேயே அமைச்சர் றிசாத் பதியுதீன் நேற்று முன்தினம் திடீர் விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

யாழ். குடாநாட்டுக்கு வரும் இஸ்லாமியர்கள் வெள்ளை கடற்கரைப் பகுதிக்கு வந்து இப்பள்ளிவாசலில் மத கடமைகளில் ஈடுபட்டுவந்த காலம் மீண்டும் ஏற்பட வேண்டும் என அங்கு அமைச்சரை சந்தித்த தமிழ் பிரமுகர்கள் அமைச்சரிடம் சுட்டிக்காட்டினர்.

ஊர்காவற்துறை பண்ணைப் பாலம் புனரமைப்பு செய்யப்படுவதன் மூலம்,மக்களின் போக்குவரத்துக்கள் மிகவும் துரிதமாக இடம்பெறுவதற்கு இலகுவாக இருக்கும் எனத் தெரிவித்த பிரதிநிதிகளிடம், இவ்விடயம் குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவோடு பேசுவதாகவும் அமைச்சர் அங்கு கூறினார். (50)

## ஆயுள்வேத வைத்தியசாலையின் புனரமைப்புப் பணிகள் துரிதகதியில்

பண்டத்தரிப்பு, நவ.04

பண்டத்தரிப்பு பிரான்பற்றில் அமைக்கப்பட்டு வரும் கிராமிய ஆயுள்வேத வைத்தியசாலையின் புனரமைப்புப் பணி 40 சதவீதம் முடிவடைந்துள்ளது.

துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மேற்படி வைத்தியசாலையின் நிர்மாணப் பணிகளுக்கு முதற்கட்டமாக 5 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஒதுக்கீட்டின் அடிப்படையிலேயே 40 வீதமான புனரமைப்பு வேலைகள் முடிவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

புனரமைப்புப் பணிகளுக்கான 2ஆம் கட்ட நிதியாக 5 மில்லியன் ரூபாவினை வடமாகாணச் சுதேச வைத்தியப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சி.துரைரட்ணம் ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (04-130)

# முகாம்களிலிருந்து மீளக்குடியமர்ந்து வரும் மாணவர்கள் யாழ்.வலயப் பாடசாலைகளில் இணைத்துக் கொள்ளப்படுவர்

## இடநெருக்கடி ஏற்படுமாயின் மாற்று ஏற்பாடு என்கிறார் கல்விப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், நவ.4

நலன்புரி முகாம்களில் இருந்து விடுவிக்கப்பட்டு மீளக்குடியமர்ந்து வரும் மாணவர்களுக்கு யாழ். கல்வி வலயப் பாடசாலைகளில் அனுமதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு கூடுதலான மாணவர்களுக்கு அனுமதி வழங்கப்படும் போது பாடசாலைகளில் இட நெருக்கடி ஏற்படுமாயின் புதிய பாடசாலை ஒன்றை அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். என்கிறார் யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம்.

மீளக்குடியமர்ந்துள்ள மாணவர்களை பாடசாலைகளில் அனுமதிக்காகச் செல்கின்ற போது அங்கு அவர்களுக்கு அனுமதி மறுக்கப்படுவது தொடர்பாக வலயக்கல்விப்பணிப்பாளரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டு தற்போது மீள்குடியமர்த்தப்படுகின்றவர்களில் யாழ். கல்வி வலயத்துக்குட்பட்ட மாணவர்கள் பாடசாலைகளில் அனுமதிகளை பெறச் செல்கின்ற போது குறிப்பிட்ட பாடசாலையில் இட நெருக்கீடு இல்லாத பட்சத்தில் அவர்களுக்கு உடனடியாக அனுமதி வழங்குமாறு பாடசாலைகளின் அதிபர்களுக்கு அறிவுறுத்தியுள்ளேன்.

குறிப்பிட்ட பாடசாலையில் இட நெருக்கடி காணப்பட்டால் அதற்கு அருகில் உள்ள பாடசாலைகளில் அனுமதியினைப் பெறறுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தேசிய பாடசாலைகளில் அனுமதி பெற்றுத்தருமாறு கோரி ஏராளமான பெற்றோர்கள் தினமும் கல்வி வலயத்திற்கு வருகிறார்கள்.

உண்மையிலே தேசிய பாடசாலைகளில் அனுமதியினைப் பெற்றுக் கொடுப்பது என்பது எமது அதிகாரத்துக்குட்பட்ட வரையில் இயலாத காரியம்.

ஏனெனில் கல்வியமைச்சின் நேரடியான கண்காணிப்பிலே அந்தப் பாடசாலைகளில் வருடா வருடம் மாணவர்களுக்காக அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

அத்துடன் மாணவர்கள் எண்ணிக்கை அதிகரிப்பினால் இடநெருக்கடிகள் அங்கு காணப்படுகின்றன. எனவே இது விடயத்தில் பெற்றோர்கள் எம்முடன் ஒத்துழைத்து தமக்கு அருகில் உள்ள பாடசாலைகளில் பிள்ளைகளை அனுமதித்து அவர்கள் உடனடியாகக் கல்வியைத் தொடர்வதற்கு வசதி செய்ய வேண்டும்- என்றார். (50- 9)

| நாளை | |
|---|---|
| ஐப்பசி 19 | 05.11.2009 |
| | வியாழக்கிழமை |
| திதி: | திருதியை |
| | மு.இ. 09.44 வரை |
| நட்சத்திரம்: | ரோகினி |
| | மு.இ. 06.41 வரை |
| சுபநேரம்: | 07.34 -09.04 வரை |
| ராகுகாலம்: | 01.34 - 03.0 4 வரை |

# புலமைப்பரிசில் பரீட்சைக்கு முகாம்களிலிருந்து தோற்றிய மாணவரின் பெறுபேறுகள் வந்தன

## யாழ்.கல்வி வலயத்தில் அவற்றைப் பெற ஏற்பாடு

யாழ்ப்பாணம், நவ.4

நலன்புரி முகாம்களில் இருந்து 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கான பெறுபேற்றுச் சான்றிதழ்கள் இன்று புதன்கிழமை முதல் யாழ்.கல்வி வலயத்தில் வைத்து வழங்கப்பட்டுள்ளன.

யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் இத் தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நலன்புரி முகாம்களில் இருந்து 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் அனைவரினதும் பரீட்சைப் பெறுபேறுகள் கல்வித் திணைக்களத்தால் யாழ்.கல்வி வலயத்திற்கு நேற்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

பரீட்சைப் பெறுபேறுகளைப் பார்வையிட அல்லது பெறுபேற்றுச் சான்றிதழ்களைப் பெற விரும்புகின்ற மாணவர்கள் யாழ்.கல்வி வலயத்திற்கு வருகை தந்து பெற்றுக் கொள்ள முடியும்.

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு தேசியப் பாடசாலைகளில் அனுமதி வழங்குவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. எனவே மணவர்கள் காலம் தாழ்த்தாது தமது பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன் - என்றார். (50-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்


சைவப்புலவரும், ஒய்வுபெற்ற
ஆசிரியருமான
திரு. ஆ.கனகரத்தினம்

சைவப்புலவர், ஓய்வுபெற்ற ஆசிரியருமான திரு. ஆ.கனகரத்தினம், வயிரவப்பிள்ளை தர்மலிங்கம், சித்திரம் கணேசானந்தன் ஆகிய மூவரும் சேர்ந்து எமது ஆலயத்தில் நடைபெற்ற கந்தஷஷ்டி விரத உற்சவ காலத்தில் புராண படன உரை நிகழ்வினைச் சிறப்புற நிகழ்த்தி விரதம் அனுஷ்டித்த அடியார்களுக்கு எல்லாம் வல்ல முருகப் பெருமானுடைய அருட் கடாச்சத்தினைக் கிடைக்கப்பெறச் செய்ததோடு, நிகழ்வினையும் சிறப்பித்தனர்.

இச்சிவத் தொண்டர்கள் உடல், உள நலத்தோடு வாழ்ந்து மேலும் பல சைவப் பணிகள் சிறப்புற ஆற்ற எல்லாம் வல்ல இறைவன் திருவருள் கிடைக்க வேண்டும்என்று செங்கற்படை மகாதேவ பிள்ளையார் தேவஸ்தான தர்மகர்த்தாவும் இக்கிராம மக்களும் வாழ்த்துகின்றனர்.

(90561)

ஆலய நிர்வாகம், சங்கானை.

# CONSULTANTS தேவை

UK யை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் பிரபல UK VISA CONSULTANTS நிறுவனம் ஒன்றிற்கு ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்ற 20-28 வயதுக்குட்பட்ட Consultant பெண்கள் தேவை.

குறைந்த பட்சம் G.C.E A/L தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் (DEGREE முடித்தவர்கள் விரும்பத்தக்கது). கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப் படும்.

இன்று (04.11.2009) புதன்கிழமை மு.ப. 9 தொடக்கம் பி.ப. 4 மணிவரை சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

**EXPONET OVERSEAS CONSULTANTS,
LUXMAN PLAZA, NAVALAR ROAD,
JAFFNA. 0714150995.**

(90585)


# மரண அறிவித்தல்கள்

## பொன்னுத்துரை பவா சண்முகம்

*(கிளிநொச்சி சரவணாஸ் உரிமையாளர், தலைவர், இராமநாதபுரம் வயலூர் முருகன் ஆலயம்)*

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி, இராமநாதபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை பவா சண்முகம் வவுனியாவில் நேற்று (03.11.2009) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், தனலட்சுமியின் அன்புக் கணவரும் நிதர்சினி, கோபிகாந், நித்தியாசினி, மயூராசினி, மனோஜினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுரேந்திராவின் அன்பு மாமனும், பபிசனின் பாசமிகு பேரனும், கமலாசினி, சந்திரராஜா, புவனேந்திரராசா, செளந்தரராஜா, யோகராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும், மகேந்திரலெட்சுமி, புஸ்பராணி, தனபாக்கியலெட்சுமி, கோமளாதேவி, செல்வராணி, சத்தியபாமா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந.தனபாலசிங்கம்
(G.S.வேலணை - சகலன்).

இல. 245, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (90586)

## செல்லையா பரமேஸ்வரி



(முன்னாள் விஞ்ஞான ஆசிரியை, யா/ ஊரெழு கணேச வித்தியாசாலை)

புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா பரமேஸ்வரி நேற்று (03.11.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் செல்லையா - நல்லமுத்து தம்பதியரின் அன்பு மகளும் திருமதி நாகரத்தினம், நடராசா, திருமதி செளந்தரம் (கனடா), திருமதி பூமலர், திருமதி விஜயலட்சுமி, திருமதி ஜெயராணி, திருமதி தேவநாயகி(உரிமையாளர், எரிபொருள் நிரப்பு நிலையம், புன்னாலைக்கட்டுவன் வடக்கு) ஆகியோரின் சகோதரியும் வனஜா (பிரான்ஸ்), நந்தினி, சிவமணி, சுபாஜினி (பிரான்ஸ்), ஜெயசோதி (பிரான்ஸ்), சுகந்தினி(கனடா), ஜெயதாசன் (பிரான்ஸ்), சோபிதா, ஜனார்த்தனன், சாமினி (லண்டன்), ஜெயகௌரி, ஜெனந்தன் ஆகியோரின் சிறிய தாயும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, சுப்பிரமணியம் மற்றும் இராசரத்தினம், சண்முகநாதன் (முன்னாள் உப அதிபர்,யா/ ஊரெழு கணேச வித்தியாசாலை)கமலராசா ஆகியோரின் மைத்துனியும் அர்ச்சுதன், கனிகா, ருத்திகா, யதுஷா, அங்கரேஸ் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று ( 04.11.2009) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மாலை 3 மணியளவில் குப்பிளான் காடகரம்பை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந.ஜெனார்த்தனன்
(பேராமகன்).

*பலாலி வீதி,
புன்னாலைக்கட்டுவன் வடக்கு.* (90587)

# யாழ்ப்பாணம் மாநகரசபை

சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள், கோழிக் கடைகள், துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையங்கள் என்பவற்றைக் குத்தகைக்கு வழங்குவதற்கான

# கேள்வி அறிவித்தல் - 2010

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி கடைகள் 01.01.2010 ஆம் திகதி முதல் 31.12.2010 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகர சபையால் கோரப்படுகின்றன.

கேள்விப் படிவக் கட்டணம் - ரூ. 400.00 (வற் வரி நீங்கலாக)
கேள்விப் படிவம் விநியோகிக்கும் திகதி -05.11.2009
கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் -20.11.2009, நண்பகல் 12 மணி வரை
கேள்வி திறத்தல் - 20.11.2009 பிற்பகல் 2.30 மணிக்கு

விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மூலையில் கடையின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப் பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

தபாலில் அனுப்புவோர் ' மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்' என்று முகவரியிட்டு 20.11.2009 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விக்காரர்கள் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் சமுகமளிக்கலாம்.

குறிப்பு:

1. கூட்டுறவுச் சங்கங்கள் தவிர்ந்த தனிப்பட்டவர்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்வித் தொகையின் 50 வீதத்திற்குச் சமமான தொகைக்கு அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு வங்கியின் முறி ஒன்று சமர்ப்பித்தல் வேண்டும்.
2. சந்தையைக் குத்தகைக்குப் பெறுபவர் சந்தைக்கு வரும் பொருள்களின் மொத்தப் பெறுமதியில் 3வீதம் கட்டணம் பெறலாம். வியாபாரிகள் மீன் வியாபாரம் செய்யும் இடத்துக்கு (கல்லுக்கு) ரூபா 40 பெறலாம்.மேலதிகமாக எந்தவிதக் கட்டணங்களும் அறவிடக்கூடாது.
3. சபையின் சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களில் பாதுகாக்கப்படும் துவிச்சக்கர வண்டிகளுக்கு ரூபா 4 உம் மோட்டார் சைக்கிள்களுக்கு ரூபா 7 உம் வாங்கலாம். மேலதிகமாக எந்த வரியும் அறவிடக்கூடாது.
4. சபையின் கடைகளில் இறைச்சி/கருவாடு/ கோழி ஆகிய பொருள்கள் விற்பனை செய்யும் உரிமையாளர்கள் மாத வாடகை செலுத்த வேண்டும்.
5. சபையின் கடைகள் இல்லாத இடமாகிய மானிப்பாய் வீதி, ஜின்னா வீதி, பாசையூர் ஆகிய பகுதிகளுக்கு கேள்வி விண்ணப்பம் சமர்ப்பிப்பவர்கள் குறிப்பிட்ட இடங்களின் காணி உரிமையாளர்களின் சம்மதக் கடிதங்களையும் இணைத்தல் வேண்டும்.
6. கேள்விப் படிவக் கட்டணம், கேள்வித் தொகை, மாத வாடகை என்பனவற்றுக்கு 12% பெறுமதி சேர் வரி (வற்) உடன் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி 3% செலுத்துதல் வேண்டும்.
7. சித்தி பெற்றவர்கள் உடனடியாக கேள்வித் தொகையின் 1/3 பகுதியைச் செலுத்தி சபையுடன் உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும். மிகுதித் தொகையின் 1/8 பங்கை 2010 தை மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் முதலாம் திகதி செலுத்துதல் வேண்டும்.
8. கேள்வி விண்ணப்பப் பத்திரம் பெற வருபவர்கள் அடையாள அட்டை சமர்ப்பிப்பதுடன் அதன் ஒளிப்படப் பிரதியும் சமர்ப்பித்தல் வேண்டும்.
9. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை யாழ். மாநகர சபை ஆணையாளராகிய எனக்கு இருக்கிறது.
10. கேள்விப் படிவங்கள் பெறுபவர்கள் முன்பு மாநகர சபைக்கு எந்தவித கொடுப்பனவும் செலுத்த முடியாத காரணத்தால் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டவராக இருத்தல் கூடாது.

மேலும் மேலதிக விவரங்கள் தேவைப்படின் அலுவலக நேரத்தில் யாழ். மாநகர சபையின் நானாவித இறைவரிப் பகுதியில் பெற்றுக்கொள்ளலாம்.

மாநகர அலுவலகம், யாழ்ப்பாணம்,
03.11.2009

ஆணையாளர்,
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

| தொ. இல. | பொதுச் சந்தைகள் | மீளளிக்கக் கூடிய கேள்விப் பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (12% பெறுமதி சேர் வரியும், 3% தே.க.எ. வரியும் நீங்கலாக) |
|---|---|---|---|
| 01 | பண்ணை மீன் சந்தை (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம் உட்பட) | 10000.00 | 3675000.00 |
| 02 | பெரிய கடை மரக்கறிச் சந்தை (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம் உட்பட) | 10000.00 | 1575000.00 |
| 03 | குருநகர் சந்தை (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம் உட்பட) | 10000.00 | 1050000.00 |
| 04 | செங்குந்தா சந்தை (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம் உட்பட) | 10000.00 | 630000.00 |
| 05 | நாவாந்துறை சந்தை (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம் உட்பட) | 10000.00 | 475000.00 |
| 06 | புங்கக் குளம் சந்தை | 2000.00 | 10500.00 |
| 07 | அரியாலைச் சந்தை | 1000.00 | 105000.00 |
| 08 | நச்சேரி நல்லூர் வீதி துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம் (இல. 11/2, சுண்டுக்குளி தபால் கந்தோருக்கு அருகில்) | 1000.00 | 105000.00 |
| 09 | பாசையூர் சந்தை | 2000.00 | 100000.00 |
| 10 | கஸ்தூரியார் வீதி துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | 1000.00 | 100000.00 |
| 11 | பண்ணை மீன் சந்தைக்கு அருகாமையில் உள்ள சிற்றுண்டிச்சாலை | 1000.00 | 52500.00 |

| தொ. இல. | இறைச்சிக் கடைகள் | கடை இல. | மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (12% பெறுமதி சேர் வரியும், 3% தே.க.எ. வரியும் நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 01 | பண்ணை ஆட்டிறைச்சிக் கடை | இல. 01 | 5000.00 | 94500.00 |
| 02 | பண்ணை ஆட்டிறைச்சிக் கடை | இல. 02 | 5000.00 | 84000.00 |
| 03 | பண்ணை ஆட்டிறைச்சிக் கடை | இல. 04 | 5000.00 | 120750.00 |
| 04 | பண்ணை ஆட்டிறைச்சிக் கடை | இல. 05 | 5000.00 | 52500.00 |
| 05 | பண்ணை ஆட்டிறைச்சிக் கடை | இல. 06 | 5000.00 | 52500.00 |
| 06 | பண்ணை ஆட்டிறைச்சிக் கடை | இல. 08 | 5000.00 | 42000.00 |
| 07 | பண்ணை கருவாட்டுக் கடை | இல. 02 | 5000.00 | 31500.00 |
| 08 | பண்ணை கோழிக் கடை | இல. 07 | 5000.00 | 42000.00 |
| 09 | செங்குந்தா ஆட்டிறைச்சிக் கடை | இல. 01 | 5000.00 | 94500.00 |
| 10 | செங்குந்தா ஆட்டிறைச்சிக் கடை | இல. 02 | 5000.00 | 140000.00 |
| 11 | அரியாலை மாட்டிறைச்சிக்கடை | இல. 01 | 5000.00 | 105000.00 |
| 12 | அரியாலை ஆட்டிறைச்சிக் கடை | இல. 02 | 5000.00 | 21000.00 |
| 13 | புங்கக்குளம் மாட்டிறைச்சிக் கடை | இல. 01 | 5000.00 | 115500.00 |
| 14 | புங்கக்குளம் ஆட்டிறைச்சிக் கடை | இல. 02 | 5000.00 | 52500.00 |
| 15 | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | இல. 01 | 5000.00 | 89500.00 |
| 16 | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | இல. 02 | 5000.00 | 110000.00 |
| 17 | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | இல. 03 | 5000.00 | 68250.00 |
| 18 | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | இல. 04 | 5000.00 | 70000.00 |
| 19 | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | இல. 05 | 5000.00 | 55500.00 |
| 20 | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | இல. 06 | 5000.00 | 70000.00 |
| 21 | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | இல. 07 | 5000.00 | 70000.00 |
| 22 | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | இல. 08 | 5000.00 | 70000.00 |
| 23 | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | இல. 09 | 5000.00 | 70000.00 |
| 24 | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | இல. 10 | 5000.00 | 10000.00 |
| 25 | நாவாந்துறை கருவாட்டுக் கடை | இல. 11 | 2000.00 | 10000.00 |
| 26 | நாவாந்துறை கருவாட்டுக் கடை | இல. 12 | 2000.00 | 10000.00 |
| 27 | குருநகர் மாட்டிறைச்சிக் கடை | இல. 01 | 7000.00 | 136500.00 |
| 28 | குருநகர் மாட்டிறைச்சிக் கடை | இல. 02 | 7000.00 | 136500.00 |
| 29 | குருநகர் மாட்டிறைச்சிக் கடை | இல. 03 | 7000.00 | 136500.00 |
| 30 | குருநகர் மாட்டிறைச்சிக் கடை | இல. 04 | 7000.00 | 136500.00 |
| 31 | குருநகர் மாட்டிறைச்சிக் கடை | இல. 05 | 7000.00 | 136500.00 |
| 32 | குருநகர் மாட்டிறைச்சிக் கடை | இல. 06 | 7000.00 | 136500.00 |
| 33 | குருநகர் மாட்டிறைச்சிக் கடை | இல. 07 | 7000.00 | 105000.00 |
| 34 | நரிக்குன்று மாட்டிறைச்சிக் கடை | இல. 01 | 7000.00 | 90000.00 |
| 35 | பாசையூர் மாட்டிறைச்சிக் கடை | இல. 01 | 5000.00 | 89500.00 |
| 36 | பாசையூர் மாட்டிறைச்சிக் கடை | இல. 02 | 5000.00 | 89000.00 |
| 37 | [illegible] ஆட்டிறைச்சிக் கடை | இல. 02 | 5000.00 | 27000.00 |
| 38 | ஜின்னா வீதி ஆட்டிறைச்சிக் கடை | இல. 01 | 2500.00 | 27000.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர் மடத்தைச் சேர்ந்த வறுமைக் கோட்டின்கீழ் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு கோப்பாய்லயன்ஸ்கழகத்தினால்மூக்குக்கண்ணாடி வழங்கும்நிகழ்வு அண்மையில்நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மூக்குக் கண்ணாடியைப் பெற்றுக்கொண்ட மாணவிகளில் ஒரு பகுதியினரையும், திருக்குடும்ப கன்னியர் மடம் ஆங்கிலப் பாடசாலை அதிபர் அருட்செல்வி நெவிஸ், மாணவி ஒருவருக்கு கண்ணாடி அணிவிப்பதையும், சர்வதேச லயன்ஸ் கழக மாவட்ட இணைப்பாளர் வைத்திய கலாநிதி வை.தியாகராஜா, கோப்பாய் லயன்ஸ் கழகத் தலைவர் கெ.காண்டீபன், முன்னாள் தலைவர் ஏ.சற்குணநாதன், லயன் ஏ.சில்வெஸ்ரர் ஆகியோரையும் படங்களில் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

# கீரிமலை நகுலேஸ்வரர், மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயங்களுக்கு பக்தர்கள் சுதந்திரமாகச் சென்று வருவதற்கு வசதி செய்க

## அமைச்சர் டக்ளஸிடம் ஆலயக் குருக்கள்மார் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ.4

வரலாற்றுப் புகழ்பெற்ற கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தை மீளச் செயற்பட வைப்பது தொடர்பிலும், கீரிமலைப் பகுதியில் மக்களை மீள்குடியேற்றம் செய்வது தொடர்பிலும், மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தை புனரமைப்புச் செய்து மீள செயற்பட வைப்பது தொடர்பிலும் சமூக சேவைகள் அமைச்சருடன் பேச்சு நடத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய பிரதம குருவும் ஆதீன கர்த்தாவுமான கே.நகுலேஸ்வரக் குருக்கள், கு.உமா சங்கர சர்மா மற்றும் மாவிட்டபுர கந்தசுவாமி ஆலய பிரதம குருவும் ஆதீன கர்த்தாவுமாகிய மஹாராஜ ஸ்ரீ சு.து.சண்முகநாதர் குருக்கள், இரட்ணசபாபதிக் குருக்கள் ஆகியோர் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை அவரது யாழ். அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

மேற்படி சந்திப்பின்போது கீரிமலை ஆலயத்தைப் பாதுகாப்புப் படையினரிடமிருந்து பெற்று ஆலயத்தைப் புனரமைப்புச் செய்து அப்பகுதியை அபிவிருத்தி செய்து தருமாறும் அப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்துள்ள மக்களை மீளக்குடியமர்த்த நடவடிக்கை எடுத்து உதவுமாறும் கீரிமலை ஆலய பிரதம குரு அமைச்சரிடம் கேட்டுக்கொண்டார்.

அதேவேளை, மாவிட்டபுர கந்தசுவாமி ஆலயத்தைப் புனரமைப்புச் செய்து மீளத் தொடர்ந்து செயற்பட வைப்பதற்கு நடவடிக்கை எடுத்து உதவுமாறும் மேற்படி இரு ஆலயங்களுக்கும் பக்தர்கள் சுதந்திரமாகவும், வாகனங்களிலும் வந்து போகக்கூடிய வசதியை ஏற்படுத்தித் தருமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

மேற்படி கோரிக்கைகளை ஏற்றுக்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இவ்வாலயங்களில் அடுத்து வருகின்ற திருவிழாக்களுக்கு முன்பதாக இக்கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளைப் பாதுகாப்புத் தரப்பினருடனும் ஏனைய உரிய தரப்பினர்களுடனும் கலந்துரையாடி மேற்கொள்வதாகத் தெரிவித்தார். (50)

# போதை ஒழிப்பை வலியுறுத்தி ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம்

சங்கானை, வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனம் போதை ஒழிப்புத் தொடர்பில் சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் ஒரு நாள் அடையாள உண்ணாவிரதத்தை கடந்த 29ஆம் திகதி மேற்கொண்டிருந்தது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டிருந்தவர்களுக்கு குளிர்பானம் வழங்கி உண்ணாவிரதத்தை முடித்து வைத்ததுடன், இவ்வாறான விழிப்புணர்வு ஊட்டும் நிகழ்வுகள் எம்மக்கள் மத்தியில் பரவலாகவும் விரிவாகவும் தொடர்ந்து மேற்கொள்ளப்படல் வேண்டும் என்றும் வலியுறுத்தியதுடன் கடந்த கால யுத்தத்தினால் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கும் எமது சமுதாயத்திற்கு இவ்வாறான செயற்பாடுகளின் மூலம் நல்வழிகாட்டுவது சிறந்த செயலென்றும் தெரிவித்தார். (50)

# கோப்பாய் இராச வீதி பொதுமக்களால் துப்புரவு

இலகு வேலைத் திட்டத்தின் கீழ் கோப்பாய் இராச வீதியை மக்கள் துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வேலைத் திட்டத்தின்கீழ் நிவாரணம் பெறும் மக்கள் இந்த வீதியில் இரு மருங்கிலும் இருக்கும் பற்றைகளை வெட்டித் துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டனர்.

வீதித் துப்புரவுப் பணியை அடுத்து போக்குவரத்திற்கு இருந்த நெரிசல்களும் தவிர்க்கப்பட்டுள்ளது. (50-224)

# பருவ மழையை அடுத்து அரியாலைப் பிரதேசத்தில் நெற்செய்கையில் ஆர்வம்காட்டும் விவசாயிகள்

யாழ்ப்பாணம், நவ.4

தற்போது பெய்துவரும் பருவமழையை அடுத்து அரியாலைப் பிரதேசத்தில் விவசாயிகள் பெரும்போக நெற்செய்கையில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

செம்மணி, நாயன்மார்க்கட்டு போன்ற பகுதிகளில் உள்ள வயல் நிலங்களில் நெல் விதைக்கும் பணிகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன.

ஏற்கனவே இப்பிரதேசத்தில் புழுதிபோட்டு விதைப்பில் ஈடுபட்டவர்களின் நெற்பயிர்களும், தற்போதைய மழையை அடுத்து ஓரளவு செழித்துக் காணப்படுகின்றன.

இதேசமயம் கடந்த காலங்களில் நெல் விதைப்பு இன்றி தரிசு நிலங்களாகக் காணப்பட்ட வயல் நிலங்களிலும் விவசாயிகள் இம்முறை நெற்செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். ( 50-224)

# உடுவில் பிரதேசத்தில் பனம் விதை நடும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,நவ.4

வடக்கின் வசந்தம் திட்டத்தின்கீழ் பனை அபிவிருத்திச் சபையினால் யாழ். குடா நாட்டில் 10 லட்சம் பனம் விதை நடும் திட்டத்தில் உடுவில் பிரதேச செயலர் பிரிவில் பனம் விதை நடும் நிகழ்வுகள் ஆரம்பமாகியுள்ளன.

சுன்னாகம் கந்தரோடைப் பகுதியில் 5 ஆயிரம் பனம் விதை நடும் நிகழ்வு கிராம அலுவலர் செல்வி தனஞ்செயன் கீர்த்திகா தலைமையில் இடம்பெற்றது.

கந்தரோடை சங்கம்புலவு மயானத்தில் இடம்பெற்ற நிகழ்வில் பனம் விதை நடும் நிகழ்வில் பனை அபிவிருத்திச்சபை அலுவலர் கோபாலகிருஷ்ணன், நிர்வாகக் கிராம அலுவலர் நா.நவரத்தினராசா, லயன்ஸ் மகாதேவா உட்பட நூற்றுக் கணக்கான பொது மக்களும் கலந்துகொண்டனர். (50)

# 1000 பேர் வசதியாக அமரக்கூடிய வகையில் யாழ். மாநகர சபையின் கலாசார மண்டபம் அமையும்

## மணி மண்டபத் திறப்பு விழாவில் அரச அதிபர் தெரிவிப்பு

நல்லூர், நவ.4

ஆயிரம் பேர் வரை வசதியாக அமர்ந்து நிகழ்வுகளைக் காணக்கூடியதாக யாழ். மாநகர சபையினர் கலாசார மண்டபத்தை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அதை உரிய முறையில் தயாரித்து விரைவில் அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என நல்லூரில் நடராசா- பரமேஸ்வரி மணிமண்டபத்தைத் திறந்து வைத்துப் பேசிய யாழ். அரச அதிபர் கே. கணேஷ் தெரிவித்தார்.




நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்குச் சமீபமாகப் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நடராசா- பரமேஸ்வரி மணிமண்டபத்தின் திறப்பு விழா நிகழ்வுகள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை சிறிநதியா நகைமாளிகை உரிமையாளரும் மண்டபத்தின் ஸ்தாபகருமான ந. சத்தியரூபன் தலைமையில் நடைபெற்றன.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அரச அதிபர் கணேஷ் மேலும் பேசும்போது கூறியவை வருமாறு:

மகன் தந்தைக்கு ஆற்ற வேண்டியது என்ன என்பதை திருவள்ளுவர் மிகவும் அழகாக எடுத்துக் கூறியுள்ளார். அதற்கமைவாக தனது பெற்றோர்களை நினைவூட்டும் வகையில் இந்த மண்டபத்தைப் புனித பூமியில் அமைத்துள்ளார் அதன் உரிமையாளர். வசதி படைத்த பலர் தமது பெற்றோர்களை முதியோர் இல்லங்களில் சேர்க்கின்ற இந்தக் கால கட்டத்தில் தமது பெற்றோர் களது நினைவு போற்றப்படும் வகையில் இந்த மண்டபம் கட்டப்பட்டுள்ளது. இதனூடாக நமது தாய், தந்தையருக்கு நாம் செய்ய வேண்டியது என்ன என்பதை உணர்த்தியுள்ள நடராஜா சத்தியரூபன், இதன் மூலம் கிடைக்கவிருக்கும் வருமானத்தை சமூக நலன்களுக்காகச் செலவிட இருப்பது இன்று பல்வேறு வழிகளிலும் நொந்து போயுள்ள மக்களுக்கு ஒரு ஆறுதலான செய்தியாகும். நாங்கள் எதைச் செய்ய முடியுமோ அதை நல்ல முறையில் செய்ய வேண்டும் - என்றார் அரச அதிபர்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் தனது ஆசியுரையில் கூறியுள்ளவை வருமாறு:



இந்து சமயத்தின் பண்பாடுகளை நிலை நிறுத்தவும் சமூகத்தில் நல்ல பணிகளை ஆற்றக் கூடியதுமான சேவைகளை வழங்க ஒவ்வொருவரும் முன் வரவேண்டும். நல்லூர் சூழல் மிகவும் புனிதமானது. அது பாதுகாக்கப்படவேண்டும். அதற்கு ஏற்றவாறு மண்டபத்தின் செயற்பாடுகள் இடம்பெறுவதில் கவனம் செலுத்துதல் வேண்டும். இந்த மண்டபத்தின் மூலம் சமூகத் தொண்டுகளும் முன்னெடுக்கப்பட இருப்பது இதன் ஸ்தாபகர் நடராசா சத்தியரூபனின் சேவைக்கு மேலும் ஒரு சிறப்பைச் சேர்க்கிறது- என்றார்.

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை பேசும் போது கூறியவை வருமாறு:

இன்று யாழ்.நகரில் கலாசார மண்டபங்கள் உருவாகிவருகின்றன. எமது கலை, கலாசாரம், பண்பாடுகள் குறித்த நிகழ்வுகள் பரந்த அளவில் இடம்பெறவேண்டியுள்ள தால் இது போன்ற பல மண்டபங்கள் தேவையாக இருக்கின்றது. போதிய இடவசதிகள், சுகாதார சூழல்களையும் காற்றோட்ட வசதிகளையும், கொண்டதாக இந்த மண்டபம் அமைக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது. தமிழகத்தில் பல்வேறு வசதிகள் கொண்ட கல்யாண மண்டபங்கள் நிறைய இருக்கின்றன. தமிழகத்தில் பல் கலைக்கழக மண்டபத்தில் சுமார் 5 ஆயிரம் பேர்கள் அமரக்கூடிய மண்டபம் உண்டு. முக்கிய நிகழ்வுகளில் தமிழக முதல்வர் இந்த மண்டபத்தில் கலந்து கொள்கின்றார். இங்கும் இதுபோன்று கருத்தரங்கு, ஆய்வரங்குகளை நடத்தக்கூடிய பெரிய மண்டபம் தேவை. அதற்கு அரச அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன்- என்றார். (50-111)

# சமூகப் பாதுகாப்பு சிறுவர் பராமரிப்பு நிலையம் நெடுந்தீவுப் பிரதேச செயலகத்தில் திறப்பு

யாழ்ப்பாணம்,நவ.4

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சமூகப் பாதுகாப்பு மற்றும் சிறுவர் பராமரிப்பு நிலையக் கட்டடத் திறப்பு விழாவில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு புதிய கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

நெடுந்தீவு விஜயத்தை மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மலர்மாலை அணிவிக்கப்பட்டு அப்பகுதி றோமன் கத்தோலிக்க கல்லூரி மாணவிகளின் 'பாண்ட்' வாத்தியக் குழுவின் இசையுடன் உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

பின்னர் அங்குள்ள சமூகப் பாதுகாப்பு மற்றும் சிறுவர் பராமரிப்பு நிலையக் கட்டடத்தைத் திறந்து வைத்து உரை நிகழ்த்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இப்பகுதிக்கான உதவி அரசாங்க அதிபர் பிரிவை பிரதேச செயலகப் பிரிவாகத் தரமுயர்த்த தான் கவனத்தில் கொண்டுள்ளதாகவும், இதே போன்று குடா நாட்டில் மேலும் மூன்று உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளைத் தரமுயர்த்த வேண்டும் எனத் தெரிவித்ததுடன், இங்குள்ள அரச நிர்வாக அலுவலகங்களில் நிலவும் ஆளணிப் பற்றாக்குறையை நீக்கி, அரசின் நிர்வாக நடவடிக்கைகளைச் சிறப்பாக முன்னெடுக்க வேண்டும் என்ற உதவி அரசாங்க அதிபரின் கோரிக்கையையும் தான் கவனத்தில் கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் என். திருலிங்கநாதன், அப்பிரதேசப் பாதுகாப்புப் பொறுப்பதிகாரி மற்றும் பல அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஞ்ஞானம் II இன் தொடர்ச்சி.....

03. 2) a. இரும்பு துருப்பிடித்தல் செயன்முறையில் அனோட்டில், கதோட்டில் நடைபெறும் தாக்கங்களை எழுதுக.
b. இரும்பானது இரும்புத் தாதுக்களிலிருந்து பிரித்தெடுக்கப்படுகிறது. இரும்புத் தாதுக்களுக்கு இரு உதாரணம் தருக.
c. இரும்பு பிரித்தெடுத்தலின்போது நிகழும் தாக்கங்களை எழுதுக.
d. சோடிய உலோகம் பிரித்தெடுக்கப்படும் முறையை எழுதுக.

3) ஒரே திணிவுள்ள இரும்புத் துண்டுகளையும், இரும்புத் தூளையும் சம கனவளவும் ஒரே செறிவுடையதுமான செப்பு சல்பேற்று கரைசலில் இட்டுள்ள அமைப்பு தரப்பட்டுள்ளது.





a. உமது அவதானங்கள் 2 ஐக் குறிப்பிடுக.
b. இப்பரிசோதனையின் கருதுகோள் ஒன்றை எழுதுக.
c. இங்கு நடைபெறும் தாக்கத்திற்கான ஈடுசெய்த சமன்பாட்டை எழுதுக.
d. இப்பரிசோதனையின் எடுகோள்கள் 2 ஐக் குறிப்பிடுக.

04. குறித்த செறிவுடைய கரைசல் நியமக்கரைசலாகும். இவை அமில, மூல கரைசல்களாகவோ நடுநிலைக்கரைசல்களாகவோ காணப்படலாம். சுண்ணாம்பு கல்லின் காபனேற்று உள்ளடக்கத்தை அறியும் பொருட்டு நியம கரைசலின் உதவியுடன் மேற்கொண்ட செய்முறை தரப்பட்டுள்ளது.
1) a. கல்சியம் காபனேற்றிற்கும் ஐதான ஐதரோக்குளோரிக் அமிலத்திற்கும் இடையிலான ஈடுசெய்த சமன்பாட்டை எழுதுக.
b. சுண்ணாம்புக் கல்லின் 16gஐ ஐதான ஐதரோக்குளோறிக் அமிலத்தின் $0.01 mol dm^{-3}$ செறிவுடன் நியமிப்பதன் மூலம் காபனேற்று நிறை வீதம் துணியப்பட்டது.
2) இச் செயன்முறையின் படிமுறைகளை எழுதுக.
இந்நியமித்தலுக்கு $100 cm^3$ ஐதான ஐதரோக்குளோறிக் அமிலம் தேவைப்பட்டது.
a. பயன்படுத்தப்பட்ட ஐதரோக்குளோறிக் அமிலத்தின் மூல் எண்ணிக்கை எவ்வளவு?
b. 16g சுண்ணாம்புக்கல்லிலுள்ள கல்சியம் காபனேற்றின் திணிவு எவ்வளவு?
சுண்ணாம்புக் கல்லில் கல்சியம் காபனேற்றின் நிறை வீதத்தைக் காண்க.
கல்சியம் காபனேற்றின் பயன்பாடுகள் 3 ஐக் குறிப்பிடுக.

### பௌதிகவியல்


05. 1) ஏற்றமுள்ள பொருட்களுக்கிடையே தள்ளுகை விசை, கவர்ச்சி விசை என்பன தொழிற்படுகின்றன.
a. எவ்வகை விசையானது ஏற்றமுடைய பொருட்களுக்கு இடையில் எப்போதும் தோற்றுவிக்கப்படும் விசை எது?
b. பொருளொன்றை மின்னேற்றக்கூடிய முறைகளுள் மின் தூண்டலும் ஒன்றாகும். மற்றைய இரு முறைகளை எழுதுக?
c. பொன்னிலை மின்காட்டி தரப்பட்டுள்ளது. பகுதிகளைப் பெயரிடுக.




A ................................ B ................................
C ................................ D ................................

d. பொன்னிலை மின்காட்டியிற்கு நேர்மின்னேற்றம் செய்முறையின் படிமுறைகளை எழுதுக.
e. பொன்னிலை மின்காட்டியின் பயன்பாடுகள் 2 ஐக் குறிப்பிடுக.
f. ஏற்ற பரிசோதனைகளின்போது கவனத்திற்கொள்ள வேண்டிய இரு சூழல் நிபந்தனைகளை எழுதுக.
g. நிலை மின் அன்றாட வாழ்வில் பயன்படும் சந்தர்ப்பம் ஒன்றிற்கு உதாரணம் தருக.
2) ஏற்றங்களைச் சேமித்து வைப்பதற்கு பயன்படும் சாதனம் கொள்ளளவி ஆகும்.
a. கொள்ளளவியின் நியம குறியீட்டை வரைக.
b. கொள்ளளவியின் கொள்ளளவு தங்கியுள்ள காரணிகளை எழுதுக.
c. கொள்ளளவி ஒன்றின் பயன்பாடுகள் 2 ஐக் குறிப்பிடுக.
d. கொள்ளளவி ஒன்றில் 222 எனக்குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் கொள்ளளவு யாது?

06. வழுக்கி எறியி (Slide Projector) ஒன்றின் அமைப்பு தரப்பட்டுள்ளது.




1) a. வழுக்கி எறியியின் பயன்பாடு ஒன்றைக் குறிப்பிடுக.
b. பொருளானது Bஇல் வைக்கப்படும் நிலையைக் குறிப்பிடுக.
c. விம்பத்தின் தெளிவினை அதிகரிக்கக்கூடிய இரு முறைகளைக் குறிப்பிடுக.
d. கமராவில் தோன்றும் விம்பம் வழுக்கி எறியியின் விம்பத்திலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது.
2) நவீன தொழில்நுட்ப விருத்தியாக நனோத் தொழில்நுட்பவியல் அமைகின்றது. இதன்போது காபனின் பிறதிருப்பங்கள் மிக நுண்ணிய நிலையில் பயன்படுகின்றது.
a. ஒரு நனோமீற்றர் எத்தனை மீற்றராகும்?
b. ரெனிஸ் மட்டை தயாரிப்பில் காபனின் நனோக்குழாய்கள் பயன்படுகின்றமைக்கான காரணங்கள் 2 ஐக் குறிப்பிடுக.
c. ஒரு சாதாரண ஊசிக்குழாயினூடாக குருதியினுட் ஊட்செலுத்தப்பட்டு தானியங்கு நனோ பொறிகளின் செயற்பாடு மூலம் மருத்துவத்துறையில் நோய்கள் தீர்க்கப்படுகின்றன. அத்தகைய இரு நோய்களை எழுதுக.
3) தொடர்பாடலில் ஒளியியல் நார்களினூடான கடத்தல் விரும்பப்படுகின்றது.
a. மேலே குறித்த கடத்தலின் அனுகூலமான இயல்புகள் 2 ஐக் குறிப்பிடுக.
b. ஒளியியல் நார்களினூடாக தகவல்களை அனுப்புதல், தகவல்களை வாங்குதல் ஆகியவற்றுக்காக பயன்படும் இலத்திரனியல் கூறுகளை எழுதுக.
c. npn திரான்சிஸ்ரர் ஒன்றினை கோடலுறச் செய்தலிற்கான சுற்றுவரிப் படத்தினூடாக விளக்குக.

-நிறைவுற்றது-

## தமிழ்மொழியும் இலக்கியமும் - III | 22-T-III

01. சுருக்கமான விடை தருக.
01) பொருள் தீர்ந்த பொற்சாந்தும் செல்வார் மருள் தீர்ந்த மாசு அறு காட்சியவர்
அ. பொச்சாந்து என்பதன் கருத்து யாது?
ஆ. இக்குறட்பாவின் கருத்து யாது?
02) முடியுடை மூவேந்தர் யாவர்?
03) 1. எப்படியான நண்பர் சிறந்தவர் என ஔவையார் கூறியுள்ளார்.
2. இது எந்நூலில் இடம்பெற்றுள்ளது?
04) நாண்மணிக் கடிகை என்ற நூலை இயற்றியவர் யார்?
05) நளவெண்பாவின் காண்டங்கள் யாவை?
06) நாலடியாரில் குறிப்பிடப்படும் கல்வி பற்றிய கருத்து யாது?
07) நாள்தோறும் ஆராய்ந்து ஆட்சி செய்யாத அரசனின் நாடு எதனை இழக்கும்?
08) ''நட்சத்திரக் குழந்தைகள்'' என்னும் சிறுகதையின் ஆசிரியர் யார்?
09) பின்வரும் பாடலடிகளின் சிறப்பினை விளக்குக.
''கயற்கண்ணியே சுரம் கால் வைப்பதே''
''ஓடாத தேரில் வெறும் கூடு வருகுது''
10) பின்வரும் பாடலடியினை சந்தி பிரித்து எழுதுக. அம்பொன்றுவில் லொடிதல் நான் அறுதல் நான் கிழவன்.

02. பின்வரும் பாடலின் பொருள் எழுதி கோடிடப்பட்ட பகுதியின் சிறப்பு எழுதுக.
அ. விண்ணரச ரெல்லாரும் வெள்கி மனஞ்சுளிக்கக்
கண்ணகல் ஞாலம் களிகூர - மண்ணரசர்
வன்மாலை தம்மனத்தே சூட வயவேந்தைப்
பொன்மாலை சூட்டினாள் பொன்.
ஆ. ஓடுகிற மேகங்காள்! ஓடாத தேரில் வெறும்
கூடு வருகுதென்று கூறுங்கள் - நாடியே
நந்திச்சீ ராமனுடை நல்நகரில் நல்நுதலைச்
சந்திச்சீர் ஆமாகில் தான்.
இ. ஆய்மணிப் பைம்பூண்
அலங்குதார்க் கோதையைக்
காணிய சென்று
கடைவதேன் - நாணிப்
பெருஞ்செல்வர் இல்லத்து
நல் கூர்ந்தார் போல
வருஞ்செல்லும் பேருமென்
நெஞ்சு!
ஈ. காரென்று பேர் படைத்தாய் கனத்துறும்போது
நீரென்று பேர் படைத்தாய் நெடுந்தரையில் வந்ததற் பின்
வாரொன்று மென்முலையா ராச்சியர்கை வந்ததற்பின்
மோரென்று பேர்படைத்தாய் முப்பேரும் பெற்றாயே.

03. 1) ஒரு பதிவிரதையின் சரிதம் என்ற கதைப்பகுதியிலிருந்து பின்வருவனவற்றுக்கு விடை தருக.
1. பாத்திரக்குணப்பண்புகள்.
2. பெற்றுக்கொண்ட படிப்பினைகள்.
அல்லது
2) ஒப்பில்லாமணிப்புலவர் தன்னை ஆதரித்த சடையப்ப வள்ளரின் நாட்டுச் சிறப்பு, கொடைச்சிறப்பு என்பவற்றை எவ்விதம் புகழ்ந்து நன்றிக்கடன் செலுத்தினார்.

04. கவிச்சக்கரவர்த்தி என்ற நாடகத்திலிருந்து,
1) கம்பரின் பாத்திரப்படைப்பு.
2) ஒட்டக்கூத்தரின் பாத்திரப்படைப்பை மதிப்பிடுக.

* இல. 5ஆம், ✱ஆம், 7ஆம் வினாக்களில் ஒன்றைத் தெரிவுசெய்க.
05. ''விடியுமா'' என்ற சிறுகதையில் வரும்,
1) உம்மைக்கவர்ந்த பாத்திரப்படைப்பு.
2) கரு.
3) மொழிநடை என்பவற்றைக் குறிப்பிடுக.

06. முத்தொள்ளாயிரம் என்ற பாடற்பகுதியில் இருந்து பின்வருவனவற்றுக்கு விடை தருக.
1) சேரமன்னனின் யானையின் வீரம்.
2) சோழ மன்னனின் யானையின் வீரம்.

07. பாரதியார் கவிநயம் என்ற பாடற்பகுதியில் பின்வருவனவற்றுக்கு விடை தருக.
அ. மழலை இன்பத்தை மானிடர்க்கு உணர்த்தும் பெருமை பாரதிக்குண்டு உதாரணத்துடன் விளக்குக.
ஆ காதலர்களுடைய மனோபாவங்களைக் கண்ணன் பாட்டில் நன்கு காணலாம் உதாரணம் தந்து எழுதுக.

-நிறைவுற்றது-

ஆசிரியர்:- செல்வி.சிவபுண்ணியம் சந்திரவதனா,
மன்/சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி,
மன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 14 வயதுப் பிரிவுக்கான உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையும் யாழ்.இந்துக் கல்லூரியும் மேதிக்கொள்ளும் காட்சிகள் இவை. *(படங்கள்:நேசன்)*

## பாடசாலை அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டம்:
## வலய மட்டத்தில் 14 வயது, 16 வயதுப் பிரிவுகளில் சம்பியன் வென்று அசத்தியது நாவாந்துறை றோ.க.

யாழ்ப்பாணம், நவ.4

யாழ்.கல்வி வலயப் பாடசாலை அணிகளின் 14 வயது, 16 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையே நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இரண்டு பிரிவுகளிலும் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை சம்பியனாகியது.

யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற 14 வயதுப் பிரிவு அணிகளின் இறுதியாட்டத்தில் யாழ்.இந்துக் கல்லூரியும், நாவாந்துறை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையும் மோதிக் கொண்டன.

முதல் பாதி ஆட்டம் ஆரம்பமாகி இரண்டாவது நிமிடத்தில் நாவாந்துறை றோ.க. அணி வீரர் ஜெனற், தனது அணிக்காக முதலாவது கோலினைப்பெற்றுக் கொடுத்தார்.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் இரண்டு அணிகளும் கோல் பெறவேண்டும் என்ற உற்சாகத்தோடு களமிறங்கின.

ஆட்டம் ஆரம்பமாகி 4 ஆவது நிமிடத்தில் யாழ்.இந்துக் கல்லூரி வீரர் கிசோக் தனது அணிக்காக முதலாவது கோலினை அடித்தார்.

மேலும், கோல்கள் போட வேண்டும் என்ற துடிப்புடன் விளையாடிய நாவாந்துறை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை அணி வீரர் ஜெனற், 11 ஆவது நிமிடத்தில் தனது அணிக்காக இரண்டாவது கோலினைப் பெற்றுக்கொடுத்தார்.

ஆட்ட நிறைவில் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை 2:1 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டியது.

மூன்றாவது இடத்துக்கான போட்டியில் யாழ்.மத்திய கல்லூரியும், சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் மோதிக் கொண்டன.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி எதிர்த்து விளையாடிய யாழ்.மத்திய கல்லூரி அணியை 1:0 என்ற கோல் கணக்கில் வென்று மூன்றாவது இடத்தைப் பெற்றது.

யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற 16 வயதுப் பிரிவுக்கான இறுதி ஆட்டத்தில் யாழ். மத்திய கல்லூரியும், நாவாந்துறை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை அணியும் மோதிக் கொண்டன.

நாவாந்துறை றோ.க. அணி ஒரு கோலினைப் பெற்று முன்னிலையில் காணப்பட்ட நிலையில் முதல் பாதி ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பமான 6 ஆவது நிமிடத்தில் நாவாந்துறை றோ.க. அணி இரண்டாவது கோலினையும் பெற்றுக் கொண்டது.

8 ஆவது நிமிடத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணிக்கு தண்டனை உதை ஒன்று கிடைத்தது. அதனை யாழ்.மத்திய கல்லூரி அணி சரியாகப் பயன்படுத்தி தனது அணிக்காக முதல் கோலினைப் பெற்றுக் கொண்டது.

ஆட்ட நிறைவில் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை அணி 2:1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

மூன்றாவது இடத்திற்கான ஆட்டத்தில் பங்கு கொள்ளவிருந்த ஊரெழு கணேசா வித்தியாலயம் போட்டிக்கு சமுகமளிக்காமையால் கொக்குவில் இந்துக் கல்லூரி அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது. (50-23-86)

## தாச்சிப் போட்டி

வலி.வடக்கு, நவ.04

யாழ்.மாவட்டத் தாச்சி சங்கம் வர்த்தக வங்கி, இலங்கை வங்கி ஆகியவற்றின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட தாச்சி கழகங்களுக்கு இடையே நடத்தும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று புதன்கிழமை பி.ப. 4.30 மணிக்கு சுதுமலை யுவசக்தி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும் போட்டி ஆட்டத்தில் இணுவில் அண்ணா விளையாட்டுச் கழகமும் மானிப்பாய் பெஸ்ரோம் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (50-86)




## கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை வீழ்த்தி 18 வயதுப் பிரிவில் சம்பியன் வென்றது பற்றிக்ஸ்

யாழ்ப்பாணம், நவ.04

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளின் 18 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையே நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி சம்பியனாகியது.

யாழ்.மத்தியகல்லூரி மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணியும், சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமான முதல் விறுவிறுப்பான ஆட்டத்தினை இரு அணிகளும் வெளிப்படுத்தின.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி வீரன் ஜக்சன் தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தினை பயன்படுத்தி முதலாவது கோலை அடித்தார். ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டபோது சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 1:0 என்ற கோல்களில் முன்னிலையில் இருந்தது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல்கள் பெறவேண்டும் என்ற ஆர்வத்துடன் களம் இறங்கின.

இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பித்து 14ஆவது,17 ஆவது நிமிடங்களில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணிவீரன் ஜக்சன் தனது அணிக்காக இரண்டு கோல்களைப் போட்டார்.

இதன்போது கொக்குவில் இந்துக்கல்லூரி அணி கோல்கள் பெற எடுத்த முயற்சிகள் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியினரால் முறியடிக்கப்பட்டன.

இந்தவேளையில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கு எதிரணியின் தண்டனைப் பரப்பிற்குள் ஏற்பட்ட குற்றத்திற்காகத் தண்டனை உதை வழங்கப்பட்டது. யூலியஸ் அந்த உதையைக் கோலாக மாற்றி தனது அணிக்கான 4ஆவது கோலினை பெற்றுக்கொடுத்தார்.

எனினும் ஆட்டம் முடிவடைவதற்கு இரண்டு நிமிடங்கள் இருக்கும் நிலையில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி வீரர் யூட் தனது அணிக்கான 5ஆவது கோலினை அடித்தார். ஆட்டமுடிவில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

மூன்றாவது இடத்திற்கான ஆட்டத்தில் பங்குபற்றவிருந்த உரும்பிராய் இந்துக்கல்லூரி அணி மைதானத்திற்கு சமுகம் தராததனால் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரிக்கு வெற்றி வழங்கப்பட்டது. (50-86-23)

## 14 வயதுப் பிரிவு உதைபந்தாட்டம்: ஊர்காவற்றுறை அன்ரனிஸ் சம்பியன்

யாழ்ப்பாணம், நவ.04

ஊர்காவற்றுறை கோட்டமட்ட உதைபந்தாட்டப் போட்டிகள் காரைநகர் யாழ்ரன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் இறுதிப்போட்டியில் ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ் கல்லூரியும், காரைநகர் சுந்தரமூர்த்தி வித்தியாலயமும் மோதிக்கொண்டன.

ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ் கல்லூரி அணியினர் கோல்களைப் பொழிந்து புதிய சாதனையை ஊர்காவற்றுறை கோட்ட மட்டத்தில் படைத்தனர்.

போட்டி ஆரம்பமாகியதும் சென்.அன்ரனிஸ் அணியினர் மிகவும் உற்சாகத்துடனும், விறுவிறுப்பாகவும் ஆட்டத்தை வெளிப்படுத்தினர். முதல் பாதி ஆட்டத்தை 2:0 என்ற கணக்கில் அவர்கள் முன்னிலை வகித்தனர்.

பின்னர் இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பமாகியதும் சென்.அன்ரனிஸ் அணியின் ஆட்டத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் சுந்தரமூர்த்தி வித்தியாலய அணி தடுமாறியது. ஆனால் சென்.அன்ரனிஸ் அணி தனக்குக் கிடைத்த சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி அடுத்தடுத்து 4 கோல்களைப் போட்டு தனது வெற்றிக்கு உறுதி செய்தது. காரைநகர் சுந்தரமூர்த்தி வித்தியாலயத்தை 6:0 என்ற கணக்கில் வீழ்த்தி ஊர்காவற்றுறை கோட்டமட்ட சாதனை சம்பியனாகியது சென்.அன்ரனிஸ். (50-325)

## கொக்குவில் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்துத் திடலுக்கு மின்னொளி

வலி.வடக்கு, நவ.04

கொக்குவில் இந்துக்கல்லூரியில் மின்னொளி கூடைப்பந்தாட்டத்திடல் திறப்பு விழா அதிபர் அ.அகிலதாஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கூடைப்பந்தாட்டத்திற்கான மின்னொளியை சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வையொட்டி கல்லூரி மாணவிகளின் கலை நிகழ்வுகளும், ஆண்கள், பெண்களுக்கான கூடைப்பந்தாட்ட காட்சிப் போட்டிகளும் இடம்பெற்றன.(50-86)

## சுதுமலை ஐங்கரன் - மயிலிட்டி ஒற்றுமை தாச்சிப் போட்டி சமநிலையில் முடிந்தது

வலி.வடக்கு, நவ.04

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம் நடத்தி வரும் தாச்சிப் போட்டியின் ஆட்ட மொன்று வெற்றி தோல்வி இன்றி சமநிலையில் முடிவடைந்தது.

சுதுமலை யுவசக்தி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற போட்டி ஆட்டத்தில் சுதுமலை ஐங்கரன் விளையாட்டுக்கழகமும், மயிலிட்டி ஒற்றுமை விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன.

இப் போட்டியில் இரு அணிகளும் தலா 05 பழங்களைப் பெற்று ஆட்டம் சமநிலையில் நிறைவு பெற்றுள்ளது.

மற்றுமொரு சிநேக பூர்வப் போட்டியில் யுவசக்தி விளையாட்டுக்கழகமும் கைதடி சரஸ்வதி விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன. இதில் யுவசக்தி விளையாட்டுக்கழகம் 09:02 பழம் என்ற அடிப்படையில் சரஸ்வதி விளையாட்டுக் கழகத்தை வென்றது. (50-86)

## நெடுந்தீவில் சிறுவர்களுக்கான உள்ளக விளையாட்டரங்கு

யாழ்ப்பாணம், நவ.4

நெடுந்தீவு பிரதேசத்தில் சிறுவர்களுக்கான உள்ளக விளையாட்டரங்கு புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ளது.

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் ந. திரிலிங்கநாதன் இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளார்.

நெடுந்தீவு பிரதேசத்தில் நவீன வடிவிலான சிறுவர் உள்ளரங்கு விளையாட்டு மைதானம் அமைப்பதற்காக 6லட்சத்து 50ஆயிரம் ரூபா நிதியினை வடமாகாண நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்கள ஆணையாளர் வழங்கியுள்ளார்.

விரைவில் நெடுந்தீவு பிரதேச சபை செயலாளர் சோ.தம்பிராசா ஊடாக இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது. (50- 302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செவ்வரத்தம் பூ ஒரு வண்ணத்திலேயே மலர்வது வழக்கம். ஆனால் திருநெல்வேலிப் பகுதியில் உள்ள ஒருவரின் வீட்டில் வழக்கத்தை மீறி இரண்டு வர்ணங்களைக் கொண்ட இதழ்களோடு மலர்ந்துள்ள இப்பூ பலரையும் மூக்கின் மேல் விரலை வைத்து ஆச்சரியத்துக்குள் மூழ்க வைத்துள்ளது. ஆயினும் ஒருநாள் மட்டுமே இந்தப் பூ உயிர் வாழ்வதுதான் சோகம்!

(படமும் தகவலும்: பரமேஸ்வரன்)



நெடுந்தீவு- தென்னிந்தியத் திருச்சபையின் பகல் பராமரிப்பு நிலையத்தினரால் சிறுவர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் கலந்துகொண்ட சிறுவர்களையும் - நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்களையும் படத்தில் காணலாம்.

(படம்: இரா.சுதா)




## இயற்கையை நேசி

அணுஆயுதம்
அதனால்
ஆபத்து பூமிக்கு
அணுஆயுதசோதனை
பூமியின்
ஆயுளைக் குறைக்கும்
சுற்றும் பூமியின் கால
நிலையை சுற்றுச்
சூழலே நிர்ணயிக்கும்
சுழலும் பூமிக்கு
மாசுபுரிந்தால்
மனிதா நீ
சுகத்தை இழப்பாய்
இயற்கை
வட்டத்தைப்பேணு
பூமியில்
இயல்பு வாழ்க்கை
கிடைக்கும்
இயற்கையோடு
இணைந்திரு பூமியில்
செயற்கையை நீ
வெறுத்திடு
உனது உலகம் இது
இதில்
உயிரினங்கள் உன்
உடன்பிறப்பு
இயற்கை ஈன்றது
உன்னை
அழிப்பதற்கல்ல
இயற்கையைப்
பாதுகாக்கவே
கற்பகதருவை நடு
அது காலமெல்லாம்
கைகொடுக்கும்
பனையை வெட்டாதே
நீ படுகுழியில்
விழுந்திடாதே.

முருகேசு ரகுபாலன்,
சுவிஸ்










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் உள்நாட்டு விடயங்களைத் தீர்ப்பதற்கு சர்வதேச நீதிமன்றத்தின் தலையீடு தேவையில்லை

## ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சொல்கிறார்

கொழும்பு, நவ.4

இலங்கையின் உள்நாட்டு விடயங்களைத் தீர்த்துவைப்பதற்கு சர்வதேச நீதிமன்றத்தின் எந்தவொரு தலையீடும் தேவையில்லை என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பு நீதிமன்றத் தொகுதியில் சட்டத்தரணிகளுக்கான கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

எம்மிடம் உள்நாட்டுப் பிரச்சினைகளைக் கையாள்வதற்கு ஏற்றவகையில் சிறந்த சட்டமுறையுள்ளது. எனவே வெளிநாட்டு நீதிமன்றங்களோ, சர்வதேச நீதிமன்றங்களோ எமது விடயத்தில் தமது மூக்கை நுழைக்க வேண்டிய அவசியமில்லை.

இலங்கை ,அரசு ஒருபோதும் நீதித்துறையின் நடவடிக்கையில் தலையிட மாட்டாது.

நாட்டில் புரையோடிக் காணப்பட்ட பயங்கரவாதத்தால் கடந்த முப்பது வருடகாலம் சட்டத்துறைக்கு அச்சுறுத்தலாக விளங்கியது.

நாட்டைத் துப்பாக்கி முனையில் அடக்கி வைத்திருந்தார்கள். ஆனால் இந்தத் தீய சக்திகளை அரசு முறியடித்து நாட்டில் ஒழுங்கையும் சட்டத்தையும் நிலைநாட்டியுள்ளது.

நீதியான நாட்டைக் கட்டியெழுப்புவதன் மூலமே நாட்டில் சுதந்திரத்தையும், இறையாண்மையையும் பாதுகாக்க முடியும்.

சட்டத்தைப் பாதுகாப்பது குறித்து எமக்குக் கௌரவமிக்க வரலாறு ஒன்று இருக்கின்றது.

நாட்டிலுள்ள மக்களுக்காகச் சட்ட ஒழுங்கை நடைமுறைப்படுத்த உயர் நீதிமன்றம் உட்பட சட்டக் கட்டமைப்பொன்று இருந்த வேளையில் அன்று நாட்டில் வேறொரு பிரிவில் புலிகள் அமைப்பிற்கான நீதிமன்றம் ஒன்றும் இயங்கியது. அந்த நிலைமை காரணமாக நாட்டின் சட்ட ஒழுங்கு நகைப்புக்குள்ளாகியிருந்தது.



எனினும் இன்று சட்ட ஒழுங்கு சீர்குலைந்து போவதை நான் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை - என்றார். (அ-சி)

# நுகேகொடையில் சூறாவளி முப்பது வீடுகள் கடும் சேதம்

கொழும்பு,நவ.4

நுகேகொடை விஜயராமப் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் ஏற்பட்ட சூறாவளியால் 30 வீடுகள் சேதமடைந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இந்தச் சூறாவளி காரணமாக ஏற்பட்ட சேத விவரங்கள் சரியாக மதிப்பிடப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட தாழமுக்கம் காரணமாகவே இந்தச் சூறாவளி ஏற்பட்டிருக்கலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

(சி)

# ஆள்கடத்திய 6 இலங்கையர் வெளிநாடுகளில் கைதாகினர்

கொழும்பு,நவ.4

சர்வதேச ஆள்கடத்தல் கும்பலைச் சேர்ந்த இலங்கையர்கள் ஆறுபேர் வெளிநாடுகளில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஐவர் மலேசியாவில் வைத்து அந்த நாட்டுப் பொலிஸாரால் கடந்த சனிக்கிழமை கைதுசெய்யப்பட்டனர். ஐவரிடமும் மேற்கொள்ளப்பட்ட விசாரணையை அடுத்து மலேசியப் பொலிஸார் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் ஆறாவது நபர் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் வைத்து இன்டர்போல் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மலேசியாவில் வேலை பார்த்த சிறுவன் ஒருவன் கடந்த 26 ஆம் திகதி கடத்தப்பட்டிருக்கிறான். கடத்தல்காரர்கள் பிரான்ஸில் உள்ள சிறுவனின் தந்தையுடன் தொடர்பை ஏற்படுத்தி முதலில் 50 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் வரை கப்பம் கேட்டிருக்கின்றார்கள். பின்னர் ஐயாயிரம் அமெரிக்க டொலர்களைக் கப்பமாகப் பெற்றுக்கொண்டு சிறுவனைக் கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு விடுவித்தனர்.

விடுதலையான சிறுவன் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் மலேசியப் பொலிஸார் சிறுவன் தடுத்து வைக்கப்பட்டிருந்த வீட்டை ஆக்கிரமித்து ஆறு கடத்தல்காரர்களையும் கைதுசெய்தனர்.

அங்கு கைதுசெய்யப்பட்டவர்களில் ஐவர் இலங்கையர் என்றும் ஒருவர் அந்த நாட்டுப் பிரஜை என்றும் மலேசியப் பொலிஸாரின் விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது. ஐந்து இலங்கையர்களும் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் மலேசியப் பொலிஸாரின் அறிவுறுத்தலின் பேரில் பாரிஸில் வைத்து மற்றுமொரு இலங்கையர் இன்டர்போல் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (சி)

# வெளிநாடுகளிலுள்ள இலங்கையரை விரைவில் சந்திக்கின்றார் ஜனாதிபதி

கொழும்பு,நவ.4

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெளிநாடுகளிலுள்ள இலங்கையின் முக்கியஸ்தர்களைக் கொழும்புக்கு வரவழைத்து தற்போதைய அமைதிச் சூழலில் இலங்கையை மீளக் கட்டியெழுப்புவது தொடர்பாகப் பேச்சுகளை நடத்தவுள்ளார். இப்பேச்சுகள் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் எதிர்வரும் 14ஆம், 15 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்கள் ஜனாதிபதியுடனான இச்சந்திப்புக் குறித்து சுமார் இரு மாதங்களுக்கு முன்பிருந்தே அந்தந்த நாடுகளிலுள்ள இலங்கையர்களுக்கு அறிவிப்புகளை மேற்கொண்டுள்ளன. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த இருநாள் சந்திப்புக்கான ஏற்பாடுகளை செவ்வனே மேற்கொள்வதற்காக சந்திரபால லியனகே என்பவரைப் பிரதான ஒருங்கிணைப்பாளராகவும் ஊடகப்பணிப்பாளராகவும் நியமித்துள்ளார்.

சந்திரபால லியனகே அலரி மாளிகையில் இடம்பெற இருக்கும் இச்சந்திப்புக் குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:

இச்சந்திப்புக்கான அனைத்து ஏற்பாடுகளும் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. சுமார் 200 இலங்கையர்கள் வரை ஜனாதிபதியைச் சந்தித்து உரையாடுவார்கள். போருக்குப் பின்னரான இலங்கையில் வங்கித்துறை, நிதித்துறை, முதலீட்டுத்துறை, சுற்றுலாத்துறை ஆகியவற்றை மேம்படுத்தி நாட்டை அபிவிருத்தி செய்தலில் வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களின் உதவிகள், ஆலோசனைகள், வழிகாட்டல்கள், பங்களிப்புகளைப் பெறுகின்றமையே இம்மாநாட்டின் பிரதான நோக்கமாகும் என்று கூறினார்.

ஆனால் ஜனாதிபதியுடனான இந்தச் சந்திப்பை வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தமிழர்கள் பெரும்பாலும் புறக்கணிப்பர் என்று கொழும்பிலுள்ள இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ-சி)

# பிஜித் தீவு செல்லும் இலங்கை நீதிபதிகள் ஆஸ்திரேலியாவுக்குள் போக முடியாது!

கொழும்பு, நவ.4

பிஜித் தீவில் கடமையாற்றும் இலங்கை நீதிபதிகள் அக்காலப் பகுதிக்குள் அவசர மருத்துவத் தேவைகளுக்காகக்கூட ஆஸ்திரேலியாவுக்குள் பிரவேசிக்க முடியாது என்று ஆஸ்திரேலிய அரசு தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

பிஜித்தீவில் நீதி, நிர்வாக நடவடிக்கைகளை மீளக்கட்டியெழுப்புவதற்காக இலங்கை நீதிபதிகள் குழுவொன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை பிஜித்தீவுக்குப் புறப்பட்டுள்ளது. அவர்கள் நேற்று முன்தினம் பிஜித்தீவைச் சென்றடைந்தனர்.

இக்குழுவினர் ஆஸ்திரேலியா ஊடாகவே முதலில் பிஜித்தீவுக்கு விமானம் மூலம் செல்ல இருந்தனர்.

அவர்கள் அதற்கான விசாவுக்காகக் கொழும்பிலுள்ள ஆஸ்திரேலியத் தூதரகத்துக்கு விண்ணப்பித்திருந்தனர். இந்த நிலையில் விசாவுக்காக விண்ணப்பித்திருந்த இலங்கை நீதிபதிகளுடன் ஆஸ்திரேலிய தூதரக அதிகாரிகள் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு பிஜித் தீவுக்குச் சென்று பதவியேற்க வேண்டாம் என்று வலியுறுத்தியுள்ளனர் என்றும் ஆஸ்திரேலியாவின் எதிர்ப்பையும் மீறி பிஜித் தீவுக்குச் சென்று கடமையைப் பொறுப்பேற்கும் நீதிபதிகள் அங்கு அவர்களின் பதவிக்காலம் முடிவடையும் வரை அவசர மருத்துவ தேவைக்காகக்கூட ஆஸ்திரேலியாவுக்குள் பிரவேசிக்க முடியாது என்றும் ஆஸ்திரேலியா எச்சரித்துள்ளதென்று பிஜித்தீவின் பிரதம நீதியரசர் தெரிவித்துள்ளார்.

பிஜித்தீவுக்கு ஆஸ்திரேலியா மூலம் இந் நீதிபதிகள் குழு செல்வதற்கான விசாவும் தூதரகத்தால் வழங்கப்படாததால் இலங்கையின் நீதிபதிகள் ஆஸ்திரேலியாவுக்குச் செல்லாமல் வேறு நாடொன்றினூடாகவே பிஜித்தீவுக்கு விமானப் பயணம் மேற்கொண்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (சி)

# தேர்தல் பிரசாரத்தில் அரச சொத்துக்கள் பாவிக்கப்படுவதைத் தடுக்கக்கோரி வழக்கு

## தயாராகின்றது ஐ.தே.கட்சி

கொழும்பு,நவ.4

எதிர்வரும் ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் அரச சொத்துகளைத் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்குப் பாவிப்பதைத் தடுப்பதற்கான உத்தரவொன்றைப் பிறப்பிக்கக் கோரி ஐக்கிய தேசியக் கட்சி நீதிமன்றில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்யத் திட்டமிட்டுள்ளது. அடுத்த வாரமளவில் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்று அக்கட்சியின் எம்.பியும் பொதுச் செயலாளருமான திஸ்ஸ அத்தநாயக்க ஞாயிறன்று உதயனுக்குத் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

நடந்து முடிந்த மாகாணசபைத் தேர்தல்கள் அனைத்திலும் அரச சொத்துகள் அனைத்தையும் அரசு முற்றுமுழுதாகப் பயன்படுத்தியது. வாகனங்கள், ஊடகங்கள் உள்ளிட்ட அரச சொத்துக்கள் இவ்வாறு பயன்படுத்தப்பட்டன.

இச்சொத்துகள் பயன்படுத்தப்பட்டதன் மூலம் மக்களின் பணம் விரயமாக்கப்பட்டுள்ளது. எதிர்க்கட்சிகள் மீது சேறு பூசுவதற்கே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. எதிர்க்கட்சிகளைத் தாக்குவதற்காக இவ்வாறு அரச சொத்துகள் விரயமாக்கப்படுவதை எந்நிலையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இது தொடர்பாக நாம் தேர்தல் காலங்களில் பல தடவைகள் மக்கள் மத்தியில் தெளிவுபடுத்தி வந்தோம். இப்பாவனையைத் தடுப்பதற்காக நாம் பல அழுத்தங்களைப் பிரயோகித்தோம். எதையும் அரசு கவனத்தில் எடுக்காது தான்தோன்றித் தனமாகச் செயற்பட்டது.

நடந்து முடிந்த மாகாணசபைத் தேர்தல்களைவிட நடக்கப்போகும் நாடாளுமன்ற மற்றும் ஜனாதிபதித் தேர்தல்கள் பெரியவை. அத்தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக அரச சொத்துகளைப் பயன்படுத்தினால் அது இந்நாட்டுக்குப் பாரிய நட்டத்தை ஏற்படுத்தும்.

ஆகவேதான், எதிர்வரும் நாடாளுமன்ற மற்றும் ஜனாதிபதித் தேர்தல்களில் அரச சொத்துகளை அரசு பயன்படுத்தாதிருப்பதற்கு நீதிமன்றம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரி நாம் அடுத்தவாரமளவில் நீதிமன்றில் வழக்கொன்றைத் தாக்கல் செய்யத் திட்டமிட்டுள்ளோம் - என்றார். (சி)



வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், அவரது பாரியார் திருமதி கௌரி சண்முகலிங்கன், பாடசாலை அதிபர் ஆகியோர் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் அழைத்துவரப்படுவதை முதலாவது படத்திலும் பிரதம விருந்தினர் மங்கள விளக்கேற்றுவதையும் அவரது பாரியார் கௌரி சண்முகலிங்கன் மாணவி ஒருவருக்குப் பரிசில் வழங்குவதையும் அடுத்துள்ள படங்களிலும் காணலாம். (படங்கள்: வடநம்பி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...த்துகின்றோம்



இ.ரஜனிகாந் | க.சிவாஜினி | அ.சோபனா | த.பிரபாலினி | சு.மகீரன் | நர.குமணதாசன் | மை.மகிந்தன் | ந.பிரதாப் | வே.ஜெகப்பிரதா | இ.பிறேம்குமார்

ப.விஜயராஜ் | பா.சர்மினி | த.யோகநாத் | தி.சந்திரிகா | க.தாட்சாயினி | ம.கிருபாகரன் | ச.அமுதினி | சு.சுவர்ணா | ச.சசிக்காந் | த.சயந்தினி

ந.கருணேஸ்வரி | சோ.சர்மிளா | சோ.பாரதி | ப.செந்தூரன் | க.கிரிகரன் | ந.துஷியந்தன் | சி.அனந்தரூபி | நா.சுபாசினி | அ.பத்மாஜினி | பூ.ரஜீதன்

க.பாலரிஷி | ந.தனேஸ் | சி.மயூரன் | நா.ராகினி | பா.ரஞ்சித் | சி.அபிராமி | சி.பிருந்தன் | ப.தயாபரி | இ.காண்டீபன் | ச.லோகநாதன்

து.சுரேந்திரன் | கி.கௌரி | த.றிபோசிகா | ச.தர்சினி | ச.மயூரபிரியா | த.கமலரூபன் | லோ.றமா | ய.சுதர்சினி | கு.சந்திரமோகன் | பா.மதனரூபி

யோ.சுபாசினி | சி.செந்தூரன் | இ.ராஜநந்தினி | சி.கிருபாநந்தி | த.மாலினி | பா.பாலமுரளி | ம.ருவீன்சலஸ் | ம.சுரேகா | செ.றஞ்சித்குமார் | ச.நளினி

சி.பிரதீபா | சோ.லக்சிகா | ச.சிவலட்சுமி | தி.ராஜ்குமார் | தி.ஜாமினி | சி.நர்த்தனா | சி.ஞானகரன் | க.கபிலன் | அ.அலையரசி | ந.பிருந்தா

த.மதுமதி | க.பவீந்திரன் | வே.பிரியதர்சினி | தி.துஷிதா | ந.கஜவதனி | அ.ரவீந்திரா | க.சஞ்ஜீபன் | ப.சாந்தி | து.அபிராமி | செ.காயத்திரி



சோ.கபிலன்

இன்று (04.11.2009) புதன்கிழமை கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மண்டபத்தில் நடைபெறும் இலங்கை உயர் தொழில் நுட்பவியல் நிறுவன 6 ஆவது பட்டமளிப்பு வைபவத்தில் HNDA, HNDM, HNDE, HNDBS பட்டம் பெறும் யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பவியல் நிறுவன பழைய மாணவர் சங்க அங்கத்துவ மாணவர்களையும், பட்டம் பெறும் ஏனைய மாணவர்களையும் மேலும் பல பட்டங்கள் பெற்றுச் சிறப்படைய வாழ்த்துகின்றோம்.

## ALUMNI ASSOCIATION

**JAFFNA ADVANCED TECHNOLOGICAL INSTITUTE,**

**No. 665/2, BEACH ROAD, JAFFNA.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி நல்லூர்ப் பிரதேச செயலகமும் பிரதேச சிறுவர் சபையும் நடத்திய சிறுவர் தின விழாவில், யாழ்.மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கத்திற்கு சிறுமி ஒருவர் மலர்மாலை அணிவிப்பதையும், யாழ்.பொலிஸ் நிலைய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லக்ஸ்மன் பண்டார மங்களவிளக்கேற்றுவதை முதலிரு படங்களிலும் காணலாம்.

நல்லூர்ப் பிர தேச செயலர் பா.செந்தில்நந்தனன், சிறுமி த.கவிப்பிரியா ஆகியோர் உரை யாற்றுவதையும் சிறுமிகளின் நடன நிகழ்வையும், நிகழ்வில் கலந்து கொண்ட சிறுவர்களையும் அடுத்துள்ள படங்களில் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

# நவாலி வடக்கு, நவாலி தெற்கு கிராமங்கள் அபிவிருத்தியின்றி பின்தங்கி உள்ளன

## நடவடிக்கை எடுக்குமாறு மீள் எழுச்சித் திட்டப் பணிப்பாளரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ.4

வலி.தென்மேற்குப் பிரிவி ) அபிவிருத்தியின்றி சகல துறைகளிலும் பின்தங்கியுள்ள நவா வடக்கு, நவாலி தெற்குக் கிராமங்கள் மீள் எழுச்சித் திட்டத்தின்கீழ் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

இவ்வாறு நவாலி- ஹேமலதா செல்வராஜா சிறுவர் ஞாபகார்த்த நிதியத்தின் தலைவர் வலி.தென்மேற்குப் பிரதேச செயலர் ம.ஜெகூ ஊடாக யாழ்.செயலக மீள் எழுச்சித் திட்ட பிரதித்திட்டப்பணிப்பாளர் வே.விசுவலிங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்.

நவாலி வடக்கு, நவாலி தெற்கு மீள் எழுச்சி பற்றிய பிரதித் திட்டப் பணிப்பாளருக்கு எழுதிய கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

வலி.தென்மேற்குச் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவு 28 கிராம அலுவலர் பிரிவினைக் கொண்ட பிரதேசம் ஆகும்.

இங்கு நவாலி வடக்கு J/134, நவாலி தெற்கு J/136 ஆகிய கிராமங்களும் அபிவிருத்தியில் பின்தங்கிக் காணப்படுகின்றன.

நவாலி வடக்கில் 796 குடும்பங்களும், நவாலி தெற்கில் 425 இற்கும் மேற்பட்ட குடும்பங்களுமாக மொத்தம் ஆயிரத்தி 221 குடும்பங்கள் வாழ்வாதாரம் மிகவும் பின்தங்கிய நிலையிலே காணப்படுகின்றது.

இவர்களின் அபிவிருத்தியில் உரிய அதிகாரிகள் கவனம் எடுக்க வேண்டும்-என்றுள்ளது. (203-302)

# வேலணையில் சிறுவர் முதியோர் தினவிழா

யாழ்ப்பாணம், நவ.4

வேலணைப் பிரதேசத்தில் கடந்த 29 ஆம் திகதி சிறுவர் மற்றும் முதியோர் தின விழா பிரதேச செயலாளர் நந்தகோபன் தலைமையில் நடைபெற்றது. இவ்வைபவத்தில் பிரதம அதிதியாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டார்.

அங்கு உரைநிகழ்த்திய அமைச்சர் கடந்த கால அனுபவங்களைக் கொண்டிருக்கின்ற முதியவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் எமது சமுதாயத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துவது அவசியம் என்றும் அதேநேரம் சிறுவர்களின் கருத்துக்களுக்கு செவிமடுத்து அவர்களது எதிர்கால வாழ்க்கையை செப்பனிட வேண்டிய பொறுப்பு எம்மிடம் உள்ளது என்றும் தெரிவித்தார்.

இவ்வைபவத்தின் போது புலமைப்பரிசில்களில் வெற்றிபெற்ற 7 மாணவர்களுக்கும், வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வந்த 25 மாணவர்களுக்கும், அங்கவீனமான 3 பேருக்கும் துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டதுடன் 11 அங்கவீனமான குடும்பங்களுக்கு சுயதொழில் முயற்சிக்கென தலா 50 ஆயிரம் ரூபா நிதி உதவியும் வழங்கப்பட்டமைகுறிப்பிடத்தக்கதாகும். (50)

# வவுனியா அருணாசலம் முகாம் பாடசாலையின் முடிவுகள்

யாழ்ப்பாணம்,நவ.4

வவுனியா அருணாசலம் நலன்புரி நிலையத்தில் இயங்கும் யுனிற் 24 ஆரம்பப்பாடசாலையில் இருந்து தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றியவர்களில் 18 பேர் சித்தியடைந்துள்ளனர் என அப்பாடசாலையின் அதிபர் திருமதி ரி.கணேசலிங்கம் தெரிவித்தார்.

செலஸ்ரீன் சதுர்ஷியா 175 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும் அருள்ராசா இமெல்டா 148 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் குணபாலன் டிலக்ஷன் 143 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் தட்டிச் சென்றுள்ளனர் என்று அவரால் மேலும் தெரிவிக்கப்பட்டது. (1)


ஸ்ரீ அம்மா பகவான் சரணம்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று (04.11.2009) புதன்கிழமை
கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த
சர்வதேச மாநாட்டு மண்டபத்தில்
(BMICH, COLOMBO) நடைபெறும்
"உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா"
(HNDA)
பட்டமளிப்பு விழாவில் பட்டம்பெறும்

**மகாதேவன் ரவிஷங்கர்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன்,
அவர் சீரும் சிறப்பும் பெற்று வாழ்வதற்கு எல்லாம் வல்ல
வண்-கிழக்கு, கலட்டி, அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகரின்
அருள்வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

அப்பா, அம்மா, மனியத்தான்,
Dr. நிரஞ்சன் - கமலாசனி குடும்பத்தினர் (திருகோணமலை),
மாலினி - முரளீதரன் குடும்பத்தினர் (வவுனியா),
சுதா - உதயகுமார் குடும்பத்தினர் (லண்டன்), விமலா - சித்தப்பா குடும்பத்தினர் (மந்திகை).
நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.

(90557)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையின்
அதிபர்
**திரு.தம்பிராசா அம்பலவாணர்**
அவர்கள் அதிபர் சேவை
தரம்- 2:I இற்கான
பதவியுயர்வு பெற்றமையைப்
பாராட்டி வாழ்த்துவதோடு,
மேலும் பதவியுயர்வுகள்
பெற்றுச் சீரும் சிறப்புடனும்
வாழ வாழ்த்துகின்றோம்.

உப அதிபர், ஆசிரியர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்,
யா/ மீசாலை விக்னேஸ்வரா ம.வி., மீசாலை.

(90509)



## கட்டடத் திறப்பு விழா

ராப் - பீ - நெக்டெப் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட
பருத்தித்துறை கிழக்கு
உற்பத்தி நிலைய கட்டடத் திறப்பு விழா

இடம் : இருதய வளாகம் தும்பளை, பருத்தித்துறை
காலம் : இன்று (04.11.2009) புதன்கிழமை
நேரம் : முற்பகல் 10.30 மணி
தலைவர் : திருமதி மரியசுசிலா தேவராசா
(பருத்தித்துறை கிழக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்)
பிரதம விருந்தினர் : உயர் திரு. S.M. குரூஸ்
(திட்டப் பணிப்பாளர் -நெக்டெப்)

அழகுக்கலை கண்காட்சியும் இடம்பெறும்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"இருதய வளாகம்",
பிள்ளையார் கோவில் வீதி,
தும்பளை, பருத்தித்துறை.

பருத்தித்துறை கிழக்கு
மாதர் கிராம
(90528) அபிவிருத்திச் சங்கம்.



## மனமார வாழ்த்துகின்றோம்



இன்று (04.11.2009)
புதன்கிழமை பண்டாரநாயக்கா
ஞாபகார்த்த சர்வதேச
கேட்போர் கூடத்தில் கௌரவ அமைச்சர்
திரு.விஸ்வவர்ணபால
அவர்களின் தலைமையில்
நடைபெறுகின்ற இலங்கை உயர்தொழில்
நுட்பக் கல்லூரியின்
6ஆவது பட்டமளிப்பு விழாவில் உயர்
தேசிய கணக்கியல் டிப்ளோமா (HNDA)
பட்டத்தைப் பெறுகின்ற, எமது
சங்கத்தின் கணக்காளர்

**திரு. நாகலிங்கம் குமணதாசன்**

அவர்களை மனமாரப் பாராட்டி
வாழ்த்துகின்றோம்.

தலைவரும் பணியாளர்களும், பொது முகாமையாளரும் பணியாளர்களும்,
யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

(562013)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

செல்வன்
**இராஜேந்திரம் சஞ்சிகன்**
(156 புள்ளிகள்)




செல்வன்
**சிறீதரன் தர்மிலன்**
(147 புள்ளிகள்)

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2009

இவர்களுடன் மேலும் சிறப்புப் புள்ளிகளைப் பெற்றவர்களான
செல்வி இ.ஹரிநி - 125 புள்ளிகள்
செல்வன் தே.சுசிகரன் - 114 புள்ளிகள்
செல்வன் ம.அனுசன் - 111 புள்ளிகள்
செல்வி த.கீர்த்தனா - 110 புள்ளிகள்
செல்வன் சு.தனுசன் - 99 புள்ளிகள்

பாடசாலைச் சமூகம்,
யா/மீசாலை விக்னேஸ்வரா ம.வி.

(90508)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திரன் எவ்வாறு உருவாகியது?



சந்திரன் எவ்வாறு பிறந்தது? என்னும் வினாவிற்கு விஞ்ஞானிகளால் பல சுவையான யோசனைகள் முன்வைக்கப்பட்டன. மைய விசையினால் பூமியின் ஒருபகுதி உடைந்து சென்று சந்திரனாக உருவாகியது. உடைந்து சென்ற பகுதி ஏற்படுத்திய பள்ளமே பசுபிக் சமுத்திரமாகியது என்றும் விண்வெளியில் எங்காவது சந்திரன் தோன்றிப் பூமியின் கவர்ச்சி விசைக்கு அகப்பட்டு, பூமியைச் சுற்ற ஆரம்பித்திருக்கலாம் அல்லது ஆதியில் சூரியனிலிருந்து பிரிந்து வந்த வாயுக் கூட்டத்திலிருந்து சூரிய குடும்பம் தோன்றிய வேளை பூமியுடன் சந்திரனும் ஒரே நேரத்தில் தோன்றியிருக்கலாம் எனப் பல தத்துவங்கள் பிரேரிக்கப்பட்டன.

இருப்பினும் இத்தத்துவங்கள் எவையுமே சூரிய குடும்பத்திலுள்ள பூமி ஏன் ஒரு பெரிய உபகோளை மட்டுமே கொண்டிருக்கிறது என்பதை விளங்கப்படுத்தத் தவறியிருந்தன. பூமியை ஒத்த பருமனையுடைய சுக்கிரன் உபகோள்கள் எதனையும் கொண்டிருக்கவில்லை. அதேவேளை செவ்வாய் இரு உபகிரகங்களைக் கொண்டிருக்கிறது. 1970 ஆம் ஆண்டு சுப்பர் கொம்பியூட்டர் கண்டுபிடிக்கப்பட்ட பின்பு ஜோர்ஜ் வைதர்கில் என்பவர் கொம்ப்பியூட்டர் தொழில்நுட்பத்தை பிரயோகித்து 100 சந்திரன்கள் ஒன்றிணைந்தால் பூமியின் திணிவை ஒத்த கிரகம் ஒன்று உருவாகுதல் சாத்தியம் எனக் கண்டறிந்தார். இது காட்மன் என்னும் விஞ்ஞானியின் சிந்தனையைத் தூண்டி விட்டது. சந்திரனில் இரும்புக் கனிமம் இல்லாத காரணத்தினாலேயே அதன் அடர்த்தி புவியினதை விடக் குறைவாக இருக்கிறது. எனவே ஒரு பாரிய விண்பொருள், கடந்த காலத்தில் பூமியுடன் மோதி புவியின் மேலோடு உடைந்து, தூசுகள் வெளியேறி, புவியின் வட்ட ஒழுக்கில் சென்று திண்மமாக இறுகி சந்திரன் தோன்றியிருக்கலாம் என்னும் தத்துவத்தை வெளியிட்டார்.

மேலும் சந்திரனிலுள்ள ஒட்சிசன் சமதானி விகிதத்தை ஆராய்ந்த வேளை, அவ்விகிதம் பூமியிலுள்ளது போன்றே காணப்பட்டது. அதேவேளை சூரிய குடும்பத்திலுள்ள பிறகிரகங்களில் அவ்விகிதம் மிக வித்தியாசமாகக் காணப்பட்டது. இது காட்மன்னின் தத்துவத்தை உறுதிப்படுத்தியது. எனவே ஆதிகாலத்தில் ஏதோ ஒரு சிறு கிரகம் பூமியில் வீழ்ந்து மோதியதால் எழுந்த தூசுகள் விண்வெளியில் சென்று இறுகியதால் சந்திரன் பிறந்தது என்னும் தத்துவம் விஞ்ஞானிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ★



எஸ். பேராசிரியன்

## முதுமை

மனிதனின் இரண்டாவது
மழலைப் பருவம்
கடந்த காலப் பட்டறிவை
கடைந்து தரும் உருவம்.
சந்ததிகள் சிறக்க அர்ப்பணித்த மனிதர்
சாதனைகள் நாம் படைக்க
போதனை தரும் புனிதர்
வாழ்வில் காணும் வசந்தங்களை
வாரி வழங்கிய ஞானிகள்
சுறுசுறுப்பை எமக்கு
கற்றுத் தந்த தேனீக்கள்.

- சிவகாமி.

## தொடர் கதை

நிம்மதி தன்
நினைவிழந்து கோமாவானது
கல்வி தன்
கண்ணிழந்து குருடானது
தெய்வம் தன்
சக்தியிழந்து ஜடமானது
உரிமை தன்
உணர்விழந்து ஏக்கமானது
பெண்மை தன்
சீதனமிழந்து முதுமையானது
விமர்சனம் தன்
உண்மையிழந்து ஊமையானது
கனவு தன்
விடியலிழந்து இருளானது
பாசம் - தன்
பணமிழந்து ஏழையானது
வாழ்வு தன்
வசந்தமிழந்து கண்ணீரே - எம்
தொடர் கதையானது.




# நெல்லிக்கனி முதுமைக்குச் சவால்

இளமையை விரும்பாதவர்கள் எவ ரும் இருக்க முடியாது. இளமையின் வேகம், செயற்பாடு,



புத்துணர்வு போன்றவை முதுமையில் கிடைப்பதில்லை. ஆனால் முதுமையை வென்று என்றும் இளமை யுடனும் துடிப்புடனும் அதே உத்வேகத் துடனும், அனுபவரிக்க இளைஞனாக சிலர் வலம் வருவதை நாம் இன்றும் காணலாம்.

முதுமை என்பது இயற்கை தரும் அனு பவ மருந்து. அந்த முழுமையையும் இள மையாகக் கொண்டுவர பல அற்புதங்களை இயற்கையே படைத்துள்ளது.

ஆனால் இதைப் பயன்படுத்தாமல் அலட்சியம் செய்த சிலர் தமது 30 வயதிலே 60 வயது முதியவர்போல் தோற்றமளிக்கின்றனர்.

ஒரேஞ் பழத்தைவிட நெல்லிக்கனியில் 20 மடங்கு விற்றமின் சத்து நிறைந்துள்ளது. அப்பிளைவிட 3 மடங்கு புரதச் சத்து நெல்லியில் உள்ளது. 'அஸ்கார்பிக்' அமிலம் என்னும் உயிர்ச் சத்து 160 மடங்கு நெல்லிக் கனியில் உள்ளது. நெல்லிக்கனியில் உள்ள 'விற்றமின் சி' சத்து உடலில் உள்ள இரும்புச் சத்து உட் கிரகிக்கப்படுவதை ஊக்கப் படுத்துகிறது. எச்.ஐ. வி, இன்புளுவென்சா வைரஸ்கள் எம்மைத் தாக்காமல் தடுக்கிறது. இதய வால்வுகளில், இரத்தக் குழாய்களில் ஏற்படும் அடைப்புகளை நீக்கி சீராகச் செயற்பட வைக்கிறது. இதய அடைப்பைத் தடுக்கிறது. மேலும் கார்போஹைட்ரேட், நார்ச்சத்து, இரும்புச் சத்து, கரோட்டின், கல்சியம், பொஸ்பரஸ், விற்றமின் 'பி' காம்ப்ளக்ஸ் நிறைந்துள்ளது.

நெல்லி இலையை 25 கிராம் எடுத்து நீரில் இட்டு கொதிக்கவைத்து ஆறவைத்து வாய்கொப் பளித்து வந்தால் வாய்ப்புண் தீரும்.

15 கிராம் நெல்லிக்காயை இடித்து 1/2 லீற்றர் நீர்விட்டு 100 மி.லீ ஆக காய்ச்சி 20 மி.லீ தேன் கலந்து 40 மி.லீ ஆக 3 வேளை என நான்கு நாள்கள் சாப்பிட்டு வந்தால் பித்தம் தணியும்.

நெல்லி வற்றல், பச்சைப் பயறு வகைக்கு 20 கிராம் எடுத்து 1 லீற்றர் நீர்விட்டு 200 மி. லீ ற்றராகக் காய்ச்சி வடித்து, 100 மி. லீற்றர் எனக் காலையும் மாலையும் அருந்தி வந்தால் தலைச் சுற்று, கிறு கிறுப்புடன் கூடிய இரத்தக் கொதிப்பு நீங்கும்.

நெல்லி இலைகளை நீரில் ஊறவைத்து கஷாயம் செய்து கண்களைக் கழுவினால் கண்நோய்கள் தீரும். நெல்லிக்காயை அரைத்து தலையில் தேய்த்து குளித்து வந்தால் கண்கள் குளிர்ச்சி பெறும்.

நெல்லிச்சாற்றை தேனுடன் கலந்து தினமும் காலை, மாலை அருந்திவந்தால் கண்புரை நோய், கண்பார்வைக் கோளாறுகள் நீங்கும். நெல்லிக்காய், கடுக்காய், தான்றிக்காய் மூன்றையும் திரி பாலா சூரணம் செய்து காலை மாலை வெந்நீரிலோ தேனிலோ கலந்து சாப்பிட்டு வந்தால் நோயின்றி என்றும் இளமையுடன் வாழலாம். ★★★

# எறும்புகளின் கூட்டு வாழ்க்கை


எறும்புகள் பெரும்குடியிருப்புகளாக மட்டுமல்ல சிறு சிறு கூட்டங்களாகவும் வாழ்வதுண்டு. இந்தக் குடியிருப்புக்களை அவைகள் அமைத்துக் கொள்ளும் முறை யானது பெரும் வியப்புக்கும் கவனிப்புக்கும் உரியதாகும்.

எறும்புகள் ஆயிரக்கணக்கில் வாழும் குடியிருப்புகளும் உண்டு. 12 உறுப்பினர் களை மட்டும் கொண்ட சிறு குடியிருப் புகளும் உண்டு. இந்தக் குடியிருப்புகள் நிலத்துக் கடியிலும் இருக்கும் மரங்கள் மற் றும் புற்றுகளிலும் அமைக்கப்பட்டிருக்கும்.

பிரித்தானியா வில் மட்டும் சுமார் 20 இல் இருந்து 2ஆயி ரம் வகை யான எறும்புகள் இருப்பதாகக் கணக்கெடுக்கப் பட்டுள்ளது. எறும்புகளில் பொதுவானவகை சிகப்பு, கறுப்பு மற்றும் வெள்ளை இனங்களைக் கூறலாம்.

எல்லா வகை எறும்புகளும் சமூகப்பிராணி களே. இவைகளின் கூட்டங்கள் சிறு சிறு தேசி யங்கள் போல் அமைந்திருக்கும். அவைகளில் இராணிகள், சிறகுள்ள ஆண்கள், சிறகுள்ள களும் இருக்கும்

சிலநாடுகளில் புற்றுகளைக் கட்டிக் கொண்டு வாழும் மற்றும் காடுகளில் வாழும் எறும்புகளும் உண்டு. ஒரு மீற்றர் உயரமும் 30 சென்ரி மீற்றர் அகல மும் கொண்ட கட்டடங்களை இவை உருவாக்கும்.



சில வகை எறும்புகள் அடிமைகளை வைத்து வேலை கொள்ளும். இந்தவகை எறும்புகள் சிறிய வகையான எறும்புகளின் குடியிருப்புகளை [illegible] போல அணி வகுத்து கூட்டம் கூட்டமாகச் செல்லும்.

அந்த எறும்புகள் மீது தாக்குதல் நடத்தி குடியிருப்புகளில் இருந்து அவைகளைத் துரத்தி விட்டு அவைகளின் முட்டைகளையும் பொரித்த குஞ்சுப் பொதிகளையும் உணவாகச் சேமிப்புக் களையும் கொள்ளையடித்து தமது குடியிருப்புக் களுக்குக் கொண்டு செல்லும். முட்டைகளும் குஞ்சுகளும் நன்றாக வளரும் வரை கவனமாகப் பாதுகாக்கும். பின்னர் அவைகளைத் தமக்கு பணிபுரியும் அடிமைகளாக வைத்துக் கொள்ளும்.

மத்திய ஆபிரிக்கா, தென் அமெரிக்கா, தென் ஆஸியா போன்ற பகுதிகளில் ஒரு வகை எறும்புகள் மாமிச உண்ணிகளாக இருக்கின்றன. இவைகள் மிகவும் அஞ்சப்படும் வகையைச் சேர்ந்த எறும்புகளாகும். இவை மாமிச உணவு தேடி நீண்ட வரிசைகளில் நெடுந்தூரம் ஓய்வின் றிப் பிரயாணம் செய்யும். இந்த எறும்புகளின் தாக்குதலுக்குள்ளாகும் விலங்கு எவ்வளவு பெரிதானாலும் குரூரமானதானாலும் அவைகளின் கடியிலிருந்து தப்புவது சுலபமல்ல. இலட்சக் கணக்கான எறும்புகளால் தாக்கப்படும் விலங்கு இருப்புக் கொள்ளாமல் இடம் விட்டு ஓடித்திரி வோரும் - எங்காவது தண்ணீரில் மூழ்கி அவைகளின் கடியிலிருந்து தப்பினால் அல்லா மல் அவ்விலங் கினால் உயிர்தப்ப முடியாது. இவ்வாறு மிருகம் ஒன்று உயிர் விட்டால் இலட்சக் கணக்கான எறும்புகளுக்கு உணவாகும். ★★★

- ரம்யன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெய்குருதேவ்

## தவத்திரு ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் அவர்களின்

### வாழும் கலைப்பயிற்சி பாகம் - 1

(பிராணாயாமம், பாஸ்கிரிகா, சுதர்ஸனகிரியா எனும் சிறப்பு மூச்சுப் பயிற்சி உள்ளடக்கியது)



- மன உளைச்சல், மன விரக்தி நீங்கி அமைதி பெற
- உயிர்சக்தியை அதிகரிக்க செய்து விழிப்புணர்வைக் கூர்மையாக்க
- நோய்கள், உபாதைகள் உடலை விட்டு நீங்கிட

வாழும் கலைப்பயிற்சி பாகம் - 1

இன்று ஆரம்பமாகிறது

இடம் :- கம்பன் கோட்டம்

பயிற்சி நாள்கள் :- 04.11.2009-08.11.2009 வரை

நேரம் :- காலை 6.30-8.00 மணிவரை அல்லது மாலை 5.00 - 6.30 மணிவரை

குறிப்பு:- ஏற்கனவே பயிற்சி எடுத்தவர்களுக்கான சுதர்ஸன கிரியா 08.11.2009 (ஞாயிற்றுக்கிழமை) காலை 7.00 மணிக்கு கம்பன் கோட்டத்தில் நடைபெறும்.


மேலதிக விவரங்களுக்கு

வாழும் கலை அற நிறுவனம், யாழ். மையம்.

T.P: 0777250879,0771777998,0212227030 (90572)


## அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 17 ★ 02 ★ 1929



மறைவு 20 ★ 10 ★ 2009

### அமரர் செல்லையா சிவசாமி

20.10.2009 செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவனின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (04.11.2009) புதன்கிழமை திருச்சியில் நடைபெறும். அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா நித்திய சாந்தியடையப் பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

தகவல்:
திருமதி சிவஞானம் ஜெயலட்சுமி(மகள்)
(கொழும்பு).
தொ.பே 0112679150

குடும்பத்தினர். (90573)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் ஞானமலர் (புனிதமணி) ஞானப்பிரகாசம்

பிறப்பு: 14★04★1931
இறப்பு: 05★10★2009

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான். உயிர் வாழ்க்கையில் என்னில் விசுவாசம் கொள்பவன் எவனும் ஒரு போதும் சாகான்-யோவா 11:25:26"

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்கான திருப்பலி இன்று (04.11.2009) புதன்கிழமை காலை 5.45 மணிக்கு திருகோணமலை புனித மரியாள் பேராலயத்திலும், காலை 6.15 மணிக்கு யாழ்.றக்காவீதி, புனித குழந்தை இயேசு திரேசம்மாள் ஆலயத்திலும் இடம்பெறும். இத் திருப்பலியிலும் மதியம் 12 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

65, மருதடி வீதி,
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி வள்ளியம்மை செல்லையா



நயினாதீவு, 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வள்ளியம்மை செல்லையா நேற்று 03.11.2009 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கந்தர்-முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் கார்த்திகேசு-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பி செல்லையாவின் அன்புத் துணைவியாரும் அன்னபூரணி, சந்திரசேகரம் மற்றும் காலஞ்சென்ற இராசபூரணி, மற்றும் செல்வ பூரணி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்றவர்களான பார்வதிப்பிள்ளை வைரிப்பிள்ளை, இராமாசிப்பிள்ளை, நாகமுத்து, குணரெத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், சோமசுந்தரம், நாகமுத்து, மாணிக்கம், சின்னம்மா ஆகியோரின் மைத்துனியும் கனகசபாபதி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), சாம்பசிவம், கமலாசினிதேவி, அரியரெத்தினம் ஆகியோரின் அன்பு மாமியும் சுகந்தி, பிரதீபன், தேவதர்சினி, தேவரஜனி, மகிந்தன், பிரியதர்சினி, அமுதீசன், கவிதா, மயூரன், பிரகலாதன், சஜந்தன், சஜானி, சர்மினி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.11.2009) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நயினாதீவு சல்லிபரவை இந்துமயானதிற்கு எடுத்துச் செல்லப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நயினாதீவு-05.
0213210565

(90574)

தகவல்:
குடும்பத்தினர்.


## வேலைக்கு ஆள்கள் தேவை

தையல்வேலை தெரிந்த ஆண்கள் மற்றும் உதவியாள்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். உடன் சமுகமளிக்கவும்.

தொடர்பு:- ஆகாஸ் ரெக்ஸ் ரைல்ஸ் அன் ரெயிலறிங்
NO: 19, கண்டி வீதி, சாவகச்சேரி
T.P: 0776701495 (905683)

## தவறிவிட்டது

பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த செல்வி டெய்சிகா குணபாலசிங்கத்தின் தேசிய அ.அ.இல: (877672522V) ,பல்கலைக்கழக அடையாளஅட்டை என்பன உரும்பிராய் சந்திக்கும் கோண்டாவிலுக்கும் இடையே தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க் காணும் T.P உடன் தொடர்பு கொள்ளவும். T.P: 0779672180 (90555)

## தவறிவிட்டது

சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை என்ற முகவரியுடைய தம்பிப்பிள்ளை ரவிச்சந்திரன் என்பவரது தே.அ.அட்டை (781164879V), சாரதி அனுமதிப் பத்திரம் என்பன மல்லாகத்திற்கும் திருநெல்வேலிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்படி முகவரியுடன் அல்லது பின்வரும் தொ.பே.யுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொ.பே: 0779517197 (90556)

## மணமகள் தேவை

யாழ். இந்து, வயது 33, ஆயில்ய நட்சத்திரம், பாவம் 54 ¾, செவ்வாய் தோஷமில்லை, உயரம் 5 அடி 4 அங், வெள்ளை நிறம், சுமாரான தோற்றம், பட்டதாரி ஆசிரியரும், M.A .கற்கை நெறியை முடித்தவரும், சைவபோசனமுள்ள வருமான மணமகனுக்கு 25 இற்கும், 30 இற்கும் இடைப்பட்ட வயதுடைய படித்த, தகுதியான மணமகளைப் பேரனார் தேடுகின்றார். ஜாதகக் குறிப்புடன், குடும்ப விபரம், நிபந்தனைகளுடன் பாமும் சேர்த்தல் எதிர்பார்க்கப்படும். (90540)

தொடர்பு:- பொ. ஐயம்பிள்ளை மாஸ்ரர், துர்க்கை, ஏழாலை

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் லேன், நல்லூர் (90458)

உ
சிவமயம் வாழ்க வழமுடன்

## சிட்டை லிகிதர் தேவை

பிரபல மொத்த வணிக நிலையத்துக்கு ஐந்து வருடத்துக்கு மேல் நல்ல அனுபவம் உள்ள சிட்டை லிகிதர் (பில்கிளாக்) தேவை.

தொடர்புகளுக்கு:-
163,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 0777283811

குறிப்பு: சம்பளம் திறமை அடிப்படையில் பேசித் தீர்மானிக்கப்படும். (90567)

## T.V.விற்பனைக்கு

பாவித்த ஜப்பான் (Sony) சொனி T.Vகள் விற்பனைக்குண்டு.

G21-$Q_1$-$Q_2$, 2197, wega, G14"$Q_1$

விலை: ரூபா 16000-20000 ரூபா வரை

தொடர்பு: R.ஸ்ரீமகேஸ்வரன், அப்பன கொம்பனி, சீனிப்புளியடி, K.K.S.வீதி, இணுவில்.
T.P: 0771393670 (90571)


## கடற்கரை வீதியில் வர்த்தக நிலையங்கள் மீண்டும் திறப்பு

பாஷையூர் கடற்கரை வீதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்கள், தேநீர்ச்சாலைகள் நீண்ட காலத்தின் பின்னர் திறக்கப்பட்டுள்ளது. இந்த வீதி அண்மையில் மக்கள் பாவனைக்காக திறந்து விடப்பட்டது.

இதனையடுத்து இந்த வீதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்கள் துப்புரவு செய்யப்பட்டு, திறக்கப்பட்டு வியாபார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இப்பகுதியில் அமைந்துள்ள தேநீர்ச்சாலைகளும் திறக்கப்பட்டு வியாபாரம் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. (50- 224)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### அமிர்தலிங்கம் அமிர்தராஜ்

அவர்கள் இன்று (04.11.2009) புதன்கிழமை HNDA பட்டம் பெறுவதை மனதார வாழ்த்துவதுடன் மேலும் பல பட்டங்கள் பெற்று வளர இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம். (90562)

அம்மம்மா, மாமாமார், அத்தைமார், சித்தப்பாமார், சித்திமார், அத்தான்மார், மைத்துனிமார், தம்பிமார், தங்கைமார்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று
04/11/2009 கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டுமண்டபத்தில் நடை பெறவுள்ள உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் 2008 ஆம் ஆண்டுக்கான 6வது பட்டமளிப்பு விழாவில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா பட்டம் பெறும் எங்கள் அன்பு மகன்

### தியாகராஜா அருட்சுதன்

(H.N.D.A 2005 / 2008)

அவர்களை வாழ்த்துவதோடு இவர் மேலும் பல பட்டங்களை பெற்று வாழ்க்கையில் சிறப்புற வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
அம்மா - மஞ்சுளாதேவி (போதனாசிரியை, முறைசாராக்கல்வி)
அப்பா - தியாகராஜா (தியாகு கலைக்கூடம்)
அத்தான், அக்கா, தங்கைகள்.

359/10 கோவில் வீதி, நல்லூர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் 2009ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 149 புள்ளிகள் பெற்று சித்தியடைந்த மகேஸ்வரன் - குமுதினி தம்பதியரின் செல்வப் புதல்வி

### சுவேகானை

மனமார அம்மப்பா, அம்மம்மா, மாமா, மாமி, பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பாமார், சித்திமார், அண்ணன், தங்கைமார், மச்சான்மார் ஆகியோர் பாராட்டி வாழ்த்துகின்றார்கள். (90564)

நாவற்குழி கிழக்கு, கைதடி. குடும்பத்தினர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஸ்ரீ பத்மநாதன் - யோகராணி தம்பதியரின் புதல்வி

### செல்வி ஸ்ரீபத்மநாதன் பிரியந்தி (நிலா)

[கிளிநொச்சி உருத்திரபுரம் கிழக்கு, கிளி/ புனித பற்றிமா பாடசாலை]

2009 ஆம் ஆண்டு தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் 162 புள்ளிகளைப்பெற்று மாவட்டத்தில் 5 ஆம் இடத்தைப் பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துவதோடு அவரை ஊக்குவித்த அதிபர், ஆசிரியர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். (90570)

வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா, அண்ணாமார், அக்காமார், பெரியம்மாமார், அப்பப்பாமார், அம்மம்மாமார், சித்தப்பாமார், சித்திமார்.
சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

## நெடுந்தீவு வெல்லைப் பகுதி சுற்றுலா மையமாகும்

நல்லூர், நவ.4

நெடுந்தீவு வெல்லைப் பகுதி சுற்றுலா மையமாகும். இதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நெடுந்தீவுக்கு விஜயம் செய்த அமைச்சர் நெடுந்தீவின் அபிவிருத்திக்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும், 1990 ஆம் ஆண்டு டிசம்பரில் நான் இங்கு வந்த சமயம் இருந்த நிலைமையை விட இப்போது இங்கு முன்னேற்றம் தெரிகிறது எனவும், எதிர்காலத்தில் மேலும் பல அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

நெடுந்தீவின் அபிவிருத்திக்கான திட்டங்களை உருவாக்க முன்னாள் பிரதேச சபைத் தலைவரின் தலைமையில் குழு ஒன்று நியமிக்கப்படும்.

நீங்கள் திட்டங்களை அந்தக் குழுவிடம்சமர்ப்பித்தால் ஆராய்ந்து உரிய நடவடிக்கைகள்மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

நெடுந்தீவு மேற்கில் கூட்டுறவு நகர் கிளை ஒன்றும் அமைச்சரால் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வு நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் என்.திருலிங்கநாதன் தலைமையில் இடம்பெற்றது. (50-111)




## இலங்கையிலும் இந்தியாவிலும் யாழ்.நூல் கண்காட்சியிலும் ஒரே நேரத்தில் வெளிவந்துவிட்டது

கல்வியியல் ஆய்வாளரும், எழுத்தாளருமான

### பா.தனபாலனின்

(SLTS -1, SLTES - 111)
B.A. (Cey), PGDE (merit), Dip. in Psy. 1st Class, M.Phil. in Ed, Cert. in Vocational Guidance (Singapore)

### கல்வி முகாமைத்துவத்தில் விடய ஆய்வு
### Case Study in Education Management

- ★ விடய ஆய்வு தொடர்பான அடிப்படை எண்ணக்கருக்களும் பிரயோகங்களும்
- ★ இலங்கை நிர்வாக சேவை (SLAS),இலங்கை கல்வி நிர்வாக சேவை (SLEAS), வினாத்தாள்கள் விடைக் குறிப்புக்களுடன்
- ★ நவீன முகாமைத்துவ விடயங்கள் உள்ளடங்கிய நூல்

வெளியீடு:- குமரன் புத்தக இல்லம்
சென்னை, கொழும்பு

விநியோகஸ்தர்கள்:
பூபாலசிங்கம் ... யாழ் பல்கலைக்கழகம் முன்பாக, திருநெல்வேலி.
ஆசிரிய வாண்மைவிருத்தி நிறுவகம், 226, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
ஸ்ரீலங்கா புத்தகசாலை, 243,கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (90559)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மாவட்ட வலம் - மன்னார்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சை, டிசம்பர்-2009
General Certificate of Education (Ord.Level) Examination, December-2009


## விஞ்ஞானம் - II

34-T-II

### பகுதி A, அமைப்புக் கட்டுரை வினாக்களின் தொடர்ச்சி.....

02. 2) குருதியானது பதார்த்தக்கடத்தலுக்காக சிறப்படைந்த இழையாகும்.
  a. குருதிக்கலவகைகளைக் குறிப்பிட்டு அவற்றின் தொழிற்பாட்டுக்காக காணப்படும் சிறப்பியல்பு ஒன்று வீதம் எழுதுக.
  ..............................................................
  ..............................................................
  b. குருதி மாற்றீடு செய்யும்போது கவனத்திற்கொள்ள வேண்டிய இரு விடயங்களைக் குறிப்பிடுக.
  ..............................................................
  ..............................................................

03. 1) ஆவர்த்தன அட்டவணையில் 2ஆம் ஆவர்த்தன மூலகங்களின் கொதிநிலை வரைபு தரப்பட்டுள்ளது.





  a. வரைபில் D எனக்காட்டப்பட்டுள்ள மூலகம் பங்கீட்டு வலுப்பிணைப்பை உருவாக்கி அணு சாலகங்களை உருவாக்குகிறது. D ஐ இனங்காண்க.
  ..............................................................
  ..............................................................
  b. D இன் இரு பௌதிக இயல்புகளை எழுதுக.
  ..............................................................
  ..............................................................
  c. மூலகம் A இன் அணு எண்ணைக் காண்க.
  ..............................................................
  ..............................................................
  d. மூலகம் D இற்கும், F இற்கும் இடையிலான பங்கீட்டுவலுப் பிணைப்பின் லூயியின் கட்டமைப்பை இங்கே வரைக.

  e. ஆவர்த்தன அட்டவணையில் மூலகங்களை வகைப்படுத்துவதனால் கிடைக்கும் இரு நன்மைகளை எழுதுக.
  ..............................................................
  ..............................................................

2) a. $H_2SO_4$இன் சார் மூலக்கூற்றுத் திணிவைக் காண்க.
  (H - 1) (S - 32) (O - 16)
  ..............................................................
  ..............................................................
  b. $H_2SO_4$இன் 49gஇல் உள்ள அதன் மூல் எண்ணிக்கையைக் காண்க.
  ..............................................................
  ..............................................................
  c. மேற்படி வினா 3 bஇல் மூல் அளவிலுள்ள மொத்த அணுக்களின் எண்ணிக்கையை காண்க.
  ..............................................................
  ..............................................................

04. 1) நீர் சூழற்தொகுதி ஒன்றிலுள்ள இரு அங்கிகளிற்கிடையிலான இடை தொடர்பு காட்டப்பட்டுள்ளது.




  a. இக்கனத்தில் மீனின் தலைப்பகுதி கொக்குக்கு தென்படுகின்றது ஆயின், ஒளிக்கதிர் கொக்கின் கண்களை அடையும் பாதையை வரைக.
  b. நீர் நிலையில் மீனின் உண்மையான ஆழம் 80cm எனின், மீன் உயர்ந்து தென்படும் உயரம் எவ்வளவு?
  (வளி சார்பாக நீரின் முறிவுச்சுட்டி 4/3 ஆகும்)
  ..............................................................
  ..............................................................
  c. மீனின் வால் பகுதி கொக்குக்கு தென்படாமைக்கான காரணம் யாது?
  ..............................................................
  ..............................................................
  d. மேற்படி செயன்முறைக்கு அவசியமான நிபந்தனைகள் 2ஐக் குறிப்பிடுக.
  ..............................................................
  ..............................................................

2) நீர் நிலைகளில் தொழிற்படும் திரவ அமுக்கம் காரணமாக அங்கு வாழும் அங்கிகள் வேறுபட்ட நிலைமைகளைப் பெறுகின்றன.
  a: திரவ அமுக்கம் தங்கியுள்ள காரணிகள் 2 தருக.
  ..............................................................
  ..............................................................
  b. நீர் நிலையின் 2m ஆழத்தில் தொழிற்படும் திரவ அமுக்கத்தைக் காண்க.
  (நீரின் அடர்த்தி = $1000kg/m^3$, புவியீர்ப்பு ஆர்முடுகல் = $10ms^{-2}$என்க)
  ..............................................................
  ..............................................................
  ..............................................................

### பகுதி B, கட்டுரை வகை வினாக்கள்

#### உயிரியல்

01. 1) தலசீமியா காரணமாக இலங்கையில் பெரும்பாலானோர் பாதிக்கப்படுகின்றனர். இதை பிறப்புரிமையியல் தொடர்பான பரிசோதனைகள் வழிகாட்டல்கள் ஊடாக குறைவடையச் செய்யமுடியும்.
  a. தலசீமியா ஏற்படுவதற்கான பிரதான காரணம் யாது?
  b. தலசீமியா நோய் அறிகுறிகள்/ பாதிப்புக்கள் 2 ஐக் குறிப்பிடுக.
2) இந்நோய் பரம்பரையலகுகளில் குறைபாடான பரம்பரை அலகுகளினால் கடத்தப்படுகிறது.
  a. தலசீமியா நோய்க்கான காவிப் பெண்ணுக்கும் தலசீமியா நோயுடைய ஆணிற்கும் தோன்றும் சந்ததிகளின் பிறப்புரிமை அமைப்புக்களை விளக்குக.
  b. பெருமளவில் காவிகளை இனங்காண்பதன் மூலம் இந்நோயைக் கட்டுப்படுத்தலாம். இந்நோயை இனங்காணப் பயன்படும் மருத்துவ பரிசோதனையை குறிப்பிடுக.
  c. தலசீமியா நோயை கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் 2 ஐ குறிப்பிடுக.
3) பெருமளவான சிறுவர்கள் எதிர்நோக்கும் தற்போதைய பிரச்சினை உடற்பருமனாதல் நீரிழிவு நோய்க்குட்படல் என்பனவாகும்.
  a. மேற்குறித்த இடர்பாடுகளிலிருந்து விடுபடுவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் 2 ஐக் குறிப்பிடுக.
  b. உடற் பருமனாதலின்போது பெருமளவு கிளைக்கோஜன் தோலின் கீழ்படிகின்றது. இச் செயன்முறைக்கு பொறுப்பான ஓமோனின் பெயரை எழுதுக.
  c. மேற்படி ஓமோனை சுரக்கும் சுரப்பி எது?
4) நரம்பு இயைபாக்கத்திற்கும் ஓமோன் இயைபாக்கத்திற்கும் இடையிலான வேறுபாடுகள் 3ஐக் குறிப்பிடுக.

02. 1) புவியிலுள்ள அனைத்து அங்கிகளுக்கும் நேரடியாகவோ மறைமுகமாகவோ சக்தியை வழங்கும் செயன்முறை ஒளித்தொகுப்பாகும்.
  a. பச்சைத்தாவரங்களில் நடைபெறும் ஒளித்தொகுப்பிற்கு அவசியமான காரணிகளை எழுதுக.
  b. ஒளித்தொகுப்பிற்கு பச்சையவுருமணிகள் (ஒளித்தொகுப்பு நிறப்பொருட்கள்) அவசியம் என்பதை பரீட்சிப்பதற்கான செயன்முறையின்படிமுறைகளை எழுதுக.
  c. ஒளித்தொகுப்பிற்கான இரசாயன சமன்பாட்டை எழுதுக.
2) ''தாவர இலை ஒரு தொழிற்சாலை போன்றது'' இக்கூற்றுக்கு அமைய பின்வருவனவற்றிற்கு விடை தருக.
  a. மூலப்பொருட்கள்.  b. பிரதான விளைபொருள்.
  c. சக்தி முதல்.  d. உற்பத்தி நடைபெறும் இடம்.
  e. கழிவுப் பொருள்.
3) ஒளித்தொகுப்பிற்காக சிறப்படைந்த கட்டமைப்பு இலை ஆகும். ஒளித்தொகுப்பிற்காக இலையில் காணப்படும் சிறப்பியல்புகள் 2 ஐக் குறிப்பிடுக.
4) ''ஒளித்தொகுப்பு செயன்முறை இன்றேல் அங்கிகளின் நிலவுகை சாத்தியமற்றது'' விளக்குக.

#### இரசாயனவியல்

03. 1) இரும்புத்தகடுகள் மீது நாகம், வெள்ளீயம் போன்ற உலோகப்பூச்சுக்கள் பூசப்படுகின்றன.
  a. ஓர் உலோகத்தின் மீது பிறிதோர் உலோகத்தை பூசுதல் எவ்வாறு அழைக்கப்படும்?
  b. மேற்குறிப்பிட்ட முறையின் நன்மைகள் 2 ஐக் குறிப்பிடுக.
  c. இரும்புத்தகடுகள் மீது நாகம், வெள்ளீயம் பூசும்போது எப்பூச்சுள்ள இரும்பு நீண்டகாலத்திற்கு இரும்பை பாதுகாக்கும்?
2) இரும்பு துருப்பிடித்தல் செயன்முறை இரசாயன மின்கலமொன்றின் செயற்பாட்டை ஒத்தது. இங்கு ஒட்சிசன், நீர் உள்ளபோது துருப்பிடித்தல் நடைபெறும்.

மறுபக்கம் பார்க்க.....

ஆசிரியர்கள் : திரு.பாஸ்கரன்,
மன்/அல்மினா.ம.ம.வித்தியாலயம், மன்னார்.
திரு.ந.முருகவேல்
மன்/புனித ஆனாள் ம.ம.வித்தியாலயம், மன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஈ - ஏசியா 2009' சர்வதேச மாநாட்டை கொழும்பில் நடத்த துரித நடவடிக்கை

கொழும்பு, நவ.4

ஆசியாவின் முதன்நிலை தகவல் தொழில்நுட்ப மாநாடு மற்றும் கண்காட்சிகளுக்கான பதிவு ஏற்பாடுகள் ஆரம்பமாகியுள்ளன என இலங்கைத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையம் அறிவித்துள்ளது.

இம் மாநாடு அடுத்த மாதம் இரண்டாம் திகதி தொடக்கம் 4 ஆம் திகதி வரை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவிருக்கின்றது.

இம் மாநாட்டில் 24 ஆசிய நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர். நவீன தொழில்நுட்பத்தைப் பிரதிபலிக்கும் வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த 200இற்கும் அதிகமான மாதிரிகள் இக் கண்காட்சிக்கு வரவழைக்கப்படவுள்ளன என இலங்கைத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையத்தின் தலைவரும், ஜனாதிபதியின் முதுநிலை ஆலோசகருமான பேராசிரியர் பீ.டப்ளியூ.ஏபாசிங்ஹ தெரிவித்தார்.

ஐந்து முக்கிய மகுடங்களில் இம்முறை ஈ-ஏசியா 2009 மாநாடு நடைபெறவிருக்கின்றது. 'ஈ-அரசு', 'ஈ-டிஜிட்டல் கற்கை', 'ஈ - தொலைநிலையங்கள்', 'புதிய தகவல் தொழில்நுட்ப உத்திமுறைகள் மற்றும் ஈ-சுகாதாரம்' ஆகிய தொனிப் பொருள்களை மையமாகக்கொண்ட ஈ-ஏசியா மாநாடு இடம்பெறவிருக்கின்றது.

மாநாட்டுக்காகவும் துறைசார் கூட்டங்களில் கலந்துகொள்வதற்காகவும் வெளிநாடுகளில் இருந்து பெருந்தொகையான அதிதிகள் வருகை தரவுள்ளனர் என ஈ-எசியா தொழில்நுட்பக் குழுவின் தலைவர் பேராசிரியர் விஜேகுமார் தெரிவித்தார். தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் அதி நிபுணத்துவம் பெற்ற பலரும் இம்மா நாட்டில் கலந்துகொள்ளவுள்ளனர்.

அரசதுறையில் தகவல் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துவதில் அதிக அக்கறை காட்டும் அரச அதிகாரிகளும் இம்மாநாட்டில் கலந்துகொள்ளலாம். அதேபோன்று, பல்கலைக்கழக மாணவர்களுக்குச் சலுகையடிப்படையிலான நுழைவு வசதிகள் செய்யப்பட்டுள்ளன என ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் குறிப்பிட்டார்.

உள்ளூர் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் இப்பொழுது தமக்கான காட்சிக்கூடங்களை பெற்றுக்கொள்ளும் வாய்ப்புகளும் இருக்கின்றன என்று இலங்கைத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி ரெஷான் தேவபுர தெரிவித்தார்.

www.easia.org எனும் இணையத்தளத்தின் வாயிலாகவோ ஜனாதிபதி செயலகத்தின் கீழ் இயங்கும் இலங்கைத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையத்தின் வாயிலாகவோ இதுதொடர்பான விவரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (சி)

## அரசுக்கு எந்தவிதப் பிரச்சினை ஏற்பட்டாலும் வடக்கு அபிவிருத்தி நிதியில் குறை ஏற்படாது

### அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவிப்பு

கொழும்பு,நவ.4

அரசுக்கு எந்தவிதப் பிரச்சினைகள் நேரிட்டாலும் வடக்கின் அபிவிருத்திக்காக செலவிடப்படுவதில் எவ்விதக் குறையும் ஏற்படாது என்று சுகாதார அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

வவுனியா போதனா வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மகப்பேற்று அறை மற்றும் மகப்பேற்று சிகிச்சை நிலையம் ஆகியவற்றை நேற்று முன்தினம் திறந்து வைத்து உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

நாட்டிற்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்திற்காகச் செலவிடுவதைக் குறைப்பதில்லை என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார் - என்றார்.

இதன்போது பயிற்சி பெற்ற 185 தாதியர்களுக்கு நியமனக் கடிதம் அமைச்சரினால் வழங்கப்பட்டது.

மேலும் வவுனியா போதனா வைத்தியசாலையின் மகப்பேற்று சிகிச்சை நிலையம் மற்றும் மகப்பேற்று அறைகளின் நிர்மாணப் பணிகளுக்காக 2 கோடியே 20 இலட்சம் ரூபா நிதியை அரசு செலவிட்டுள்ளது எனவும் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (சி)

## ஆஸியின் விசேட குழு விரைவில் இலங்கைக்கு

கொழும்பு, நவ.4

இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்குள் பிரவேசிப்பவர்களை தடுத்து நிறுத்துவது குறித்து ஆராய்வதற்கு ஆஸியின் விசேட குழு இலங்கை வருகிறது.

ஆஸிப்பிரதமரின் விசேட பிரதிநிதியான இந்தியாவுக்கான ஆஸ்திரேலியாவின் முன்னாள் தூதுவர் ஜோன் கார்தாவின் தலைமையிலேயே இந்தக் குழு வரும் நாள்களில் இலங்கை வரவுள்ளது.

இது தொடர்பாக அண்மையில் இலங்கை ஜனாதிபதியுடன் ஆஸ்திரேலியப் பிரதமர் தொலைபேசியினூடாகப் பேசினார் எனக் கூறப்படுகிறது. (சி)

## ஆனைக்கோட்டையில் பால் விற்பனை நிலையம்

பண்டத்தரிப்பு, நவ.4

சண்டிலிப்பாய் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் மூன்றாவது பால் விற்பனைநிலையத்தை ஆனைக்கோட்டையில் திறக்கவுள்ளதாக அதன் தலைவர் தி.இராஜ்குமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சண்டிலிப்பாய் வடக்கு, சீரணி சந்தி ஆகிய இடங்களில் ஏற்கனவே இரண்டு பால் விற்பனை நிலையங்கள் இயங்கி வருகின்றன. பண்ணையாளர் நலன் கருதி பால் கொள்வனவு விலையில் மாற்றம் செய்யவில்லை. இதன் மூலம் பால் பண்ணையாளர் நன்மை பெற முடியும் - என்றார்.

(50-130)


வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
**வெளிவாரிப் பரீட்சைகள் - 2008**
1.பொது மற்றும் சிறப்புக் கலைமாணி பகுதி - II - 2006&2007 (வெளிவாரி)

**மீள் பரீட்சார்த்திகளுக்கான அறிவித்தல்**

கலைமாணி பகுதி - II - 2004& 2005 பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. இப்பரீட்சையில் சித்தியடையத் தவறிய பரீட்சார்த்திகளிடமிருந்து மீள்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 25.11.2009 (புதன்கிழமை) வரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொரு பாட அலகிற்கும் மீள் பரீட்சார்த்திகள் செலுத்த வேண்டிய பரீட்சைக் கட்டணம் ரூபா 200/= ஆகும். யாழ்.பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா 100/= இனைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

தபால் மூலம் விண்ணப்பப் படிவத்தினைப் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா 100/=க்கான காசுக் கட்டளை/ தபாற் கட்டளையை சுய முகவரியிடப்பட்ட ரூபா 40/= பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28 X 20 செ.மீ அளவுடைய தபால் உறையுடன், உதவிப் பதிவாளர் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

பரீட்சைகள் நடைபெறும் திகதி மற்றும் விவரங்கள் பின்னர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படும்.

மேலதிக விவரங்களுக்கு 021 2223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்
03.11.2009 (சி/562099)



**காணவில்லை**

கறுப்பு, கட்டையான (டாசோன்) பெண் நாயக்குட்டி (1வயது), மூத்தனார் கோயிலுக்கும், ஆனைக்கோட்டைக்கும் இடையில் காணாமல் போய்விட்டது. பிடித்துத் தருபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும்.

'அல்பா மிக்ஷர்',
பாக்கஸ் லேன், மானிப்பாய். 0777 448689, 021 222 8601



**விற்பனைக்கு**

வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்குண்டு.
தொடர்பு:
10A,கதீற்றல் லேன், யாழ்ப்பாணம்.
T.P: 021 222 5687.


## மத்திய கல்லூரி நீச்சல் தடாகம் விரைவில் திறப்பு

நல்லூர், நவ.4

யாழ்.மத்திய கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்டு வரும் நீச்சல் தடாகம் வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்தின் கீழ் பூர்த்தியாக்கப்பட்டு டிசெம்பர் மாதம் 28ஆம் திகதி யாழ்.மத்திய கல்லூரி அதிபரிடம் கையளிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நீச்சல் தடாகத்தின் கட்டுமானப் பணிகள் தற்சமயம் துரித கதியில் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(50-111)

## வினாத்தாள்களைப் பெற்றுக் கொள்ளலாம்

ஜி.சீ.ஈ சாதாரணதர மாணவர்களுக்கு இன்று புதன்கிழமை மூன்றாம் தவணைப் பரீட்சை ஆரம்பமாகின்றது.

இந்தப் பரீட்சையின் பிரதான பாடங்களுக்கான வினாத்தாள் பொதிகளை யாழ்.வலயப் பாடசாலைகள் தமக்குரிய கோட்டக் கல்வி அலுவலகங்களில் பரீட்சை நடைபெறும் தினத் தன்று காலையில் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.இராசலிங்கம் அறிவித்துள்ளார். (201)


**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



தரம் 5 (2009) புலமைப் பரிசில் பரீட்சையில் 161 புள்ளிகள் பெற்ற யா/யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன்
**ரவிச்சந்திரன் றோய் நிஷான்**
அவர்களை மேலும் பல சிறப்புகள் பெற்று கல்வியில் உயரக் கர்த்தரின் கிருபையும் ஆசீர்வாதமும் கிடைக்க வாழ்த்துகின்றோம். இவர் பரீட்சையில் சித்தியடைய ஊக்கமளித்த பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

செல்வபுரம்,
உரும்பிராய் தெற்கு, உரும்பிராய். (90577)
வாழ்த்துவோர்: அப்பம்மா, சித்தப்பாமார், அத்தை.



**கண்ணீர் அஞ்சலி**



எமது பாடசாலையின் ஆசிரியர்
சோ.இலட்சுமிகாந்தன் அவர்களின் தாய்
அமரர் **சோதிலிங்கம் மங்கையர்க்கரசி**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யா/உயரப்புலம் மெதடிஸ்த மிசன் த.க.வி.,
ஆனைக்கோட்டை.
ஆசிரியர் கழகம். (90578)



**31 ஆம் நாள் நினைவலைகள்**

எமது பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியர் திருமதி கமலாதேவி கோபாலகிருஷ்ணன் அவர்களின் அன்புத் தந்தை
அமரர் **செல்லப்பா கனகரத்தினம்**
அவர்களின் 31ஆம் நாள் நினைவு நிகழ்வு இன்று (04.11.2009) புதன்கிழமை நடைபெற இருப்பதால் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக.

யா/கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வித்தியாலயம்,
கைதடி.
ஆசிரிய நலன்புரிக் கழகம் (90579)



**மரண அறிவித்தல்**

**பொன்னுத்துரை இரத்தினசபாபதி**



(மாணிக்கவாசகர்)

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை இரத்தினசபாபதி கடந்த 31.10.2009 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் ரவீந்திரன், புவனேந்திரன் (ஜேர்மன்), பரமேஸ்வரன் (ஜேர்மன்) ஆகியோரின் அன்புத் தகப்பனும் அனுசியா, விஜிதா ஆகியோரின் அன்பு மாமனும் தட்சாகினி, கேசயன், வாகீசன், கிருசன், ஜிவேனி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.11.2009) புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்துமயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீதிராசா வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில். (90583)
தகவல்: இ.ரவீந்திரன் (மகன்)



**31 ஆம் நாள் நினைவஞ்சலி**

திருமதி
**சண்முகம் விமலராணி**

தோற்றம்:14★10★1951
மறைவு: 05★10★2009



எங்கள் குலவிளக்கே அம்மா
பார் உலகில் எங்களை
ஒளியாய் விளங்க வைத்த ஒளி விளக்கே
உலகை அறிய வைத்து
தானணைந்து போன அகல்விளக்கே
வாழ்வில் எம்மை வளரச் செய்து
வளர்ச்சிதனைக் காணாது
இருட்டில் விட்டு மறைந்தது தான் முறையோ

MEMORY
There is No Greater Sorrow
Than To Recall, in Missery
The Time we were Happy.

No 61, அம்பலவாணர் வீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம். (90580)
Loving husband and Children.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்ஸாயே மீண்டும் ஆப். ஜனாதிபதி; இரண்டாம் கட்டத் தேர்தல் ரத்து



வாஷிங்ரன், நவ. 04

ஆப்கானிஸ்தானின் ஜனாதிபதியாக மீண்டும் கர்ஸாயே தெரிவுசெய்யப்பட்டுள்ளார். அதனால் எதிர்வரும் 7 ஆம் திகதி நடைபெறவிருந்த இரண்டாம் கட்ட ஜனாதிபதி வாக்கெடுப்பு ரத்துச் செய்யப்பட்டுவிட்டது.

ஆப்கானிஸ்தானின் இரண்டாம் கட்ட ஜனாதிபதித் தேர்தல் சம்பந்தமாக ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூன் திங்கட்கிழமை திடீரென ஆப்கான் வந்தடைந்தார். இச்சமயத்தில் கர்ஸாயே ஜனாதிபதியாகிவிட்டார் என அறிவிக்கப்பட்டது.

ஆப்கானிஸ்தானில் கடந்த ஒகஸ்ட் 20 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது. இதில் மீண்டும் போட்டியிட்ட ஜனாதிபதி ஹமீத் கர்ஸாயை எதிர்த்து, முன்னாள் வெளிவிவகார அமைச்சர் அப்துல்லா போட்டியிட்டார். ஜனாதிபதித் தேர்தலுடன் 34 மாகாணங்களுக்கான தேர்தல்களும் நடத்தப்பட்டன. வெளியான முடிவுகளின் படி கர்ஸாயே வெற்றி பெற்றுவிட்டார் என அறிவிக்கப்பட்டது.

எனினும், வெளியான தேர்தல் முடிவுகளை எதிரணித் தலைவரும் முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான அப்துல்லா ஏற்கவில்லை. தேர்தலில் மோசடிகள், குளறுபடிகள், வன்முறைகள், அச்சுறுத்தல்கள் ஆகியவை இடம்பெற்றுள்ளன என அவர் சுட்டிக்காட்டினார்.

பல இடங்களில் வன்முறைகள் தலைதூக்கின. தேர்தல் நேர்மையாக நடைபெறவில்லை என சர்வதேச பார்வையாளர்களும் அதிருப்தி தெரிவித்தார்கள். பல்வேறு தரப்புகளிலும் தேர்தல் முடிவுகளுக்குக் கடும் ஆட்சேபனைகள் கிளப்பப்பட்டன. இச்சமயத்தில் மறு தேர்தலை நடத்த கர்ஸாய் ஒப்புக்கொண்டார்.

இதையடுத்து, எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை இரண்டாம் கட்டத் தேர்தல் நடைபெறும் என தேர்தல் ஆணையம் அறிவித்தல் விடுத்தது.

இச்சமயத்தில் போட்டி வேட்பாளர் அப்துல்லா புதிய பிரச்சினையைக் கிளப்பினார். சுதந்திரமானதும், நேர்மையானதுமான தேர்தல் நடைபெறவேண்டுமானால், ஆப்கான் தேர்தல் ஆணையத்தின் தலைவர் அஜிஸ்துல்லா லூதின் அப்பதவியிலிருந்து நீக்கப்படவேண்டும் என அவர் கோரிக்கை விடுத்தார். இது எடுபடவில்லை.

இதனால் அதிருப்தியடைந்த எதிரணி வேட்பாளர் அப்துல்லா, இத்தேர்தலில் தாம் போட்டியிடமாட்டார் என அறிவித்தல் விடுத்தார். இந்நிலையில், ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூன் திங்கட்கிழமை தலைநகரான காபூலுக்கு திடீர் விஜயத்தை மேற்கொண்டார்.

பான் கீ-மூன், காபூலிலுள்ள ஐ.நா. அதிகாரிகளைச் சந்தித்து தேர்தல் ஏற்பாடுகள் தொடர்பாகக் கேட்டறிந்தார். இந்நிலையில், போட்டி வேட்பாளர் தேர்தலிலிருந்து விலகிக்கொண்டமையால் அத்தேர்தல் ரத்துச் செய்யப்பட்டுவிட்டது. அத்துடன் கர்ஸாயே ஜனாதிபதியாக நீடிப்பார் என தேர்தல் ஆணையத் தலைவர் அஜிஸ்லுல்லா லூதின் அறிவித்தல் விடுத்துள்ளார்.

ஒகஸ்ட 20 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் பதிவான வாக்குகளின் முதலாம், இரண்டாம் கட்ட எண்ணிக்கையில் கர்ஸாயே முன்னணி வகித்துள்ளார். எனவே, அவரே மீள ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்றும் தலைமை தேர்தல் ஆணையர் விளக்கமளித்துள்ளார்.

ஆப்கானில் மீண்டும் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டுள்ள ஹமீத் கர்ஸாயிடம் புதிய அத்தியாயம் ஒன்றை உருவாக்குமாறு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தொலைபேசி மூலமாக கோரியுள்ளார். அதே வேளை, ஊழல்களை வேரோடு களைய முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார்.

மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளமைக்காக கர்ஸாய்க்கு அவர் தம் வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார். வாக்கெடுப்பு அதிருப்திக்குள்ளாகியுள்ளது. எனினும், இறுதி முடிவு, ''ஆப்கானிஸ்தானின் சட்டவிதிகளுக்கிணங்க'' வெளியாகியுள்ளது'' என்றும் ஒபாமா சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரிட்டிஷ் பிரதமர் கோர்டன் பிறவுணும் ஆப்கானிஸ்தான் தேர்தல் ஆணையத்தின் முடிவை வெகுவாக வரவேற்றுள்ளார். ஆப்கானின் தலைநகரான காபூலில் தங்கியுள்ள ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூனும், ஹமீத் கர்ஸாய்க்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

# கலிபோர்னியா, அந்தமானில் நிலநடுக்கம்: பாதிப்பில்லை

கலிபோர்னியா, நவ. 04

அமெரிக்க கலிபோர்னியா மாகாணத்தில் உள்ளூர் நேரப்படி நேற்று செவ்வாய்க் கிழமை காலை 11.27 மணிக்கு இலேசான நிலநடுக்கம் ஏற்பட்டது.

பஜா கலிபோர்னியா - தென் கிழக்கு கலிபோர்னியா ஆகிய பகுதிகளில் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டது. இதன் தாக்கம் ரிச்டர் அளவுகோலில் 4.0 புள்ளிகளாகப் பதிவானது. பூமிக்கடியில் 4 கி.மீ. ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

போர்ட்பிளேர் அந்தமானிலும் நேற்று அதிகாலை 3.35 மணிக்கு நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கத்தின் தாக்கம் ரிச்டர் அளவுகோலில் 5.4 புள்ளிகளாகப் பதிவானது. போர்ட்பிளேருக்கு 266 கி.மீ. வடக்கே கடலுக்கடியில் 32 கி.மீ. ஆழத்தில் இந்த நிலநடுக்கம் மையம் கொண்டிருந்தது.

இதனால் ஆழிப்பேரலைகள் ஏதும் ஏற்படவில்லை. கிரேக்கிலும் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிச்டர் அளவு கோலில் இதன் தாக்கம் 5.7 புள்ளிகளாகப் பதிவாகியுள்ளது. இந்த நிலநடுக்கம் உள்ளூர் நேரப்படி காலை 7.25 மணிக்கு ஏற்பட்டது.

தலைநகர் ஏதென்சிலிருந்து 300 கி.மீ. தூரத்தில் இந்த நிலநடுக்கத்தில் மையம் கொண்டிருந்தது என புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது.

# ஆஸி. மாடிக் கட்டடத்தில் தீ: குடியிருப்பாளர்கள் அருந்தப்பு!

மெல்போர்ன், நவ. 04

ஆஸ்திரேலிய மெல்போர்ன் நகரிலுள்ள அடுக்குமாடிக் குடியிருப்புக் கட்டடத்தில் பரவிய தீ, பகீரதப் பிரயத்தனத்தால் அணைக்கப்பட்டது. அதனால் தக்க தருணத்தில் குடியிருப்பாளர்கள் பாதுகாக்கப்பட்டார்கள்.

இந்த அடுக்குமாடிக் குடியிருப்புக் கட்டடம் புரூன்ஸ்விக் என்னுமிடத்தில் உள்ளது. இதன் கீழ் தளத்துக்கருகில் திங்கட் கிழமை பயங்கர சத்தத்துடன் குண்டொன்று வெடித்தது.

இதையடுத்து, கீழ் தளத்தில் பற்றிய தீ மளமளவென மேல் தளத்துக்கும், அருகிலுள்ள கட்டடங்களுக்கும் பரவ ஆரம்பித்தது. இதனால் மேல் தளத்தில் குடியிருந்த எட்டு இந்தியர்களும் ஏனைய குடியிருப்பாளர்களும் வெளியேற முடியாமல் உயிருக்குப் போராடிக்கொண்டிருந்தார்கள்.

தகவலறிந்து விரைந்து வந்த தீயணைப்புப் படையினர், ஒரு மணிநேரம் போராடி தீயை அணைத்தனர். அதனால் குடியிருப்பாளர்கள் அனைவரும் எவ்வித பாதிப்புமின்றி உரிய சமயத்தில் காப்பாற்றப்பட்டனர்.

# சீனாவில் பூகம்பம்; 3 லட்சம் பேர் பாதிப்பு



பீஜிங், நவ. 04

சீனாவின் தென் மேற்குப் பகுதியில் ஏற்பட்ட பூகம்பத்தால் 3 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 28 பேர் காயமடைந்துள்ளனர். உயிரிழப்புகள் குறித்து உடனடி தகவல் எதுவும் வெளியாகவில்லை என அதிகார வட்டாரங்கள் தெரிவித்தன.

பூகம்பத்தில் ஆயிரக்கணக்கான வீடுகள் இடிந்து விழுந்தன. ஆடு, கோழி, பன்றி ஆகியவை உட்பட 400 இற்கும் மேற்பட்ட கால்நடைகளும் மடிந்தன.

யூனன் மாகாணத்திற்கு அருகே திங்கட்கிழமை அதிகாலையில் ஏற்பட்ட இந்த பூகம்பத்தின் தாக்கம் ரிச்டர் அளவுகோலில் 4.9 ஆக பதிவானது என்றும் இவ்வட்டாரங்கள் குறிப்பிட்டன.

பிரபல சுற்றுலா மையமான தலிப் பகுதிக்கு அருகே 35 கி.மீ. ஆழத்தில் இப்பூகம்பம் மையம் கொண்டிருந்தது. இதன் தாக்கம் 22 மைல் தூரம் வரை உணரப்பட்டது என அமெரிக்க புவியியல் ஆராய்ச்சி மையம் தனது இணையத்தளத்தில் தெரிவித்துள்ளது.

## அணு விவகாரத்தில் ஒத்துழைக்குக; ஈரானிடம் ஐ.நா. சபை வலியுறுத்து

அணு பிரச்சினையில் அமெரிக்கா, பிரான்ஸ், ரஷ்யா ஆகிய நாடுகளுடன் ஒத்துழைக்குமாறு ஐ.நாவின் சர்வதேச அணுசக்தி முகமையின் தலைவர் முகமத் எல்பராடி ஈரானை வலியுறுத்தியுள்ளார்.

ஐ.நா. சபையில் இதனை திங்கட்கிழமை அவர் வலியுறுத்தியுள்ளார். ஈரானின் யுரேனியம் செறிவூட்டலை வெளிநாடுகளுக்கு எரிபொருளாக மாற்றி அனுப்புவதற்கான செயல்முறைகளை அளிக்க அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ் ஆகிய நாடுகள் முன்வந்துள்ளன. இந்த வாய்ப்புகளை ஈரான் பயன்படுத்திக்கொண்டு அந்நாடுகளுடன் ஒத்துழைக்கவேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

சர்வதேச அணுசக்தி முகமையின் தலைவர் பதவியிலிருந்து விலகுவதையொட்டி ஐ.நாவில் ஆற்றிய தமது உரையின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# பூகம்ப அனர்த்த அபாய அறிகுறி: ஈரானிய தலைநகர் இடம்மாறும்



ஈரானியத் தலைநகர் தெஹ்ரான்

தெஹ்ரான், நவ. 04

ஈரான் தலைநகர் தெஹ்ரான் அடிக்கடி நிலநடுக்கங்களால் பாதிப்புக்குள்ளாகி வருவதால் தலைநகரை இடம் மாற்ற அரசு முடிவு செய்துள்ளது.

கடும் நிலநடுக்கப் பகுதியில் அமைந்துள்ள தெஹ்ரானை படுமோசமான நிலநடுக்கம் தாக்கும் என்று சர்வதேச புவியியல் நிபுணர்கள் எச்சரித்து வருகிறார்கள். இதனால் ஈரான் அரசு இந்த முடிவை எடுத்துள்ளது.

இதையடுத்து, தலை நகரை இடமாற்றம் செய்யலாம் என உச்சமட்ட மத அரசியல் தலைவர் ஆய துல்லா கொமேனி தெரிவித்த யோசனையை ஈரானிய அரசு உடனடியாக ஏற்றுக் கொண்டு விட்டது.

புதிய தலைநகர் எங்கு அமையும் என்று தெரியவில்லை. ஈரானிய அரசியல், சமூக வரலாற்றில் பல தலைநகரங்கள் இருந்து வந்துள்ளன. இவற்றில் இஸ்பகான், கஸ்வின், ஷிராஸ், மஷ்ஷத், ஹமேடான் ஆகியவை அடங்கும்.

கடைசியாக 1795 ஆம் ஆண்டில் நாட்டை ஆண்ட ஆகா முகம்மத் கான்தான் தெஹ்ரானை தலைநகராக்கினார். அன்று முதல் தெஹ்ரானே இந் நாட்டின் அரசியல், சமூக, பொருளாதார, கலாசாரத் தலைநகராக விளங்கி வருகிறது.

இப்போது இந்த நகரில் 1 கோடியே 20 லட்சம் பேர் வசித்து வருகின்றனர். கடந்த 2003 ஆம் ஆண்டு இந்த நகரில் ஏற்பட்ட பயங்கரப் பூகம்பத்தில் 40 ஆயிரம் பேர் பலியாகியுள்ளனர்.

இதையடுத்து, தலைநகரை மாற்றினால் தான் தெஹ்ரானில் வசிக்கும் மக்களின் எண்ணிக்கையைக் குறைத்து உயிர் பலிகளையும் குறைக்க முடியும் என்ற யோசனைகள் தீவிரமாயின.

பூமிக்கடியில் நூற்றுக்கும் மேற்பட்ட நகரும் பெரும் பாறைத்திட்டுக்களின் மீது தான் தெஹ்ரான் அமைந்துள்ளது. இந்த நகரும் திட்டுக்களால்தான் அவ்வப்போது நிலநடுக்கம் ஏற்பட்டு வருகிறது என புவியியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

அடிக்கடி நகர்ந்து இவை மிகவும் இலகுவாகிவிட்டதால், விரைவிலேயே வரலாறு காணாத அளவுக்கு இப்பகுதியில் பூகம்பம் ஏற்படலாம் என்றும் அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளார்கள்.

உலக அரங்கில்

# துருக்கியில் பன்றிக்காய்ச்சல் தீவிரம்: 24 மணிநேரத்தில் ஐவர் உயிரிழப்பு

அங்காரா, நவ. 04

துருக்கியில் பன்றிக்காய்ச்சல் அதிவேகமாகப் பரவி வருகிறது. கடந்த 24 மணி நேரத்தில் 5 பேர் இந்நோய்க்குப் பலியாகியுள்ளனர். இதனால் மக்களிடையே பீதி ஏற்பட்டுள்ளது.

தலைநகரான அங்காராவில் 65 வயது பெண்மணியும், இஸ்தான்புல்லில் 13 வயது சிறுமியும், சன்லுர்ஃபா நகரில் 4 வயது பெண் குழந்தையும் திங்கட்கிழமை பன்றிக்காய்ச்சலுக்குப் பலியாகியுள்ளனர் என துருக்கி சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதேபோல் கொன்யா நகரில் 22 மாத குழந்தையும், 14 வயது சிறுவனும் பன்றிக் காய்ச்சல் தாக்குதலால் உயிரிழந்துள்ளனர் என சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரி வித்தனர்.


நாடு முழுவதும் 80 இற்கும் அதிகமானோர் பாதிப்புக்குள்ளாகி ஆபத்தான கட்டத்திலுள்ளனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன. அதனால் பலி எண்ணிக்கை மேலும் உயரலாம் என அஞ்சப்படுகிறது.

கடந்த ஒக்டோபர் 24 ஆம் திகதி பன்றிக்காய்ச்சல் தாக்கி முதன்முறையாக ஒருவர் துருக்கியில் உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக மீனவர் மீதான தாக்குதலையடுத்து இந்தியக் கடற்படையினர் உஷார் நிலையில்!

## பாதுகாப்பு அமைச்சர் அந்தோனி தெரிவிப்பு



திருவனந்தபுரம்,நவ.04

பாக். - ஜலசந்திப் பகுதியில் மீன்பிடிக்கும் தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் நடத்துகின்றனர் எனத் தகவல்கள் வருகின்றன. இந்த விடயத்தில் இந்தியக் கடற்படை, கடலோரக் காவல்படை, தமிழகப் பொலிஸ் என அனைத்துப் பாதுகாப்புப் படையினரும் உஷாராக உள்ளனர் - என்று பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோணி தெரிவித்தார்.

அத்துடன், இந்தியாவுடன் உறவு மேம்பட வேண்டுமானால் தீவிரவாதிகளின் முகாம்களை பாகிஸ்தான் அழிக்க வேண்டும் - என்றும் அவர் தெரிவித்தார்.

திருவனந்தபுரத்தில் அளித்த பேட்டியிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

அண்டை நாடுகளுடன் எத்தகைய முரண்பாடுகளும் கொள்ளக் கூடாது என்பதே இந்தியாவின் கொள்கை. அண்டை நாடுகளுடன் உள்ள உறவில் விரிசலை தவிர்க்கவே விரும்புகிறோம். மேலும், உறவு மேம்படவும் இந்தியா ஆவலாக உள்ளது. ஆனால், நன்கு பயிற்சி பெற்ற தீவிரவாதிகளை காஷ்மீர் வழியாக பாகிஸ்தான் அனுப்பி வருகிறது.

இந்திய - பாகிஸ்தான் எல்லையோரமாக அமைந்துள்ள பகுதிகளில் தீவிரவாத முகாம்கள் உள்ளன. இராணுவப் பகுதிகளுக்கு அருகிலேயே அவை அமைந்துள்ளன. பாகிஸ்தான் மண்ணில் முழு வீச்சில் செயற்படும் தீவிரவாத முகாம்களே இந்தியா - பாகிஸ்தான் உறவுக்கு முக்கிய முட்டுக்கட்டையாக உள்ளன. எனவே, தீவிரவாத முகாம்களை அழித்தால் மட்டுமே இரு நாடுகளின் உறவு மேம்பாடு அடையும்.

அதேவேளை, இந்திய மாலுமிகளுடன் சேர்த்து இரண்டு கப்பல்களை சோமாலிய கடற் கொள்ளையர்கள் கடத்திச் சென்றுள்ள சம்பவம் மிகுந்த வேதனை அளிக்கிறது. அமெரிக்கா, ரஷ்யா, சீனா, இங்கிலாந்து உள்ளிட்ட உலக நாடுகளின் கடற்படையினர் நடவடிக்கை எடுத்த போதிலும் இந்த நிலைமை தொடருகிறது. சோமாலிய கடற்கரைப் பகுதிகளில் கொள்ளையர்களை ஒழிக்கும் பணியில் இந்தியக் கடற்படையும் ஈடுபட்டுள்ளது. தற்போது, புதிய யுக்திகளை அந்தக் கொள்ளையர்கள் கையாண்டு வருகின்றனர்.

உள்நாட்டு பாதுகாப்புக்காக இராணுவம் மூலமாக நடவடிக்கை எடுப்பது என்பது கடைசிக் கட்ட நடவடிக்கையாகும். எனவே, மாவோயிஸ்ட் தீவிரவாதிகளுக்கு எதிராக இராணுவத்தைப் பயன்படுத்த மத்திய அரசு ஆர்வம் காட்டவில்லை. சட்டம்-ஒழுங்கு என்பது மாநில அரசு நிர்வாகத்துக்கு உட்பட்ட பிரச்சினை.

எனினு , உள்நாட்டுப் பாதுகாப்புக்காக துணை இராணுவத்தை அனுப்புவது உள்ளிட்ட ஒத்துழைப்பை மத்திய அரசு அளிக்கும். மாவோயிஸ்ட் உட்பட யாரையும், சட்டத்தை தன் கையில் எடுத்துக் கொள்ள அனுமதிக்க முடியாது.

அருணாசல பிரதேசத்தை சீனா, சொந்தம் கொண்டாடுவதற்கு இந்தியத் தரப்பில் ஏற்கனவே பலமுறை விளக்கம் சொல்லப்பட்டுள்ளது. கேரளாவை போல அருணாசலப் பிரதேசமும் ஒருங்கிணைந்த இந்தியாவின் ஒரு பகுதி. இந்தியாவின் ஒரு மாநிலம்.

பாக். - ஜலசந்தி பகுதியில் மீன் பிடிக்கும் தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் நடத்துகின்றனர் எனத் தகவல்கள் வருகின்றன. இந்த விடயத்தில் இந்தியக் கடற்படை, கடலோரக் காவல்படை, தமிழகப் பொலிஸ் என அனைத்துப் பாதுகாப்புப் படையினரும் உஷாராக உள்ளனர் - என்றார்.

# கர்நாடக முதல்வராக எடியூரப்பா நீடிப்பார்; மாற்றமில்லை என்கிறது பா.ஜ.க. தலைமை

டில்லி, நவ. 04

கர்நாடகாவில் எடியூரப்பாவை முதல்வர் பதவியில் நீடிக்கச் செய்வது - என்று டில்லியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பா.ஜ.க. மேலிடத் தலைவர்கள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இதனால், அவரைக் கவிழ்ப்பதற்கு ரெட்டி சகோதரர்கள் எடுத்த முயற்சி தோல்வி அடைந்தது. கர்நாடகாவில் முதல்வர் எடியூரப்பாவை பதவியில் இருந்து நீக்கும்படி வருவாய்த் துறை அமைச்சர் கருணாகர ரெட்டி, அவருடைய சகோதரர் சுற்றுலாத்துறை அமைச்சர் ஜனார்த்தன ரெட்டி ஆகியோர் தலைமையிலான அதிருப்திக் குழு போர்க்கொடி தூக்கியுள்ளது. தங்களுக்கு 60 எம்.எல்.ஏ.க்களின் ஆதரவு இருப்பதாக அவர்கள் கூறி வருகின்றனர். இதனால், கர்நாடக ஆளும் கட்சியில் பெரும் பிளவு ஏற்பட்டுள்ளது. அதிருப்திக் குழுவைச் சமாதானப்படுத்த பா.ஜ.க. மூத்த தலைவர் அருண் ஜெட்லி எடுத்த முயற்சி தோல்வி அடைந்ததைத் தொடர்ந்து, அதிருப்தித் தலைவர்களை டில்லிக்கு வரும்படி கட்சி மேலிடம் உத்தரவிட்டது.

இதன்படி கடந்த ஞாயிறன்று டில்லி சென்ற ஜனார்த்தன ரெட்டி, கருணாகர ரெட்டியின் ஆதரவாளர்களான கர்நாடக உள்துறை அமைச்சர் ஆச்சார்யா, சட்ட அமைச்சர் சுரேஷ் குமார் ஆகியோர், கட்சித் தலைவர் ராஜ்நாத் சிங், மூத்த தலைவர் எல்.கே.அத்வானி, சுஷ்மா சுவராஜைச் சந்தித்துப் பேசினர். அப்போது, எடியூரப்பாவை மாற்றும் பேச்சுக்கே இடமில்லை என்று கூறிய அவர்கள், அதிருப்திப் பிரச்சினை பேச்சு மூலம் தீர்க்கப்படும் என்று தெரிவித்தனர்.

ஜனார்த்தன ரெட்டி கூறுகையில், கர்நாடகாவுக்கு நல்ல தலைமையை கொடுக்க வேண்டும். மேலிடத் தலைவர்களின் மீது எனக்கு நூறு சதவீத நம்பிக்கை இருக்கிறது - என்றார்.

அருண் ஜெட்லியைச் சந்திக்கும் முன்பாக காலையில் அளித்த பேட்டியில், எடியூரப்பாவை நீக்கும் கோரிக்கையை கைவிட மாட்டோம் - என்றார்.

இந்த நிலையில், கர்நாடக பிரச்சினையை பற்றி பா.ஜ.க. தலைவர் ராஜ்நாத் சிங் தலைமையில் நேற்றுமுன்தினம் மாலை மூத்த தலைவர்கள் கூட்டம் நடைபெற்றது. இதில். அத்வானி, சுஷ்மா சுவராஜ். அருண் ஜெட்லி, அனந்தகுமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டார். 2 மணி நேரத்துக்கு மேல் நடைபெற்ற இந்தக் கூட்டத்துக்குப் பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த ராஜ்நாத் சிங் -

முதல்வர் பதவியில் எடியூரப்பா நீடிப்பார். அவரை மாற்றும் திட்டமில்லை. அதிருப்தியாளர்களின் குறைகள் சுமுகமான முறையில் தீர்க்கப்படும் - என்றார்.

# தீவிரவாதியை சுட்டுக்கொன்றதற்குப் பரிசு: காஷ்மீர் பெண் பொலிஸ் அதிகாரியானார்

வீடு புகுந்து மிரட்டிய தீவிரவாதியை அவனது துப்பாக்கியையே பிடுங்கி சுட்டுக் கொன்ற காஷ்மீர் இளம்பெண் ருக்சனா, அவரது தம்பி அஜ்ஜாஷ், மாமா ஹூசைன் ஆகியோர் காஷ்மீரில் சிறப்புப் பொலிஸ் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டனர்.

ஜம்முகாஷ்மீரில் ரஜோரி மாவட்டம் ஷதரா ஷரிப் மலைப் பகுதியில் கல்சியன் என்ற கிராமத்தில் உள்ள ஒரு வீட்டுக்குள் செப்ரெம்பர் 27ஆம் திகதி இரவில் பாகிஸ்தானைச் சேர்ந்த லஸ்கர் இயக்க தீவிரவாதிகள் புகுந்தனர். தங்களுக்கு அடைக்கலம் தரா விட்டால் சுட்டுக் கொன்று விடுவோம் என்று மிரட்டி அவர்களைத் தாக்கினர். அப்போது வீட்டில் இருந்த ருக்சனா கௌசர் என்ற 20 வயது இளம் பெண்ணும் அவரது தம்பி அஜ்ஜாஷும் தீவிரவாதிகளுடன் போராடி அவர்களிடம் இருந்த ஏ.கே. 47 ரகத் துப்பாக்கியை பறித்துக் கொண்டனர்.

இளம் பெண் ருக்சனா ஏ.கே. 47 துப்பாக்கியால் சரமாரியாகச் சுட்டதில் தீவிரவாதி ஒருவன் குண்டு பாய்ந்து இறந்தான். ருக்சனாவின் தம்பி அஜ்ஜாஷ், மாமா ஹூசைன் ஆகியோர் கோடாரியால் வெட்டினர். இதில் படுகாயம் அடைந்த மற்ற இரு தீவிரவாதிகள் தப்பி ஓடி விட்டனர். தீவிரவாதிகள் தாக்கியதில் ருக்சனாவின் பெற்றோர் காயமடைந்தனர்.

இந்தத் தீரச் செயலைப் பாராட்டி ருக்சனா கௌசர், அவரது தம்பி அஜ்ஜாஷ், மாமா ஹூசைன் ஆகியோர் ஜம்முகாஷ்மீர் பொலிஸில் சிறப்பு அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

# கருவிலுள்ள குழந்தையின் பாலினத்தை தெரிவித்த 2 வைத்தியர்களுக்குச் சிறை!

மும்பை, நவ. 04

கருவிலிருக்கும் குழந்தை ஆணா, பெண்ணா என்பதைத் தெரிவித்த 2 வைத்தியர்களுக்கு மும்பை நீதிமன்றம் 3 ஆண்டு காலச் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

மும்பை தாதர் பகுதியைச் சேர்ந்தவர்கள் ஹோமியோபதி டாக்டர் சசய்யா டாடெட் (வயது - 42) மற்றும் டாக்டர் சுபாங்கி அத்கர் (வயது - 52). இவர்கள் தாதர் மற்றும் அவு ரங் காபாத் பகுதியில் மகப்பேறு வைத்திய சாலைகளை நடத்தி வருகின்றனர். கடந்த 2004ஆம் ஆண்டு பத்திரிகைகளில் சசய்யா டாடெட் விளம்பரம் வெளி யிட்டார். அதில், தன்னை வெளிநாட்டில் பயிற்சி பெற்ற வைத்தியர் எனவும், ஆண் குழந்தை வேண்டும் என்றால் அணுகவும் என தனது முகவரியை அளித்திருந்தார்.

அதிகரித்து வரும் பெண் சிசுக் கொலைகளைத் தடுக்க அரசு சட்ட திருத்தம் கொண்டுவந்துள்ளது. இதன்படி, கருவில் இருக்கும் குழந்தை ஆணா, பெண்ணா என்ற தகவலை வைத்தியர் வெளியிடத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஆண் குழந்தை வேண்டுமா என வெளியான விளம்பரம் அங்கு பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இதையடுத்து மாநில சுகாதாரத் துறை அதிகாரிகள் அந்த வைத்தியசாலைகளில் சோதனை நடத்தினர். இதுகுறித்து வழக்குப்பதிவும் செய்யப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த உள்ளூர் நீதிமன்றம் அவர்களுக்கு பாலினத் தேர்வுத் தடுப்புச் சட்டம் 2003இன் கீழ் அதிகபட்சமாக 3 ஆண்டு சிறை மற்றும் ரூபா 10 ஆயிரம் அபராதம் விதித்துத் தீர்ப் பளித்தனர்.

இதுபோன்ற ஒரு குற்றத்துக்காக 2 வைத்தியர்கள் தண்டனை பெற்றுள்ளமை இந்தியாவிலேயே இதுதான் முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது.

# சுதந்திரமாக நடமாட அனுமதி தாருங்கள்; அமைச்சரிடம் ஈழ அகதிகள் கோரிக்கை

திருவண்ணாமலை, நவ. 04

முகாமுக்கு வெளியே சென்று சுதந்திரமாக நடமாட அனுமதி தாருங்கள் - என்று அமைச்சர் எ.வ.வேலுவிடம் தமிழகத்திலுள்ள முகாம் அகதிகள் கோரிக்கை விடுத்தனர்

அடி அண்ணாமலை, அக்தி அந்தல், செங்கம் கொண்டம், மல்லவாடி, புதுப்பாளையம், சேத்பட், போளுர் ஆகிய 8 முகாம்களை ஆய்வு செய்யும் பணியை தமிழக உணவுத்துறை அமைச்சர் எ.வ.வேலு, மாவட்ட ஆட்சியர் ராஜேந்திரன் மற்றும் அரசு அதிகாரிகள் நேற்று மேற்கொண்டுள்ளனர்.

அமைச்சர் வேலுவிடம் அகதிகள் விடுத்த கோரிக்கைகளை வருமாறு -

நாங்கள் வசிக்கும் வீடுகளுக்கு கதவுகள் இல்லை. கழிப்பிட வசதி இல்லாததால் மழைக்காலங்களில் சிரமமாக இருக்கிறது. குளியல் அறை வசதி, மின்சார வசதிகள் இல்லை.

மேலும், தொடர்ந்து வெளியே செல்வதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. வெளியே அனுமதித்தாலும் மாலையில் விரைவில் திரும்பிவிட வேண்டும் என்று அறிவுறுத்துகின்றனர். இதனால் மற்ற முகாம்களில் உள்ள உறவினர்கள், நண்பர்களைச் சந்திக்க இயலவில்லை. இது தளர்த்தப்பட வேண்டும் - என்றனர்.

அதிகாரிகளிடம் அனுமதி பெற்று சென்னை, கோயம்பத்தூர், திருப்பூர் போன்ற பகுதிகளுக்கு வேலைக்குச் செல்பவர்கள் 15 நாள்களுக்கு ஒரு முறை முகாம்களுக்கு வந்து கையெழுத்திட வேண்டும் என்று அதிகாரிகள் வலியுறுத்துகின்றனர். மாதம் இரண்டு முறை வருவதால் நாங்கள் பெறும் ஊதியம் பஸ் கட்டணத்துக்குச் செலவாகி விடுகிறது. இதைக் கருத்தில் கொண்டு இதற்கு நல்ல முடிவை அமைச்சர் எடுக்க வேண்டும் என்றும் அகதிகள் கோரிக்கை வைத்தனர்.

முகாமில் உள்ள வயதான பெண்மணிகள் அமைச்சர் எ.வ.வேலுவிடம், எங்களுக்கு வெளியே செல்ல அனுமதி தருவதில்லை. அதனால் எங்களுக்கு இலவச டி.வி. வழங்க ஏற்பாடு செய்யுங்கள் - என்றனர்.

அகதிகளின் கோரிக்கையை பொறுமையுடன் கேட்ட அமைச்சர், இதுகுறித்து பரிசீலிப்பதாக நம்பிக்கை தெரிவித்தார்.

# ஈழத்தமிழர் அவலம் பற்றிய சி.டியை ஒளிபரப்ப அனுமதி தரவேண்டும்

## புதிய தமிழகம் கட்சி கோரிக்கை

திருச்சி, நவ. 04

இலங்கைத் தமிழர்களின் அவலநிலை குறித்த ஆவணப் படத்தை திரையிட திருச்சியில் பொலிஸார் அனுமதி மறுத்ததை அடுத்து, புதிய தமிழகம் கட்சியினர் கடந்த திங்கட்கிழமை மாவட்ட வருவாய் அலுவலரிடம் அனுமதி கோரி மனு ஒன்றை அளித்தனர்.

திருச்சி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் புதிய தமிழகம் கட்சி மாநகர் மாவட்ட செயலாளர் சாங்கர், அய்யப்பன் மற்றும் நிர்வாகிகள் மாவட்ட வருவாய் அதிகாரி தட்சிணா மூர்த்தியிடம் மனுவொன்றைக் கொடுத்தனர்.

அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

புதிய தமிழகம் கட்சி சார்பில் பெப்ரவரி 6, 7 ஆகிய திகதிகளில் உலகத் தமிழர் பாதுகாப்பு மாநாடு நடைபெற இருக்கிறது. இது குறித்த தெருமுனை பிரசாரமும், இலங்கை தமிழர்களின் அவலநிலை குறித்த ஆவணத் திரைப்படம் ஒன்றை ஒளிபரப்புச் செய்யவும் இருக்கிறோம்.

செவ்வாய்க்கிழமை மாலை 7 மணிக்கு திருச்சி ஜெயில்பேட்டையிலும், இரவு 9 மணிக்கு சத்தியமூர்த்தி நகரிலும் தெரு முனை பிரசாரம் நடத்த அனுமதி கேட்ட போதிலும், பொலிஸார் இதுவரை அனுமதி வழங்கவில்லை.

இதற்கு உயர்நீதிமன்றம் அனுமதி கொடுத்து இருக்கிறது. ஆனால் பொலிஸார் அனுமதி மறுத்து வருகின்றனர். எனவே, திருச்சி நகரிலும், மாவட்டம் முழுவதும் ஆவணத் திரைப்படத்தை ஒளி பரப்பு செய்வதற்கு அனுமதி தரவேண்டும் - என்றுள்ளது.

## இந்தியச் செய்திகள்

# கர்நாடகாவில் ஈழ மீனவர் மாயம்!

சென்னை, நவ. 04

விருப்பாட்சி அகதிகள் முகாமைச் சேர்ந்த இலங்கைத் தமிழ் மீனவர் கர்நாடகாவில் மாயமானார். இதுகுறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தினர்.

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் தாலுகா விருப்பாட்சியில் இலங்கைத் தமிழ் அகதிகள் முகாம் உள்ளது. இங்கு இலங்கை மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த சின்னையா (வயது - 55) என்பவர் குடும்பத்துடன் வசித்து வருகிறார். இவரது மூத்த மகன் அமல நாதன் (வயது - 25). மீன் பிடிக்கும் தொழி லாளி. இவர் கடந்த மாதம் கர்நாடகா மாநிலம் மங்களூருக்குச் சென்று தனியார் படகு உரிமையாளர் ஒருவரிடம் மீன் பிடிக்கும் வேலைக்குச் சென்றார்.

கடந்த ஒக்ரோபர் மாதம் 11 ஆம் திகதி மீன்பிடிக்க கடலுக்குச் சென்ற அமலநாதன் கரைதிரும்பவில்லை. இவருடன் சென்ற மேலும் 13 பேரும் கரை திரும்பவில்லை. இதுதொடர்பாக படகு உரிமையாளர் கொடுத்த முறைப்பாட்டின் பேரில் பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதுகுறித்த தகவல் கிடைத்தவுடன் ஒட்டன்சத்திரம் தாசில்தார் பஷீர், மண்டல துணை தாசில்தார் இதயத்துல்லா, வருவாய் ஆய்வாளர் செந்தில்குமார், கிராம நிர்வாக அலுவலர் வஜ்ரவேல் ஆகியோர் நேற்றுமுன் தினம் காலை அகதிகள் முகாமில் இது தொடர்பாக ஆய்வு மேற்கொண்டு விசாரணை நடத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். வணிகர் கழகத்தின் புதிய கட்டடத்திறப்பு விழா கடந்த சனிக்கிழமை நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. புதிய கட்டடத்தை கழகத்தின் தலைவர் எஸ். ஜனக்குமார் திறந்து வைப்பதையும், தொழிலதிபர் ஈ.எஸ்.பி. நாகரத்தினம் மங்கள விளக்கேற்றுவதையும், கட்டடத்தில் பால் பொங்குவதையும், சமயக் கிரியைகள் இடம்பெறுவதையும் காணலாம். *(படங்கள்: லக்ஸ்மன்)*

## குடாநாட்டில் பஸ் சாரதி, காப்பாளர் பதவிகளுக்கான நேர்முகப்பரீட்சை கோண்டாவில் டிப்போவில் நாளை

யாழ்ப்பாணம்,நவ.4

யாழ்.மாவட்டத்தில் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சாரதி மற்றும் காப்பாளர் பதவிகளுக்கு ஆள்சேர்ப்பதற்கான நேர்முகப்பரீட்சை நாளை வியாழக்கிழமை காலை 9 மணி முதல் கோண்டாவில் சாலையில் இடம்பெருவிருக்கின்றது.

இந்தப் பதவிகளுக்கு இதுவரையில் விண்ணப்பித்திருப்போர்களை இந்நேர்முகப் பரீட்சையில் கலந்துகொள்ளுமாறு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கேட்டுக்கொண்டுள்ளார்.

மேற்படி நேர்முகப்பரீட்சையை நடத்துவதற்கு கொழும்பிலிருந்து போக்குவரத்து அமைச்சு சார்ந்த உயர்அதிகாரிகள் யாழ்ப்பாணம் வந்துள்ளனர். எனவே இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நேர்முகப்பரீட்சையில் கலந்துகொண்டு உரிய நியமனங்களை பெற்றுக்கொள்ளுமாறு மேற்படி நியமனங்களுக்கு விண்ணப்பித்துள்ளவர்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கேட்டுக்கொண்டுள்ளார்.

சாரதி நியமனம் தொடர்பில் நேர்முகப் பரீட்சையில் கலந்துகொள்பவர்கள் தங்களது பிறப்புச் சான்றிதழ், கல்விச் சான்றிதழ் (8ஆம் வகுப்பு சித்தியடைந்திருத்தல் வேண்டும்), பாடசாலையை விட்டு நீங்கிய சான்றிதழ்,தேசிய அடையாள அட்டை, கிராம சேவகர் சான்றிதழ், சாரதி அனுமதிப் பத்திரம் (3 ஆண்டுகள் பழமைவாய்ந்ததாக இருத்தல் வேண்டும்) என்பவற்றுடன் விண்ணப்பதாரிகள் 63 அங்குல உயரம் உடையவர்களாகவும் 100 இறாத்தல் பாரமுடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

காப்பாளர் நியமனம் தொடர்பில் நேர்முகப்பரீட்சையில் கலந்துகொள்பவர்கள் தங்களது பிறப்புச் சான்றிதழ், கல்விச் சான்றிதல் (க. பொ. தா சாதாரணதர பரீட்சையில் கணிதம், மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்) பாடசாலையை விட்டு நீங்கிய சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, கிராம சேவகர் சான்றிதழ் என்பவற்றுடன் விண்ணப்பதாரிகள் 60 அங்குல உயரம் உடையவர்களாகவும் 100 இறாத்தல் பாரமுடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

மேலதிக விவரங்களுக்கு 021 222 9824 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும் என்று சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு கேட்டுள்ளது. (1)

## ஒவியக் கண்காட்சி இன்று வரை நீடிப்பு

சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி ஒவிய மன்றம் நடத்தும் ஒவியக்கண்காட்சி இன்று வரை நீடிக்கப்பட்டுள்ளது.

நேற்று ஆரம்பமான கண்காட்சியை சித்திரபாட ஆசிரிய ஆலோசகர் திருமதி ம. இளமுருகன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். கல்லூரி முதல்வர் திருமதி ஆ. வேலுப்பிள்ளை கண்காட்சி அறை நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

வருகை தரும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதனாலேயே இன்று இரண்டாவது நாளாகவும் கண்காட்சி நீடிக்கப்பட்டுள்ள தாகவும் அறிவிக்கப்படுகின்றது.

## மஹிந்த மாமா! ஏன் எமது வீட்டை எரித்தீர்கள்?




தமது வீடு எரியூட்டப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஐ.தே.கட்சி எம்.பியான பாலித ரங்க பண்டார நேற்று நாடாளுமன்றம் செல்லும் வீதியில் குடும்பத்தினருடன் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டார். 'மஹிந்த மாமா, ஏன் எங்கள் வீட்டை எரித்தீர்கள்?' என்ற பதாகையை தாங்கியபடி ரங்க பண்டாரவின் மகன் அங்கு நின்றிருந்தார்.

## 35 ஆயிரத்து 646 கோடி ரூபாவுக்கு இடைக்காலக் கணக்கு அறிக்கை

### நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது

கொழும்பு, நவ. 04

அடுத்த ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் அடுத்த வருடத்தின் முதல் நான்கு மாதங்களுக்கான அரசின் செலவினத்தை வெளிப்படுத்தும் இடைக்காலக் கணக்கு அறிக்கை நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

பிரதி நிதிஅமைச்சர் பதவியையும் வகிக்கும் பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் சரத் அமுனுகம அரசின் சார்பில் 35 ஆயிரத்து 646 கோடி ரூபா பெறுமதிக்குரிய இடைக்காலக் கணக்கு அறிக்கையை சபையில் சமர்ப்பித்தார்.

ஒவ்வொருதுறைக்கும், ஒவ்வொரு அமைச்சுக்குமான மீண்டும் வரும் செலவினமும், மூலதனச் செலவினமும் தனித்தனியாக இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தன.

எனினும் நாட்டின் உத்தேச வருமானம் பற்றிய விடயம் எதையும் இந்த அறிக்கை கொண்டிருக்கவில்லை.

வரவு பற்றிய விடயங்கள் அடங்காமல் செலவினம் பற்றி மட்டுமே இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தமையால், இக்காலப்பகுதியில் வரவுக்கு மிஞ்சிய செலவினத்தால் வழமையாக ஏற்படும் துண்டு விழும் தொகை குறித்து எதிர்வு கூறல் எதுவும் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

இந்த நான்குமாத காலப்பகுதியில் அரசின் எல்லா அமைச்சுகள் மற்றும் துறைகளுக்குமான மீண்டுவரும் செலவினமாக 197 ஆயிரத்து 478 கோடி ரூபாவும், மூலதனச் செலவினமாக 158 ஆயிரத்து 987 கோடி ரூபாவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டு முற்பகுதியில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவிருப்பதால், அத் தேர்தலின் பின்னர் ஆட்சிக்கு வரும் புதிய அரசுக்கு, அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தைக் கையாள்வதற்கு வசதி அளிக்கும் முகமாகவே, இம்முறை - இப்போது - வரவு, செலவுத் திட்டத்துக்குப் பதிலாக முதல் நான்கு மாதங்களுக்கான இடைக்கால அறிக்கை மட்டும் சமர்ப்பிக்கப்[illegible] விளக்கம் அ[illegible]

## அவசர நோயாளர் விமான சேவையை வருட இறுதியுடன் செஞ்சிலுவை நிறுத்துகிறது

யாழ்ப்பாணம், நவ.4

யாழ்.போதனாவைத்தியசாலையிலிருந்து அவசர நோயாளர்களை மேலதிக சிகிச்சைக்காக கொழும்புக்கு விமானம் மூலம் அழைத்துச் செல்லும் சேவையை வருட இறுதியுடன் செஞ்சிலுவை சர்வதேசக் குழு நிறுத்தவுள்ளது. இந்த விடயம் இந்த அமைப்பால் யாழ். வைத்தியசாலை நிர்வாகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.போதனாவைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் என். தேவநேசன் இத் தகவலைத் தெரிவித்தார். தற்போது நோயாளர்கள் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ். சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் நிறுவனத்தின் அம்புலன்ஸ்கள் மூலமாக வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். பின்னர் அங்கிருந்து கொழும்புக்கு சிகிச்சைகளுக்கென அனுப்பிவைக்கப்படுகின்றனர். இதேவேளை, ஏ - 9 வீதியூடாக நோயாளர்களை அழைத்துச் செல்ல ஆரம்பித்த நாளிலிருந்து இன்று வரை 5 தடவைகளில் 6 நோயாளர்கள் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் என்றும் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (1-7)

## இலங்கை நீதிபதிகள் விவகாரத்தினால் ஆஸியுடனான உறவை பிஜி துண்டித்தது

கொழும்பு, நவ. 04

பீஜித் தீவில் கடமையாற்றச் சென்றிருக்கும் இலங்கை நீதிபதிகள் குழு மீது பிரயாணத்தடை ஒன்றை ஆஸ்திரேலிய அரசு பிறப்பித்துள்ள நிலையில் பீஜித் தீவு அரசு ஆஸ்திரேலியாவுடனான இராஜதந்திர உறவுகளை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வந்துள்ளது.பீஜித் தீவில் நீதி நிர்வாக நடவடிக்கைகளை மீளக் கட்டியெழுப்புவதற்காக இலங்கை நீதிபதிகள் குழுவொன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை பீஜித் தீவுக்குப் புறப்பட்டிருந்தது. இக்குழுவினர் ஆஸ்திரேலியா ஊடாகவே முதலில் பீஜித் தீவுக்கு விமானம் மூலம் செல்ல இருந்தனர்.

ஆனால் அவர்கள் விசாவுக்காக விண்ணப்பித்தபோது கொழும்பிலுள்ள ஆஸ்திரேலிய தூதரக அதிகாரிகள் இந்நீதிபதிகளை தொலைபேசியில் தொடர்பு கொண்டார்கள். இந்த நீதிபதிகள் பீஜித் தீவுக்கு சென்று கடமையாற்றக் கூடாது என்று ஆலோசனை கூறினார்கள். ஆஸ்திரேலியாவின் எதிர்ப்பையும் மீறிச் சென்று பீஜித் தீவில் கடமையாற்றினால் அக்காலப் பகுதிக்குள் ஆஸ்திரேலியாவுக்குள் இலங்கை நீதிபதிகள் பிரவேசிக்க முடியாதென்றும் எச்சரித்துள்ளனர். அத்துடன் விசாவையும் வழங்கவில்லை.

இந்நிலையில் நீதிபதிகள் குழு வேறு ஒரு நாடு மூலமாகவே பீஜித் தீவுக்கு விமானப் பயணம் மேற்கொண்டது. இந்நிலையிலேயே பீஜித் தீவில் கடமையாற்ற வந்திருக்கும் இலங்கை நீதிபதிகள் விடயத்தில் தேவை இல்லாமல் ஆஸ்திரேலியா மூக்கை நுழைத்துள்ளது என்று பீஜித் தீவு அரசு கண்டனம் வெளியிட்டுள்ளதுடன் ஆஸ்திரேலிய அரசுடனான இராஜதந்திர உறவுகளை உடனடியாக முடிவுக்கு கொண்டு வருவதாகவும் நேற்று அறிவித்தது.

பீஜித் தீவு நாட்டு ஜனாதிபதி இந்த அறிவிப்பை விடுத்துள்ளார். பீஜித் தீவுக்கான ஆஸ்திரேலியத் தூதுவர் 24 மணித்தியாலங்களுக்குள் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்றும் அவர் உத்தரவிட்டுள்ளார். அத்துடன் ஆஸ்திரேலியாவுக்கான பீஜித்தீவுத் தூதுவரை உடன் திரும்பி வருமாறும் உத்தரவிட்டுள்ளார்.

பீஜித் தீவின் நீதி நிர்வாகத்தில் ஆஸ்திரேலியாவைப் போலவே நியூஸிலாந்தும் தேவையில்லாமல் தலையிட்டு வருகின்றது என்றும் குற்றஞ்சாட்டியிருக்கும் அவர், நியூஸிலாந்துடனான இராஜதந்திர உறவுகளையும் பீஜித் தீவு முடிவுக்கு கொண்டு வருகிறது என்றும் அந்நாட்டுத் தூதுவரும் 24மணித்தியாலயங்களுக்குள் நாட்டை விட்டு வெளியேறவேண்டும் என்றும் உத் தரவிட்டுள்ளார்.

## சரத்பொன்சேகா அமெரிக்காவுக்கு பொய்யான தகவல்களைக் கூறக்கூடும்

### இணையத்தளத்துக்கு அமைச்சர் டக்ளஸ் பேட்டி



கொழும்பு, நவ. 04

முப்படைகளின் தலைமை அதிகாரியும், முன்னாள் இராணுவத் தளபதியுமான சரத் பொன்சேகா அரசியல் காரணங்களுக்காக அமெரிக்காவுக்கு பொய்யான தகவல்களைக் கூறக்கூடும் என்று சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் தற்சமயம் உள்ள சரத் பொன்சேகா இலங்கையின் யுத்தக்குற்றங்கள் மற்றும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாயவின் போர்க்காலக் குற்றங்கள் ஆகியன குறித்து வாக்குமூலம் வழங்கவேண்டுமென்று அமெரிக்காவின் உள்ளகப் பாதுகாப்புத்துறை அதிகாரிகளால் கேட்கப்பட்டிருக்கின்றார் எனச் செய்திகள் வெளிவந்துள்ளன. ஆனால் இது குறித்து அமெரிக்கா எவ்வித கருத்துகளும் கூறாமல் வெறும் மௌனம் மாத்திரம் சாதித்து வருகிறது.

இந்நிலையில் சரத் பொன்சேகா அமெரிக்க உள்ளகப் பாதுகாப்புத்துறையினருக்கு இன்று வாக்குமூலம் வழங்கவுள்ளார் என்று கதை அடிபடுகின்றது. அவர் [illegible]போகிறார் என்று சர்வதேச [illegible] உள்நாட்டு அரசியல்வாதிகளும், அரசியல் அவதானிகளும், இராஜதந்திரிகளும், ஊடகவியலாளர்களும், இலங்கைப் பிரஜைகளும் மிகவும் உன்னிப்பாக அவதானித்தவாறு உள்ளனர்.

இந்நிலையிலேயே இலங்கையின் அமைச்சர்களில் ஒருவரான டக்ளஸ் தேவானந்தா, அரசியல் காரணங்களுக்காக பொன்சேகா அமெரிக்காவுக்கு பொய்சொல்லக்கூடும் என்று கருத்துக் கூறியிருக்கிறார்.

அவர் இந்தியாவின் 'ரைம்ஸ் நௌ' (Times Now) இணையத்தளச் செய்திச் சேவைக்கு வழங்கிய பிரத்தியேகப் பேட்டியிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அப் பேட்டியில் தெரிவித்துள்ளவை வருமாறு:-

''ஜெனரல் பொன்சேகா அரசியலில் பிரவேசிப்பதற்கு முயற்சி செய்கின்றார். எதிர்க்கட்சிகள் அவரை அரசியலில் ஈடுபடுத்த முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. அவர் மூன்றாவது சக்தியாக எதிர்க்கட்சிகளால் அரசியலில் நிற்க வைக்கப்படக்கூடும். எனவே, பொன்சேகா அரசியல் காரணங்களுக்காக அமெரிக்காவுக்கு ஒருபோதும் நடந்திராத விடயங்களைக் கூறக்கூடும். இதுவே எமது அரசின் நிலைப்பாடும்கூட. பொன்சேகா அமெரிக்காவுக்கு கூற இருக்கும் வாக்குமூலங்களை இலங்கை அரசு மறுக்கக்கூடிய நிலைதான் காணப்படுகிறது'' - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில் இன்று கண்டன ஆர்ப்பாட்டம்

மனநிலை பாதிக்கப்பட்ட இளைஞர் ஒருவர் கொழும்பு பம்பலப்பிட்டி கடலில் கடந்த 29ஆம் திகதி அடித்துக் கொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து ஜனநாயக மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இன்று நண்பகல் 12 மணிக்கு கோட்டை ரயில் நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடைபெறவிருக்கின்றது. இந்த ஆர்ப்பாட்டத் தில் கொழும்பு நகர வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள், ஊழியர்கள் உட்பட பொதுமக்கள் கலந்துகொள்வர்.

## சரத் பொன்சேகா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

''சரத் பொன்சேகாவை விசாரிப்பது தொடர்பான தகவல்களை நாங்கள் உறுதி செய்யவுமில்லை. நிராகரிக்கவுமில்லை'' என அமெரிக்க உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் மட் சண்ட்லெர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் இயன் கெலி தனக்கு இது குறித்து எதுவுமே தெரியாது எனக் குறிப்பிட்டுள்ளார்.

''இது குறித்த செய்திகள் எதனையும் நான் அறியவில்லை. இதனால் இது பற்றி கருத்து கூறமுடியாது. இது பற்றி உள்நாட்டு பாதுகாப்புத் திணைக்களத்திடமே கேட்கவேண்டும்'' என்று செய்தியாளர் மாநாட்டில் இயன் கெலி குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் முன்னாள் இராணுவத் தளபதியை விசாரணை செய்வது குறித்து அந்த நாட்டு வெளிவிவகார அமைச்சர் கண்டனம் வெளியிட்டுள்ளாரே என்று செய்தியாளர்கள் கேட்டபோது, அது குறித்தும் தான் அறிந்திருக்கவில்லை என இயன் கெலி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, யுத்தக் குற்ற விசாரணைகள் இடம்பெற்றால் இது பற்றி எதனையும் தெரிவிக்க முடியாது. இது குறித்த நபரோ அல்லது குழுவோ முழுமையாக விசாரிக்கட்டும். அதுவரை கருத்து வெளியிட முடியாது என அமெரிக்க உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதேவேளை, சரத் பொன்சேகா மீதான அமெரிக்காவின் விசாரணையை இலங்கை அரசு உயர் மட்டம் உட்பட சர்வதேசமே பரபரப்பாக எதிர்பார்த்துக் கொண்டி ருக்கின்றது.

## தமிழ்த்தேசியக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியோருக்கு எதிரான வழக்கிலேயே அவர்களை விடுதலை செய்யும் உத்தரவைக் கொழும்பு பிரதம நீதிவான் நிஸாந்த ஹப்பு ஆராய்ச்சி நேற்று விடுத்தார்.

பொலிஸ் மா அதிபர் தெரிவித்த தகவலின் அடிப்படையில் அரசமைப்பின் 157 (அ) பிரிவு மற்றும் பயங்கரவாதச் சட்டத் தின் 2'பி' பிரிவு ஆகியவற்றின் கீழ் இந்த வழக்கு நடவடிக்கையை குற்றப்புலனாய் வுப் பொலிஸார் ஆரம்பித்திருந்தனர்.

இவ்விடயம் தொடர்பில், இந்த எம்.பிக் களில் வெளிநாட்டில் இருந்த சிவாஜிலிங்கம் எம்.பியைத் தவிர ஏனையோரின் வாக்குமூலங்களைக் குற்றப் புலனாய்வுப் பொலிஸார் பதிவு செய்திருந்தனர்.

சம்பந்தப்பட்ட 'பொங்கு தமிழ்' நிகழ்வு உரைகளைத் தாங்களே நிகழ்த்தியிருந்தனர் என்றும், பதிவில் உள்ளது தங்களது உரைகளே என்றும் ஓடியோ 'கசெட்' மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த உரைகள் தொடர்பில் இந்த மூன்று எம்.பிக்களும் பொலிஸாருக்குத் தாங்கள் அளித்த வாக்குமூலங்களில் தெரிவித்திருந்தனர்.

எனினும், இந்த வழக்கு முன்னைய தவணையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டிருந்தபோது, எம்.பிக்கள் நால்வர் சார்பிலும் ஆஜராகியிருந்த சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி.தவராஜா பின்வரும் வாதங்களை முன்வைத்து வாதாடியிருந்தார்:-

அரசமைப்பின் 157 ஆவது பிரிவின் கீழ் இந்த வழக்கை இங்கு (நீதிவான் நீதிமன்றில்) நடத்த முடியாது. அப்பிரிவின் கீழான வழக்கு தனி நபருக்கு எதிரானதாயின் மேன்முறையீட்டு நீதிமன்றத்திலும், குழுக்கள், கட்சிகள் போன்றவற்றுக்கு எதிரானதாயின் உயர்நீதிமன்றத்திலும் மட்டும்தான் நடத்த முடியும்.

**வெளிநாட்டில் ஆற்றப்பட்ட உரைக்கு தண்டனை வழங்க முடியாது**

அதேசமயம், தண்டனைச் சட்டக்கோவையின் கீழ் வழக்கை நடத்துவதாயின் அக்குற்றம் நாட்டுக்குள் புரியப்பட்டிருக்க வேண்டும். வெளிநாட்டில் இடம்பெற்ற உரை தொடர்பில் தண்டனைச் சட்டக்கோவையின் கீழ் இந்த நீதிமன்றம் தண்டனை வழங்க முடியாது.

சமாதான காலத்தில் இந்த எம்.பிக்கள் ஆற்றிய உரைக்காக இரண்டரை ஆண்டு காலம் கழித்து பொலிஸ் மா அதிபர் முறைப்பாடு செய்தமை வியப்பானது. அச்சமயம் நாட்டுக்குள்ளேயே பல இடங்களிலும் 'பொங்கு தமிழ்' நிகழ்வுகள் இடம்பெற்றன. அவற்றில் உரைநிகழ்த்திய பலர் இன்று அமைச்சர்களாகவும் பிரதி அமைச்சர்களாகவும் இருக்க இந்த நான்கு எம்பிக்களுக்கு எதிராக மட்டும் வழக்கு விசாரணையை ஆரம்பித்திருப்பது பெரும் பாகுபாடாகும்.

மேலும், எமது கட்சிக்காரர்களான எம்.பிக்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிரூபிப்பதற்கு வலிதான நேரடிச் சான்றுகளோ, சூழ்நிலைச் சான்றுகளோ, சாட்சியங்களோ இல்லை. தனியான முறையில் பதிவு செய்யப்பட்டவை என்று கூறப்படும் ஒலிப்பதிவு நாடாவில் மாத்திரம் தங்கி நின்று இக்குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டமையால் அவற்றைத் தள்ளுபடி செய்யக் கோருகிறோம். - இப்படி அவர் கோரியிருந்தார்.

இதனையடுத்து நேற்று குற்றப்புலனாய்வுப் பொலிஸார் தரப்பில் நீதிமன்றில் ஆஜரான அதிகாரி பின்வரும் விடயங்களைத் தெரிவித்தார்:-

இந்த விடயம் குறித்து சட்ட மா அதிபரின் ஆலோசனையைப் பெற்றோம். சந்தேக நபர்கள் மீதான குற்றச்சாட்டுகளை நிரூபிக்கப் போதிய - நேரடியான - வலிதான - ஆதாரங்களோ, சந்தர்ப்ப சூழ்நிலைச் சாட்சியங்களோ இல்லை என சட்டமா அதிபர் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சந்தேக நபர்களின் வாக்குமூலங்களை மட்டும் வைத்து அவர்களுக்கு எதிராகக் குற்றங்களை நிரூபிப்பதற்கு வாய்ப்புகள் குறைவு. - என்றார்.

இதனையடுத்து வழக்கைத் தள்ளுபடி செய்து நான்கு எம்.பிக்களையும் வழக்கிலிருந்து விடுவித்து நீதிவான் உத்தரவிட்டார். (அ-சி)


**அன்பொளி கல்வியகம்**

**யாழ். இந்துக் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.**

**தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2009**

**சித்தியடைந்த மாணவர்களுக்கான**

**பரிசளிப்பு நிகழ்வு**

எமது கல்வியகத்தில் கற்றுச் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு 07.11.2009 சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும். மாணவர்களைத் தவறாது கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இயக்குநர்.**

உ
சிவமயம்
வாழ்க வளமுடன்

**பாவர்தி போக்குவரத்துச் சேவை**



**கொழும்பு - யாழ்ப்பாணம்**
**யாழ்ப்பாணம் - கொழும்பு**
விரைவு பார ஊர்தி
பொதிகள்
போக்குவரத்துச்
சேவை

தொடர்புகளுக்கு:-

**சிவகணேஸ் களஞ்சியம்,**

*இல.163, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*

தொலைபேசி எண் 0777283811, 0771387115

(90566)


## கிறீன் கார்ட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விட்டிருப்பதாக வொய்ஸ் ஒவ் அமெரிக்காவின் புதுடில்லிச் செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் குடிவரவுத் திணைக்கள அதிகாரிகள், சரத்தின் 'கிறீன் கார்ட்' சம்பந்தமான விவரங்களைக் கேட்டறியும் விசாரணை ஒன்றை நடத்துவதற்காகவே இன்று பொன்சேகாவை திணைக்களத்துக்கு அழைத்திருப்பதாக இலங்கைத் தரப்பில் கூறப்பட்டுள்ள தாகவும் 'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா' பிரஸ்தாபித்துள்ளது. (அ)

## சரத் பொன்சேகாவிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரொபட் ஓ பிளளேக்கிடம் கூறியுள்ளார்.

இது குறித்து கவனத்தில் கொள்ளு மாறு எதிர்க்கட்சித் தலைவர் அமெரிக்காவிடம் கேட்டுள்ளார். இதனைத் தவிர பாரிஸ் சென்றுள்ள முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவும் அமெரிக்க இராஜாங்கச் செயலாளரான ஹிலாரி கிளின்ரனிடம் சரத் பொன்சேகாவிடம் விசாரணைகள் நடத்தப்படுமா என்பது குறித்து விசாரித்து அறிந்துள்ளார். (அ-சி)

## 3,627 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கச்சேரி பிரதேச செயலகங்களை சேர்ந்த 1,109 குடும்பங்களைச் சேர்ந்த 3,627 பேர் இரு கட்டங்களாக நேற்று அழைத்து வரப்பட்டனர்.

யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் வைத்து அவர்கள் உறவினர்க ளிடம் ஒப்படைக்கப்பட்டனர். (அ-1)

## ஐக்கிய தேசிய..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிற்கு சவாலாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பின் தலைமைத்துவத்தை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வகிக்க உள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முற்பகல் 11.30 மணிக்கு சுப முகூர்த்தத்தில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது எனக் கூறப்பட்டது. (அ-சி)

## கிளிநொச்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரும் வடமாகாணத்தைச் சேர்ந்தோரை அவர்களது இடங்களில் மீளக்குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் துரிதமாக முன் னெடுக்கப்பட்டு வருகின்றன. அதனால் அந்தப் பொது மக்கள் வசிக்கும் பிரதேசங்களில் கடமையாற்றும் கிராம சேவை உத்தியோகத்தர்கள் உட்பட சகல அரச நிறுவனங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களும் தாம் சேவையாற்ற வேண்டிய அலுவலகங்களுக்கு உடனடியாக கடமைக்குச் சமுகமளிக்குமாறு அறிவுறுத்தும்படி வடமாகாண அமைச்சுக்களின் மேலதிகாரிகளுக்கு ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி நேற்று திருகோணமலையில் வைத்துப் பணிப்புரை விடுத்துள்ளார்.

திருகோணமலை வடமாகாண சபை அலுவலக கட்டடத் தொகுதியில் இடம் பெற்ற வடக்கின் வசந்தம் வேலைத்திட் டத்தின் முன்னேற்றம் குறித்த ஆலோ சனைக் கூட்டத்தில் வைத்து ஆளுநர் இந் தப் பணிப்புரையை விடுத்துள்ளார்.

வடமாகாணத்தைச் சேர்ந்த சகல அமைச்சுக்களது செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் மேற்குறிப்பிட்ட ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத் தின் தலைவரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், நாடாளுமன்ற உறுப்பினரு மான பசில் ராஜபக்ஷவின் ஆலோசனைகளுக்கமைய செயற்பட்டு வடபகுதியின் அபிவிருத்திப்பணியை துரிதமாக முன் னெடுத்து வெற்றியடையவைக்க சகல உத்தியோகத்தர்களும் அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டியுள்ள தென குறிப்பிட்ட ஆளுநர் அதற்கு வேலைத்திட்டத்திற்குப் பொறுப்பான உயர் அதிகாரிகளது ஆதரவும் தொடர்ச்சியாகக் கிடைக்கும் என்றும் தெரிவித் தார்.

மீட்கப்பட்ட சகல பிரதேசங்களிலும் உள்ள சில அரச நிறுவனங்கள் செயற் படாத போதிலும் அப்பிரதேசங்களில் கடமையாற்றிவந்த அரச ஊழியர்கள் சகலருக்கும் அரசு இதுவரை அவர்களது சம்பளத்தை வழங்கி வருகிறதாகவும் குறிப்பிட்ட அப்பிரதேசங்களில் அத்தி யாவசியத் தேவைகளை ஏற்படுத்திக் கொடுத்தே அரசு அப்பிரதேசத்தைச் சேர்ந்த பொது மக்களை மீளக்குடியமர்த்தி வருகிறது. அப் பொதுமக்களுக்கான தமது சேவைகளை முறைப்படி வழங்க அப் பிரதேசத்தில் கடமையாற்றும் அரச ஊழியர்கள் உடனடியாக தத்தமது கடமை நிலையங்களுக்குச் சமுகமளிக்க வேண்டும். அவ்விதம் தமது கடமை நிலையங் களுக்கு சமுகமளிக்கத் தவறுவோர்களுக்கான சம்பளத்தை நிறுத்திவைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஆளுநர் நேற்றைய கூட்டத்தில் தெரிவித்தார். (அ-03)


**ஐடியலின் மகத்தான வெளியீடு**

*மாணவச் செல்வங்களே உங்களுக்காக....*

இன்று முதல்

தரம் 11 மாணவர்களுக்கான ஆண்டிறுதிப் பரீட்சை, வினாத்தாள்கள் பரீட்சை
எதிர்பார்க்கை வினாக்களைக் கொண்டதான மாதிரி வினாத்தாள்கள்

விற்பனையில்

★ கணிதம் ★ விஞ்ஞானம் ★ ஆங்கிலம்
★ வரலாறு ★ தமிழ் ★ சமயம்
★ வர்த்தகம்

கிடைக்குமிடங்கள்!

யாழ்.நகர் பூபாலசிங்கம் புத்தகசாலை,

(87562098)


## இலங்கை அகதிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளித்தொடர்புகள் துண்டிக்கப்பட்டு இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நீரில் மூழ்கிய 40 பேருடன் சென்ற படகிற்குப் பின்னால் இந்தப் படகு சென்றதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும், இந்தத் தகவல் ஊர்ஜிதம் செய்யப்படவில்லை. (அ-சி)

## இன்றும் நாளையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவதான நிலைய யாழ்.அலுவலக அதிகாரி எஸ். புஸ்பநாதன் நேற்றிரவு தெரிவித்தார்.

இதே காலநிலை வடக்கு, கிழக்கில் சகல பகுதிகளிலும் காணப்படும் என்றும் அவர் மேலும் கூறினார்.

தொடர்ந்து மழை பெய்யும் சாத்தியம் உள்ளதாக அவதானிக்கப்பட்ட போதிலும் மூன்றுநாள்களுக்கு ஒரு தடவையே வானிலை நிலை குறித்து அறிவிக்கப்படும் என்று அவர் தெரிவித்தார். (அ-1)

## சரத் பொன்சேகாவை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கறிக்கை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஜெனரல் பொன்சேகா அரசியலுக்கு வந்துவிடுவாரோ என்ற அச்சத்தில் அரசு உள்ளது. அதன் காரணமாக அரசு அவருக்கு எதிராகச் சதி செய்கின்றது.

ஆனால், அவர் அரசியலுக்கு வருவாரா இல்லையா என்று எனக்குத் தெரியாது. இருந்தாலும் இந்நாட்டைப் பயங்கரவாதத்தின் பிடியில் இருந்து மீட்டெடுத்த வீரர் அவர்.

அப்படிப்பட்ட வீரருக்கு நாம் வீர வணக்கத்தைத் தெரிவிக்கின்றோம். அவரை மதிக்கின்றோம். அவரைப் பாதுகாப்பது அரசினது மட்டுமல்ல எதிர்க்கட்சிகளினதும் பொறுப்பாகும்.

ஆனால், அரசு அவரது விடயம் தொடர்பில் மிகத் தவறாகச் செயற்படுகிறது. அவருக்கு அநீதி செய்கிறது. அவரை அவமதிக்கும் வகையில் இராணுவத் தளபதி பதவியில் இருந்து அவரை நீக்கியது. அவரை அமெரிக்காவிலேயே சிறைப்படுத்த இந்த அரசு சதித்திட்டம் தீட்டுகிறது - என்றார் ஜோன் அமரதுங்க.

## கவிழ்ந்த படகில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுதவிர, ஜப்பானிய கப்பலொன்றும் எம்முடன் இணைகின்றது. காணாமற்போயுள்ள 11 பேரை மீட்க முயலுகிறோம். ஞாயிற்றுக்கிழமை சம்பவத்தின் பின்னர் கடலில் காணாமற் போனவர்களைக் காப்பாற்ற முயல்கிறோம்'' என அவர் கூறினார்.

மீட்கப்பட்ட இலங்கையர்கள் தற்போது எல்.என்.ஜி. எரிபொருள் கப்பலில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

கொகோஸ் தீவிற்கு அருகில் கவிழ்ந்த படகு இலங்கையிலிருந்து நேரடியாக புறப்பட்டதாக ஆஸ்திரேலிய தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, இந்தப் படகு கவிழ்ந்ததில் காணாமற் போனவர்களில் இரு இலங்கை சிறுவர்களும் உள்ளனர் எனத் தெரிவித்துள்ள ஆஸ்திரேலியா, அவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என அச்சம் வெளியிட்டுள்ளது.

''படகில் 39 ஆண்கள் இருந்துள்ளனர். இவர்களில் 13, 14 வயது சிறுவர்களும் இருந்துள்ளனர். அவர்கள் காணாமற் போயுள்ளனர்'' என ஆஸ்திரேலிய உள்துறை அமைச்சர் பிரெண்டென் நெல்சன் தெரிவித்துள்ளார்.

''படகு கவிழ்ந்து பலியானவர்களில் ஒருவரின் உடல் மீட்கப்பட்டுள்ளது. இரு உடல்கள் மிதப்பதைக் கண்டுள்ளோம். 11 பேர் காணாமற் போயுள்ளனர். காப்பாற்றப்பட்டவர்களில் 27 பேர் கிறிஸ்மஸ் தீவிற்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளனர்'' என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# மரண அறிவித்தல்கள்

## இராசரத்தினம் மகேஸ்வரி

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் தற்போது கைதடியில் வசித்துவந்தவருமான இராசரத்தினம் மகேஸ்வரி நேற்று (03.11.2009) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசரத்தினத்தின் (இ.போ.ச. பரிசோதகர்) அன்பு மனைவியும் கமலலோஜினிதேவியின் (மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், சாவகச்சேரி) அன்புத் தாயாரும் பிரணவனின் (செலிங்கோ இன்சூரன்ஸ்) அன்பு மாமியாரும் டிவேஸ், கிறுஷ்னிதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் கிருபாகரன் (சுவிஸ்), ராசுகி (திருகோணமலை) ஆகியோரின் சிறியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.11.2009) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 3 மணிக்கு கைதடி ஊரியான் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

கைதடி தெற்கு,
கைதடி. T.P.0212222182

பா.பிரணவன் (மருமகன்).

## திருமதி பத்மசீலன் உருத்திராதேவி
(பவானி)



கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி பத்மசீலன் உருத்திராதேவி நேற்று (03.11.2009) செவ்வாய்க் கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் பத்மசீலனின் (ஓய்வுபெற்ற பொறியியலாளர், வீதி அபிவிருத்தித் திணைக்களம், திருகோணமலை) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்வாரசா - அருந்ததி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் தனபாக்கியம் ஆகியோரின் அன்பு மருமகளும் சிவதர்சினி (சுகாதாரத்திணைக்களம், யாழ்ப்பாணம்), சுதர்சன் (லண்டன்), சஜீவன் (மொறட்டுவப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவராமின் (ஆசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரி) அன்பு மாமியாரும் சூரியகுமாரின் பாசமிகு சகோதரியும் சிவராசமலரின் மைத்துனியும் சிவருக்சனின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.11.2009) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப. 3 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்களுக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

மணியகாரன் லேன்;
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

சு.பத்மசீலன் (கணவர்),
ப.சுதர்சன், ப.சஜீவன் (மகன்மார்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.11.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.